# விவேகி

VIVEKI 1.4.67 40 சதம்




மா வுக்கும் பாப்பா பிறக்கப்போகுது, இல்லையா அம்மா!''

மலர்: 8 இதழ்: 4

கௌரவ ஆசிரியர்:
மு. வி. ஆசீர்வாதம் ஜே. பி

நிர்வாக ஆசிரியர்:
மாட்டீன்

ஆசிரியர்கள்:
செம்பியன் செல்வன்
செங்கை ஆழியான்

# ஈழம், இலக்கியம், இயக்கங்கள்

விவேகி

1-4-67

ஈழத்து வாசகர்களிடையே இலக்கியச் சிந்தனைகளும், அவை பற்றிய சித்தாந்தங்களும் பற்றிய அறிவு அதிகமாகவே உள்ளன. (இதற்குக் காரணம் தரமான வாசகர்களே எழுத்தாளர்களாக இருப்பதாகவும் இருக்கலாம்) ஒவ்வொரு வாசகனும் தான் படிக்கின்ற இலக்கியங்களைப் பற்றியும், அதன் தரம் பற்றியும் தனது சித்தாந்தத்திற்கு ஏற்றவாறு எடை போடுகிறான். ஆகவே சித்தாந்தங்களில் முரண்பாடுகள் தோன்றினாலும், தரமான வாசக பரம்பரை நம் நாட்டில் உருவாகி வருகின்றது என்பதற்கு அறிகுறி இதுவாகும். தரமான வாசகரின் குறுகிய எண்ணிக்கையைக் கொண்டு இப்போது மலைப்புத் தட்டினாலும், நாளடைவில் நிவர்த்தியாக்கப் பட்டுவிடக் கூடிய சிறிய குறைபாட[illegible]தும் இது. ஆகவே—

[illegible]ன்று நாட்டிலுள்ள பத்திரி[illegible] அனைத்தும் தரமான வாசகர்களை உருவாக்கப் பாடுபட வேண்டும். பத்திரிகைகளுக்கு அடுத்ததாக வாசகரை உருவாக்குவதில் இலக்கிய இயக்கங்கள் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

நாட்டின் ஒவ்வொரு துறைகளிலும் ஈடுபட்டிருப்பவர்களும் தத்தமக்கென சங்கங்களை அமைத்து, தமது கடமையையும், உரிமையையும் செயலாற்றி வருகின்றன. அதனால் அந்தந்தத் துறைகள் ஓரளவு வளர்ந்து வருகின்றன. ஆனால்—

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற இயக்கங்கள் மிகவும் ஆபூர்வமாகவும், குறுகியதாகவுமே இருந்தன; இருந்து வருகின்றன. இதனால் அவற்றின் ஆயுட்காலமும் 'அத்திப்பூக்' காலங்களாகவே விளங்கியிருக்கின்றன. இதனையே நம் நாட்டு இலக்கிய இயக்க வரலாறுகள் உணர்த்துகின்றன.

நாட்டில் பல இலக்கிய சங்கங்கள்- தம் சித்தாந்தப் போக்கின் வேறுபாடாலமைந்திருந்தாலும் - தரமான வாசகர்களை உருவாக்கும் பணியில் ஒன்று கூடிப் பாடுபட்டால் ஈழமும், இலக்கியமும், இயக்கங்களாக வளர்ந்து உன்னத நிலையை அடையும் எனஎதிர்பார்க்கலாம.

# கர்ப்பிணிகளுக்கு ஆறு வகுப்புக்கள்

மகப்பேற்று நல நிலையத்தில் பிள்ளைப்பேற்றை எதிர்நோக்கியிருக்கும் மாதர் மனதைப் பக்குவப்படுத்துவது, ஆதாரமற்ற, ஆனால் நீண்டகாலமாக ஊறிப்போன பேறுகால அச்சத்தையும் தவறான எண்ணங்களையும் நீக்கிப் பிள்ளைப் பேறானது உடல் உயிர்க்கூற்று இயற்கை நியதியைச் சேர்ந்த ஒரு நிகழ்ச்சி என்பதையும், அக்காலத்தில் வலி இருக்க வேண்டிய தேவையே இல்லை என்பதையும் உணர்த்தி, கர்ப்பிணியைப் பிள்ளைப் பேற்றிற்குத் தகுதியுள்ளவளாக ஆக்கும் நோக்கத்தையுடையது. சோவியத் ருஷியாவில் மாதர்களுக்குப் பேறுகாலக்கருவேதனையின் அடிப்படைக் காரணங்களை விளக்கி, பேறுகாலப் பல நிலைகளிலும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதனைச் சொல்லி, கடும் வேதனைக் காலங்களில் வலி குறைப்பிற்காக எவ்வெவ் விதமான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனையும் அறிவுறுத்துகிறார்கள்.

கருவுற்ற மாதர்களுக்கு ஆறு வகுப்புகள் இங்கு நடாத்தப்படுகின்றன. அவை:

முதலாவது வகுப்பானது கருவுற்ற மங்கையை மருத்துவர் தேர்வு முறைப்படி நுணுகி ஆய்ந்து பார்ப்பதற்கென்றே ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நடாத்தப்படுகின்றது. அந்தவகுப்பில் எதிர்பார்க்கப்படும் மகப்பேற்றைப் பற்றி எவ்விதமான மனப்பான்மையை அம் மங்கை கொண்டிருக்கிறாள் என்பது ஆய்ந்து தெளியப்படுகிறது. பிள்ளைப் பேறு பொறுக்கமுடியாத ஒரு வேதனை என்ற கருத்து நெடுங்காலமாக மங்கையின் உள்ளத்தில் சிறிது சிறிதாகப் புகட்டப்பட்டுள்ளது. ந்த ஆதாரமற்ற அச்சம் இவ்வகுப்பில் அகற்றப்படுகின்றது. பிள்ளைப் பேறு உடலுயிர் கூற்று நியதியைச் சேர்ந்த ஒரு நிகழ்ச்சி என்ற உண்மையை மங்கைக்கு எடுத்துக்கூறி, உணர்த்தி, நம்பும்படி செய்யப்படுகின்றது.

இரண்டாம் வகுப்பு பேறு நோக்கி இருக்கும் 5,6 தாய்மார்களை வைத்து நடாத்தப்படுகின்றது. பிள்ளைப் பேறு இயற்கையின் ஓர் நிகழ்ச்சி என்று எளிதாக விளங்கும் முறையில் எடுத்தியம்பி, விளக்கி, அதுநோவுள்ளதாகத்தான் இருக்கும் என்ற ஆதாரமற்ற மனப்பான்மையை அழித்து, மங்கையைப் பக்குவப்படுத்துவதற்கு இந்த வகுப்புப் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றுவது நான்காவது வகுப்புக்கள் பேறு காலத்து முதல் நிலையைப்பற்றி விளக்கிச் சொல்லப் பயன்படுகின்றது. அதாவது கருவுயிர்க்கும் மங்கை பெறும் உணர்ச்சிகளைப்

இடுப்பு வலி கடுமையாக இருக்கும் காலத்தில் எவ்வாறு மூச்சை விட்டு வாங்கி வேதனைத் தடுப்பு முறைகளைக் கையாள்வது என்பனபற்றிச் சொல்லிக் கொடுக்கப்படும்.


ஐந்தாவது வகுப்பானது பேறு காலத்தின் இரண்டாம் நிலையைப்பற்றி விளக்கிச் சொல்லவும், இந்த நிலையில் கருவுயிர்க்கும் மங்கை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி விபரித்துச் சொல்லவும் பயன்படுகிறது.

ஆறாவது வகுப்பு எல்லா விதமான முன்னேற்பாடுகளையும் விளக்கி முடிக்கின்றது. தாய்மை என்பது ஒரு பெண் தன் நாட்டிற்கும், மக்களினத்திற்கும் ஆற்றும் மாண்புள்ள கடமையின் பாற்படும் என்று எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்த வகுப்பில் மகப்பேறில்லத்திற் சேருவது சம்பந்தமான நடைமுறைகள் பற்றியும் கைகளாலும் கருவிகளாலும் ஆற்றப்படக் கூடிய உதவி முறைகள்பற்றியும் அறிமுகப் படுத்தப்படுகின்றது.

இவ்வாறாகச் சூல் கொண்ட மங்கையானவள் தன்பேறுகாலத்தைப் பற்றி அமைதியான மனநிலையைப் படிப்படியாக அடைகிறாள். அதனோடு பேறு காலத்தில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், வலி தடுக்கும் முறைகளை எவ்வாறு செய்து கொள்ள வேண்டும் என்பதையும் பற்றி அறிவுறுத்தப் [illegible]றாள்.

[illegible]தாரம் Obstetrics and Gynecology)

— ஏ. கப்ளான்



## சிரிப்பதற்கு!

★ இன்பத்தின் ஒரு கதவு மூடும்போது, மற்றொன்று திறக்கிறது; ஆனால், மூடிய கதவையே உற்று நோக்குவதில் நமக்காகத் திறந்திருக்கும் கதவை நாம் கவனிப்பதேயில்லை. உண்மையாகவே இருளின் இதயத்தை நான் பார்த்திருக்கின்றேன். எனினும், ஸ்தம்பிக்கச் செய்யும் அதன் சக்திக்கு அடிபணிந்ததில்லை. ஆனால் காலைக் கதிரொளியில் என உயிர் உலாவுகிறது. இலையுதிர் காலத்தில் உலர்ந்துவிழும் சருகுகளைப் போல் இருண்ட— நம்பிக்கையற்ற எண்ணங்கள் என்பாதையில் எதிர்ப்பட்டால்தானென்ன? எனக்கு முன்னரே அவ்வழியே நடந்து சென்றோர் எண்ணற்றோர். பாலைவனம்கூட புத்துணர்வூட்டும் பொன்வயல்கள்-பழமுதிர் சோலைகள் இவற்றைப் போலவே இறைவன் இருக்குமிடம் நோக்கியே நம்மைக்கொண்டுசெல்கிறது. சிருஷ்டியின் அண்டத்திற்கு முன்னே நான் ஓர் அற்பம். இதைக் கருதுங்கால் என் கர்வம் அடியோடு கவிழ்கிறது. 'கற்றது கைமண் அளவானால், கல்லாதது உலகளவு' என்பதையும் நான் உணர்கின்றேன். பஞ்சேந்திரியங்களின் சுகானுபவங்களை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகப் புரிந்து கொள்கின்றேனோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் பாதகங்களையும் புரிந்து கொள்கின்றேன். வாழ்வின் அடிப்படையாக விளங்க அந்த இந்திரிய உணர்ச்சிமட்டும் போதாது என்பதும் எனக்குப் புரியாமலில்லை.

—ஹெலன் கெல்லர்

தொகுத்தவர்: சசிகலா

★ ஒரு கோவில் வாசலில் மூன்று மனிதர்கள் அமர்ந்திருந்தார்கள். அவ்வழியே வந்த வழிப்போக்கன் ஒருவன் கும்பிட்டு விட்டுப் போனான். மூவரில் ஒருவன் கூறினான்: "பார்த்தாயா, அவன் என்னை வணங்கிவிட்டுப்போவதை!"

"உன்னையா... என்னையல்லவா கும்பிட்டுவிட்டுப் போகின்றான்!"

மூன்றாமாள் சிரித்தான்; "போங்கடா, முட்டாள்களே, அவன் கும்பிட்டது என்னை!"

தகவல்: யேக்கப்


# சிதறிய பூக்கள்

# துணை மேற்றிராணியாராகும்

# அதி வண. தியோகுப்பிள்ளை அடிகள்

(B. A (Lon.), Ph. L., D. D (Rome), B. C. L., Dip. iu. Ed. (Cey.)

அதிவண. வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை அடிகளார் ஈழ நாட்டின் தலை சிறந்த கல்விமானும் நாவலரும் எழுத்தாளரும் நூலாசிரியரும் பத்திரிகாசிரியருமாய் யாழ்ப்பாணக் கத்தோலிக்கு திருச்சபையின் கண்ணியம் வாய்ந்த குரு திலகமுமாய் விளங்குகிறார். அடிகளார் பழமையில் புதுமை படைக்கும் பெரிய சீர்திருத்தவாதி. தமது கொள்கையில் நிதானமும் வைராக்கியமும் கொண்டவராயினும் மன்னுயிர்மேல் அன்பும் அனுதாபமும் அமைதியும் பூண்டபண்பாளர். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளம்படைத்தவர். பசுவையும் புலியையும் ஒரே இடத்தில் ஒன்றித்து வாழச் செய்யும் மந்திர சக்தியுடன் கூடிய உலகியல் ஞானம் உள்ளவர். தாம் மேற்கொள்ளும் எந்த முயற்சியிலும் தளராது சூழ்நிலைக்கேற்றவகையில் அமைத்து வெற்றி காணும் ஆற்றல் வாய்ந்தவர். உயர்ந்த, நிமிர்ந்த, வசீகர புருஷத்[illegible]ம் படைத்த பொன்னிற [illegible]ர்.



கடந்த இருபத்திரண்டுவருடகாலமாக யாழ்ப்பாணத் திருச்சபை உத்தியானத்தில் முதன்மை வாய்ந்த குருவாய்ப் பலதுறைகளிலும் பாடுபட்டு உழைத்து வந்ததை உள்ளூர உணர்ந்த வத்திக்கானின் பரிசுத்தஸ்தானம் திருகோணமலை-மட்டக்களப்பு துணை மேற்றிராணியாராகத் தியோகுப்பிள்ளை அடிகளாரைத் தேர்ந்தெடுத்துள்ளது. அடிகள் 1953- ஆண்டிலிருந்து மூன்று வருடங்களாக இளவாலை அர்ச். என்றியரசர் கல்லூரி அதிபராகவும் 1963-ம் வருடத்திலிருந்து இற்றைவரை நான்கு வருடங்களாக இளவாலை சந்தானுள்நாயகி ஆலயப் பங்குக்குரவராகவும் அப்பிரிவுக்குரு சிரேஷ்டராகவும் பணியாற்றியுள்ளார். அன்றியும் 1966 மார்கழி மாதம் 22-ந் திகதி இளவாலை மக்களாலே குருத்துவாபிஷேக 25-ம் வருடவெள்ளி யூபிலி விழாவும் கொண்டாடப்பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். தமது 50-ம் வயதில் பூரணகுருவாகும் பாக்கியம் பெறுகிறார்.

வந். இக்னேஷியஸ் கிளெனி S.J ஆண்டகைக்குத் தகுதிவாய்ந்த துணைவராக நியமிக்கப்பட்டுள்ள வந். தியோகுப்பிள்ளை ஆண்டகை தமது ஆளுகையின் குறிக்கோளாக கிறிஸ்துவின் அளவறுக்கப்படாத திருச் செல்வங்களைச் சுவிசேஷமாய்ப் பிரசங்கிக்க,' (இன்· எபே. 3 : 8) என்பதை ஏற்றுள்ளது 2-ம் வத்திக்கான் திருச் சங்கத்தின் உள்ளத் துடிப்பை உணர்ந்து கருமமாற்றக் கருத்துக் கொண்டுள்ளார் என்பதை நன்கு புலப்படுத்துகின்றது. வருகிற வைகாசித் திங்கள் 11-ம் நாள் பண்டைப் பெருமை பூண்ட நகரமாகிய திருகோணமலை நகரின் மத்தியில் சஞ்சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பெறும் அலங்கார மண்டபத்தில் வந். இக்னேஷியஸ் மேற்றிராணியார் திருக்கரத்தால் ஆடம்பரமாக அபிஷேகிக்கப்படவிருக்கும் செய்தி தமிழ் மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சியூட்டுவதொன்றாகும்.

குருத்துவத்தின் பூரண பட்டத்துக்கு உயர்த்தப்பட்ட புதிய ஆண்டகை கடலும் கானும் கொஞ்சிக் குலாவும் எழில் மிக்க கரம்பொன்னைத் தாயகமாகக் கொண்ட திரு மரியாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை திருமதி இக்னேசியாப்பிள்ளை தம்பதிகளின் கடைசிப் புதல்வனாக 1917-ம் ஆண்டு பங்குனித் திங்கள் 9-ம் நாள் உதித்தார். இவரது மூன்று சகோதரிகளுள் ஒருவர் யாழ்ப்பாணத்திருக்குடும்பக் கன்னியர் சபைக்கு அணிகலனாக விளங்கும் சங். சகோ. எமிலியாவர். அடிகளாரின் மூத்த சகோதரர் திரு. மரியாம்பிள்ளையின் புதல்விகளாக சங். சகோ. யேம்ஸ் மட்டக்களப்பு கார்மேல் சபையில் தொண்டாற்ற சங். சகோ. அஞ்சலீனா யாழ்ப்பாணத் திருக்குடும்பக் கன்னியர் சபையில் திருவூழியம் செய்வதை அறியும்போது அடிகளாரின் சந்ததியினர் தேவ ஊழியத்துக்கு உயர்த்தப்பட்டதைப் பாராட்டக் கூடியதாக அமைகிறது.

அதி. வண. தியோகுப்பிள்ளை அடிகளார் தமது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை ஆரம்ப பாடசாலையில் படித்த பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் மேல் வகுப்புக் கல்வியைப் பெற்றார் 'யூனியர் கேம்பிறிஜில்' விசேஷ உயர்சித்தியும், 'மற்றிக் குலேஷன், வகுப்பில் ஒரே முறையில் எட்டுப் பாடங்களிலும் பரிசுகள் ஈட்டியதும், கல்விக் காலத்தில் வகுப்புப் பரீட்சைகள் எல்லாவற்றிலும் முதற் பிள்ளையாகத் தெரியப்பட்டதும், இளமை தொட்டே விவேகமும், ஆர்வமும் படைத்தவராக வாழ்ந்து வந்ததைப் புலப்படுத்துகின்றன. 1933-ல் கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரியில் 'இன்ரர்' வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது வேத சாஸ்திரக் கல்விகற்க உரோமாபுரி வேதப் பரப்புதற் சபைக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டார். அங்கே மூன்று வருடத்தால் த [illegible] து [illegible]

சாஸ்திரப் பட்டமும் அடுத்த ஐந்து வருடத்தால் வேத சாத்திரப் பட்டமும், ஒரு வருடத்தால் 'தேவதிரவிய அனுமானங்களுக்கும் திருப்பாடுகளுக்கும் உள்ள தொடர்புபற்றிய ஆராய்ச்சிநூல் யாத்து சட்ட சாத்திரப் பட்டமும் பெற்றூர். 1941-ம் ஆண்டு மார்கழி 22-ம் திகதி உரோமாபுரியிலே குருவாக அபிஷேகிககப் பெற்ருர். பக்தி, புத்தி, சக்தி படைத்த உத்தம குருவாஞர்.

அடிகளார் உரோமாபுரியில் தங்கிய காலத்தில் முறையே 11-ம் பத்திநாதர், 12-ம் பத்திநாதர் பரிசுத்த தந்தைமாரை நேரில் கண்டு களிக்கும் பாக்கியமும் பெற்றூர். வேத சாஸ்திரக் கல்லூரியில் இவருடன் உடன் மாணவர்களாகவும், இவர் உள்ளிட்டு மேற்படி கல்லூரியின் தலை மாணவர்களாகவும் நியமிக்கப்பட்ட நான்கு பேரும் இன்று மேற்றிராணிமாராக உயர்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விசேஷ செய்தியென்னலாம்.

பரிசுத்தபாப்புவின் இந்தியா இலங்கைத் திருச்சபைப் பிரதிநிதியாய் விளங்கி இந்திய தலைநகரில் தங்கியிருக்கும் அதிமேற்றாணியார் மகா. வந். நொஸ்க், சிட்னிமேற்றிராணியாரின் துணை மேற்றிராணியாராகத் தொண்டாற்றும் வந். தோமாஸ்முல்டுனே, பம்பாயில் கார்டினல் கிறேஷியஸ் ஆண்டவரின் துணை மேற்றிராணியாராகும். வந். உவில்லிய கோமஸ் என்போரே அம் மூவராவர்.

தீயோகுப்பிள்ளை அடிகளார் 1945 ஆண்டு ஈழநாடு மீண்டு ஞான்று முதல் யாழ்ப்பாண மேற்றிராசனக்கோவில் வண. பிதா ஹில்லறி அடிகளாரின் துணைக் கட்டளைக் குருவாகப் பணியேற்றூர். அடுத்த வருடம் அனுராதபுரி சஞ்சூசையப்பர் கல்லூரி அதிபராக நியமிக்கப்பெற்றூர். 1950 ல் இலண்டன் B. A. பட்டதாரியாகி 1951-ல் கரவெட்டி திரு இருதயநாதர் கல்லூரிக்கு அதிபராஞர். 1952-ல் இலங்கைப்பல்கலைக்கழக 'கல்விப்பயிற்சி டிப்ளோமா' பட்டம்பெற்றூர். 1953-ல் இளவாலைக் கல்லூரிக்கு அதிபராகப் பதவி ஏற்றுப் பணியாற்றலானூர். 1956-இல் கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி அதிபராகித் தொண்டாற்றும் வேளை அரசாங்கம்பாடசாலைகளையெல்லாம் சுவீகரித்ததினுல் அரசாங்கத்தின்கீழ் தொண்டாற்றவிரும்பாதவராய் 15வருட ஆசிரியத் தொண்டிலிருந்து 1962-ல் இளைப்பாறிக்கொண்டார். ஆனுல் அவர்படைத்த ஆசிரியர்கள்

## அடுத்த இதழில் —

**சிறுகதை —**

சு. இராசநாயகம்
அ. கதிர்காமநாதன்
கே. எஸ். ஆனந்தன்

**கவிதை —**

வே. ஐயாத்துரை
'ஜெயம்'
அண்ணல்
சு. வே. பஞ்சாட்சரம்

திருகோணமலைக்கு

புதிய துணை ஆயராக நியமனம் பெற்றிருக்கும்

# மகா வந். கி. தீயோகுப்பிள்ளை

ஆண்டகை அவர்களுக்கு

விவேகி சார்பில்

எமது வாழ்த்துகள் உரியதாகுக

நாடெங்கும் நற்பணி புரிந்து வருகிறார்கள். இவர் கற்பித்து உருவாக்கிய குருக்களும் சிறந்த தொண்டர்களாக உழைத்து வருகின்றனர். அடிகளார் ஆசிரிய பயிற்சிச்சாலை அதிபராக இருக்கும் அதேவேளை சத்தியவேத பாதுகாவலன் வாரப்பத்திரிகையின் பத்திராதிபராகவிருந்து பத்திரிகையைச் சிறந்த நிலைக்கு உயர்த்திஞர். அத்துடன் 'திருத்தொண்டன்' என்னும் மாதச் சஞ்சிகையையும் நவமாகத் தொடக்கி வளர்த்து வந்தார். மேற்றிராசனப் பாடசாலைகளில் வேதபாட நூல்களாகப் பாவனையில் உள்ள கிறிஸ்தவபோதகம் என்னும் நூலின் மூன்று கண்டங்களினதும், பாலர் குறிப்பிடங்களினதும் நூலாசிரியரும் இவரே. அடிகளார் பசிநோக்காது கண்துஞ்சாது கருமமே கண்ணாயிருந்து 25 வருடமாகக் கிறிஸ்துவின் திருச்சபையில் அயராது உழைத்த பெருமைக்குப் பரிசாக மேற்றிராணித்துவ பட்டமும் அளிக்கப்பெறுவதைக் காணும் கிறிஸ்தவ உலகம் குறிப்பாகத் தமிழ் மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்து அபிஷேக ஆடம்பர வைபவத்தை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். புதி[illegible] ஆண்டகையை நல்ல தேவ[illegible] வதிப்பாராக.

# ஒன்றே ஒன்று!

## சாம்பார் புராணம்

ஏதைச் செய்தாலும் சாம்பார் செய்வதே எனது வேலை; இல்லைக் கலைஎன்றே கூற வேண்டும். எனது உடம்பில் ரத்தத்திற்குப் பதிலாக சாம்பார்தான் ஓடுகின்றது என்றாலும் பொருந்தும். நான் பெற்ற சாம்பார் (அதாவது இன்பம்) பெறுக இவ்வையகம் என்ற கொள்கையுடையவன் நான். அவை வருமாறு:

(அ) பரீட்சை எடுக்கப்போனால் கேள்வியைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். வாயில் வந்தது, நினைவில் வந்தது, கையில்வந்தது எல்லாவற்றையும் தயங்காது எழுதி ஒரு சாம்பார் செய்யுங்கள். ஐயர் கடைத் தோசைக்குச் சாம்பார் ஊற்றுவதுபோலத் தாராளமாக அச் சாம்பார் விடைக்கும் புள்ளிகள் விழும், திருத்துபவர் மணிசியுடன் கோபமில்லாது இருந்தால்.

(ஆ) ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு கொப்பிவைத்திருப்பது நல்ல மாணவர்களின் செயலல்ல ஒரு கொப்பியில் முதல் பக்கத்தில் கணக்கு. மூன்றாம்பக்கத்தில் ஆங்கிலம், ஐந்தாவதில் குடியியல் என மாறி மாறிச் சாம்பார் எழுதலாம். ஆசிரியர் பார்க்காது இருக்கும் வரை நிச்சயமாக உங்களுக்கு எதுவுமே நிகழாது.

(இ) இந்தச் சாம்பார் இருக்கிறதே, அது சர்வ வல்லமை பொருந்தியது. வீட்டிற்குவந்த விருந்தாளி கிளம்புவதற்கு வழியைக் காணோமா? அச்சம் வேண்டாம். அற்புதமான சாம்பார் ஒன்று செய்யுங்கள். (செய்யும் முறையை இரகசியமாக அறியத் தருகிறேனே?) அச்சாம்பாரில் குளித்தெழுந்து, விருந்தாளி அடுத்தகணமே சொல்லாமற் கொள்ளாமல் (கொல்லாமல் அல்ல) ஓடிவிடுவார்.

(ஈ) சாம்பார் சாப்பிட்டு வயிற்றுக் கோளாறினால் நேரே தர்மாஸ்பத்திரிக்குப் போங்கள் நோயைக் கேட்காமலே டாக்குத்தர் மருந்து எழுதுவார். மருந்துச்சீட்டைப் பார்க்காமலேயே மருந்துகலப்பவர் மருந்து தருவார். மிக்சர்... பவுடர்... குளிசை...எல்லாமிருக்கும் ஒரே சாம்பாராக்கி விழுங்குங்[illegible]. பி[illegible]ழைத்தால் பிறகு சந்திப்போம்.

[illegible]டர் மகேந்திரனின் கட்டுரையிலிருந்து
எழுதியது 'சாம்பார்' தாசன்

## நகைச்சுவையின் எழுத்து வன்மை

நகைச்சுவை எழுத்தாளர், 'பெர்னாட்ஷா' வைப் பற்றி அறியாதவர்கள் எவருமிலர். 94 வயது வரை வாழ்ந்த அவரை. அவரின் எழுத்து வன்மை பெரும் செல்வந்த நிலைக்கு ஆளாக்கியது என்றால் அதில் வியப்பு இருக்கத்தானே செய்யும். ஆமாம்! அவர் இறக்கும்பொழுது, அவருடைய சொத்தின் பெறுமதி 3,50,000 பவுண்கள். இவ்வளவும் அவரின் எழுத்து வன்மையால் கிடைத்ததுதான்.

## கழுதையின் சேவை


கழுதையை மூடமிருகம், என்று கூறுகிறோம். ஆனால் கழுதையின்றி, மத்திய ஆசியாவில் அன்றாட கருமங்களைச் செய்வது கடினம். மலையில் மேயச் சென்ற மந்தைகளை வீட்டுக்கு விரட்டிக் கொண்டுவரக் கழுதையிற் சவாரி செய்ய வேண்டும். நகரத்துச் சந்தைக்குச் செல்லவும் கழுதை தேவை...... சில சமயம் கழுதையின் கால்களைத் தவிர வேறொன்றையும் காண முடியாது. அவ்வளவு பொதிகள் சுமத்தப படுகின்றன. இது கடுமையான வேலைகளைச் செய்தாலும், அதனைப் போற்றுவார் கிடையாது.

(தகவல்: அ. கனகசூரியர்)

இவர்தான் ☞

**இவர் ஒரு நிறை குடம்; அதே நோக்கில் ஈழத்தைப் பொறுத்தமட்டில் குடத்துள் விளக்கு அவர் செயலாக்கம் குறித்து—**

# அயராது ஆராயும் திரு. ந. சி. க.



ஈழத்தில் மட்டுமல்லாது தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் சிறந்த நூலாசிரியராகப் பெயர் பெற்று விளங்குபவர் திரு. ந. சி. க. அவர்கள். இப்பொழுது 'அயல் நாடுகளிற் சைவம்' பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும் திரு. ந. சி. க. அவர்கள் இதுவரை எழுபத்தேழு நூல்களை ஆக்கியுள்ளார்கள். இந் நூல்கள் அனைத்தும் தமிழ் நாட்டில் வெளியிடப் பட்டன. தமிழ் நாட்டுப் பதிப்பகங்கள் அவரது நூல்களை வெளியிடுவதிற் பெருமை கொள்கின்றன. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ஒற்றுமை நிலையம் யுபிட்டர் பப்ளிசிங் ஹவுஸ், முத்தமிழ் நிலையம் பகுத்தறிவுப் பாசறை, ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், பாரிநிலையம் முதலிய பதிப்பகங்கள் போட்டிபோட்டு அன்னாரின் நூல்களை வெளியிட்டுள்ளன. அவரது நூல்களுள் தமிழகம், பத்துப்பாட்டு வசனம், தமிழர் சரித்திரம், அறிவுரைக்கொத்து, மறைந்த நாகரிகங்கள், அறிவுரைமாலை ஆகியன தமிழ்நாட்டில் வித்துவான் புகுமுக வகுப்புகளுககும், பீ. ஏ. புகுமுகவகுப்புகளுக்கும் பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன. கலிங்கத்துப் பரணி வசனம், அறிவுரை மாலை, பத்துப் பாட்டுவசனம், அறிவுரைக் கொத்து தமிழர் சரித்திரம், தமிழகம் முதலிய நூல்கள் ஈழநாட்டிலும் எஸ். எஸ். சி. ஜே. எஸ். சி. வகுப்புக்களுக்குப் பாட நூல்களாக முன்பு இருந்தன.

திரு. ந. சி. க. அவர்கள் ஒரு நிறைகுடம். வீண் பிரச்சனைகளிலும் வேண்டாத சச்சரவுகளிலும் ஈடுபடாது தானுண்டு தன் நோக்கமுண்டு என்றிருப்பார்.



அயராது ஆராய்வது அவர் நோக்கம். உறுதியுடன் எழுதுவது அவர் வேலை. இப்பொழுதும் தமிழைக் கற்றுக்கொண்டேயிருக்கும் ஒரு பெருந் தமிழ் மாணவன் அவர். தமிழர் யார், திராவிட மொழிகளும் இந்தியும், தமிழர் சமயமெது, உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு, இராமாய[illegible] நடந்த கதையா, வரலாற்றுக்கு முந்திய பழந்தமிழர். சைவ சமய வரலாறு முதலியன அவரது ஆராய்ச்சியின் ஆழத்தைக் காட்டுவனவாகும். இவர் தொகுத்துள்ள அகராதிகள் பல. அவற்றுள் திருக்குறள் அகராதி ஆராய்ச்சியாளர்கட்குப் பெருந் துணை செய்யுமென்று பாலூர் கண்ணப்ப முதலியார் தமது 'தமிழ் நூல் வரலாறு' என்னும் நூலிற் கூறியுள்ளார்.

சிந்துவெளி நாகரிக காலம் கி. மு. 5000 வரையில் எனக் கொள்ளப்படுகின்றது. இதனால் தமிழ்மொழியும் தமிழ் எழுத்தும் ஏழாயிரம் ஆண்டுகளின் முன்னரேயே, திருந்திய நிலையை அடைந்திருந்தன எனக் கூறுதல் மிகையாகாது என்று தமிழின் தொன்மையைப் பல நூல்களில் அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தியிருக்கின்றார். சைவத்தின் பெருமையை நிலைநாட்டி வருபவர்கள் வரிசையில் திரு. ந. சி. க. அவர்களுக்குத் தனியான ஓர் இடமுண்டு. சிவன், நமது சமயம், தமிழர் சமயமெது, தமிழ்க் கடவுளுக்கு ஆரியப்பாலா? சைவ சமய வரலாறு, இந்து சமய வரலாறு முதலிய நூல்களில் சைவத்தின் பழமையையும், பெருமையையும் ஆராய்ந்து விளக்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறு சைவத்திற்கும் தமிழிற்கும் அரிய தொண்டாற்றி வரும் திரு ந. சி. க. அவர்களின் முயற்சிகள் மேலும் தொடர்ந்து வளர்வதாக.

- வி. கந்தவனம்



# காந்தி வாக்கு

◉ பெரியவர்களிடம் இருக்கும்குறைகளைக்காண்பதில் குருடனாகவே இருந்துவிடுவது என் சுபாவம்.

பெரியவர்களின் கட்டளைகளை நிறைவேற்றிவிட்டு, அவர்களுடைய செய்கைகளைக் கவனிக்காமல் இருந்துவிட நான் கற்றுக் கொண்டேன். ◉

◉ ஆசைகளைத் துறக்காமல், ஆசைக்குரிய பொருட்களைத் துறப்பதென்பது, நீ எவ்வளவு முயன்றாலும் அற்பாயுசில் முடிந்துவிடக் கூடியதே.

எனக்குப் பிடிக்காதவற்றை மறந்துவிடுவதும் பிடித்தமானவற்றை அனுபவத்தில் நிறைவேற்றி வருவதும் என்னிடம் இருந்த பழக்கமாகும். ◉

◉ மனைவியிடம் வாழ்நாள்முழுவதும் விசுவாசத்துடன் இருந்துவரவேண்டியது ஒரு கணவனின் கடமை.

பாடத்திட்டத்தில் மனப்பயிற்சிக்குஎவ்வளவு இடம்அளிக்கப்படுகின்றதோ, அவ்வளவு உடற்பயிற்சிக்கும் அளிக்கப்பட வேண்டும். ◉

◉ ஆன்ஒருமைப்பாடே உண்மையான நட்பு.

தமக்கு இல்லாத திறமையைப் பிறரிடம் காணும்போது யாரும் பிரமித்துவிடுவது இயல்பு. ◉

◉ மனைவி, கணவனின் வாழ்க்கைத் துணைவியும் தோழியுமே அன்றி அவனுக்கு அவள் அடிமையல்லள்

மன்னிப்பு அளிப்பதற்கு உரிமை உள்ளவரிடம் குற்றத்தை ஒழியாது ஒப்புக்கொண்டுவிடுவதோடு, இனி அத்தகைய பாவத்தைச் செய்வதில்லை என்றும் உறுதிமொழி கூறுவதே செய்த குற்றத்திற்குச் சரியான வகையில் வருத்தப்படுவதாகும். ◉

◉ ஒழுக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை; சத்தியமே ஒழுக்கமெல்லாவற்றின் சாரமும்.

ஏய்ப்பவனே முடிவில் ஏமாற்றப்படுகின்
தெ

# நீர்க்குமிழி

மருதூர்வாணன்

O அப்துல்காதரின் நிலை பரிதாபத்திற்குரியதுதான். நினைத்த படி நடவாதுபோகும் போது ஏக்கம் அதிகந்தான்.



இரவு ஏழு மணி.

'ம்மா,.' அப்துல்காதர் அன்புடன் வளர்தத பசு, மாட்டுத் தொழுவத்தில் பிரசவ வேதனை தாங்கமுடியாமல் கதறி அழும் சோககீதம் காதுகளில் விழுந்து குடைந்தது.

'அல்லா, என் பசுவை நீ தான் காப்பாத்து? என்லட்சியமான; ஆண் குட்டியை ஈண வெய்' அப்துல் காதரின் இதயத்திலிருந்து மெல்லிய முணுமுணுப்பாக அசைபோட்டது அவன் உதடுகள்.

பட்டாசு வெடிச் சப்தத்துடன் பெண்களின் சிம்மக் குரவைகளும் மண்டைகிழிய வைக்கும்படி; சாரைசாரையாக ஆண்களும் பெண்களுமாக, அப்துல் ா தரின் தெருப்படலையினால் ாடி டை நோக்கி வந்து ருப்பதை அவதானிக்க காதர்.

என்றுமில்லாத பரபரப்பு அந்தமாடிவீட்டில். அப்துல் காதருக்கோ மன வேதனை.

நெய்யினில் வெந்த அரிசிமாவினால் செய்யப்பட்ட பலகாரங்களை, ஒரு ஓலைப் பெட்டியில் அடுக்கி வெள்ளைச் சீலையினால் வரிந்துகட்டிக்கொண்டு, அப்துல் காதர் வாத்தியாரைக் கல்யாணம் பேசி வந்திருக்கும் பெண்

உன்னைத்தான்



மனைவி : ஏன் கவலையாக இருக்கிறீங்க. யாரையாவது நினைத்துக்கொண்டீர்களா?

கணவன் : யாரையாவது நினைத்தால் ஏன் கவலைப்படுகிறேன்? உன்னைத்தான் நினைத்துக்கொண்டேன்.

---

வீட்டார்கள் யாரென்பது அவனுக்குத் தெரியும்.

சாலிகு லெப்பைப் போடியாரின், மாடி வீட்டில் என்றுமில்லாத வெடிலும் குரவையும் சேர்ந்து கலகலப்பென்றால் அயல் வீட்டாருக்கெல்லாம் எரிச்சலைக் கிழப்பும் அரிச்சானியம்.

மாடிவீட்டின் முற்றத்தில் மாட்டுத் தொழுவத்தின் அருகாமையில் ஜனித்திருக்கின்றது காதரின் காரியாலயம். கல்லூரிப் பாடத்தின் அட்டவணைகளை நேரக்குறிப்பில் முக்கிய விடயங்களைக்குறித்துக்கொண்டிருந்தான் காதர்.

தனக்குக் கல்யாணம் பேசி வந்திருக்கும் பெண் வீட்டாரையோ, தன் தாய் தந்தையர்கள் ஆதனம், சீதனம், கைக்கூலிகள் கேட்டரித்துக் கொண்டிருக்கும், ஆஸ்திக வாதங்களையோ, பேராசைத் தனங்களையோ செவி சாய்க்காது தன் வேலையிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்தான் அப்துல்காதர்.

"தம்பி, வாத்தியார்? உங்களுக்குக் கலியாணம் பேசிப் பொண் ஊட்டாக்கள் வந்திரிக்கென்ன, கன நேரமாக நீங்க, இஞ்சே தனியவே இரிந்தென்ன செய்யிறயள் தம்பி?" மொட்டைத் தலையைச் சொறிந்து அசடு வழிந்தவராக உள்ளே வருகிறார் கல்யாணத் தரகர்.

மெல்லத் தலை நிமிர்ந்து பார்க்கிறான்.

"ஓ.. காசிங் காக்காவோ..?" தரகரை உபசரித்து உட்காரச் சொல்ல மனமில்லாமல் தன் வேலையிலேயே கண்ணுயிருந்தான் காதர்.

எரிச்சலாக இருந்தது தரகருக்கு.

"என்ன தம்பி ஓங்கட போக்கொண்டும் விளங்குதில்லேய்? மூவாயிரம் நாலாயிரம் ரூவாக் கைக்கூலி, கல்லூடு வளவு, தோட்டந்தொரவெல்லாம் உள்ளடத்தேக் கலியாணம் பேசி வரச் சொன்னயளே? சகலதும் தாறனென்ட மம்முக்காசின் போடியார்ர நல்ல சம்மந்தந் தானே?"

"காசிங்காக்கா, நீங்க சொல்லுறது செரிதான் நல்ல ... தான். ஆனால்ப் பொண்,

ஒத்து வரல்லேயே?" வேலையில் லயித்தவாறு பதிலுரைத்துக் கொண்டிருந்தான்.

"கொஞ்சங் கறுப்புத்தான். இரிந்தாலும், கதிஜா வீவி அழகி.

'கருங் குயிலே கவிபாடு!

அருந் தமிழின் இசை கேட்டு

காதலன் நான் மனம்மகிழ'

என்டு அன்டக்கி ஒருநாள் எனக் கிட்டக் கவிபாடிக் காட்டினயளே! மறந்து பெய்த்தயளா?"

"அது வேற விசயம்."

"தம்பி, நீங்க வாத்தியா ரெண்டாப் போல இந்தத் தரகனே மழுப்பேலா? மம்முக்கா சின் போடியாருக்கு அவள் ஒரே ஒரு புள்ளக் குஞ்சி. எஸ்எஸ்சி படிச்சிப் பாசி பண்ணிரிக்காள். வாத்திவேலவந்தா, நீங்கரெண்டு பேரும் ஒருமிக்கப் படிச்சிக் குடுக்கப் போறு என்ன பெருமை. மாசம் அறுநூத்துக் கணக்கில ரெண்டுபேரும் சம்பளமெடுத்தா ஊரெல்லாம் கிலாதி. இத வுட, நல்ல சம்மந்தம், இனி மேல்க் கிடக்கிற தென்டாக்கசிட்டம். அழகா, கறுப்பிலேயே கருங்குயில். அந்தப் பொடிச்சி பாடினல் குயிலும் தோத்துப் போகுமே?" எப்படியோ, அப்துல் காதரை மசிய வைக்கும் தோரணையில் புழுகிக் கொண்டிருந்தார் தரகு.

அவனு மசியப் போகிறுன்—

"இன்னும் புழுகப் போறயளோ... இல்லே...? விரும்பாதனே ஏனிப்படி வலியுறுத்திக் கிட்டு..." என்றவாறு வேலையை முடித்துக்கொண்டு எழுந்தான் காதர்.

பேயறைந்தவரைப்போன்று வியர்வையினுல் தொந்தி 'தளதளக்க' நின்ற நிலே அசையாது அப்துல்காதரை எரிப்பதுபோல் நின்ருர் தரகு.

அவன் ஏதோ யூகித்தவனுக, சன்னல் வலேயினில் கரங்களேப் பற்றி கிழக்கில் உதயமாகும் பூரணச் சந்திரனேப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ம்மா......" தொழுவத்தில் நின்ற பசு பிரசவ வேதனே தாங்காது கதறி அழும் முரசொலி அப்துல்காதரின் செவிப் பறைகளில் விழுந்தது.

கல்யாணம் பேசி வந்திருப் பவர்கள் மாப்பிள்ளேயின் நல் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லேயோ?

'கலீர் கலீர்' எனக் கல்யாணச் சந்தையிற் பேரம் பேசுவதும் சிரித்து மகிழ்வதும் காதரின் செவிகளில் விழாமலில்லே.

'இவர்கள், என்னே எதிர் பார்த்துக்கொண்டு திரும்பத் திரும்பப் பேசுவதென்ன? மனவுளேச்சலில் அலுவலகத்தை விட்டு வெளியேறி, மாட்டுத் தொழுவத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான் அப்துல்காதர்.

தரகரும் பின் தொடர்கின் ருர்.

"தம்பி, இந்த மாடுகண்டுகளேப் பாதுகாத்துப், புல்லத் தண்ணியப் போட ஒருத்தி தேவதானே? மம்முக்காசின்

போடியார்ர மகளும் நல்லா மாடு கண்டு வளத்து வளத்து அனுவ கப்பட்டவள். அந்தப் பொடிச் சியக் கலியாணம் முடிச்சா, நீங்க இப்பிடிக் கசிட்டப்படத் தேவல் லே வாத்தியார்.''

''...ம்? சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு நடிக்கவும், ஒப்புவமை சொல்லவும், இந்தக் கல்யாணத் தரகர்கள் எங்கே, எந்தப் பள்ளிக் கூடத்தில படிச்சிரிக்கிறார்கள்?'' கிண்டலாகப் பேசிவிட்டு, பசுவின் முகத்தைத் தடவிக்கொண்டிருந் தான்.

தன்னை உயர்த்திப் பேசுவ தாக எண்ணி ஆசிரியரைப் பார்த் துப் புன்முறுவலித்தார் தரகர்.

''தம்பி, நீங்க நல்ல மனசி வெச்சி, இந்தச் சம்மந்தத்தேய்ச் சம்மதிச்சிக் கொள்ளத்தான் வேணும் வாத்தியார்?'' விடாப் பிடியாகக் காதரின் கால்களில் விழுந்து கெஞ்சி அழுதார் தரகர்.

இன்னும் எப்படித்தான, இந் தக் கெழட்டுத் தரகனுக்குப் பதில் சொல்வது; ஒரேயடியாக இந்தக் கல்யாணம் வேண்டாமென்று லென்ன? என் சம்மதமில்லாமல் ஏனிந்தப் பெண் வீட்டார்கள் வந்தார்கள்? எல்லாம் இந்தக் கெழத்தரகனின் வேலையா? உம்...?

என் தாய் மாமாவின் மகள் சுபைரியாவைத் தவிர வேறு யாரையும் மணக்கத் தயாரில்லை, என்று எத்தினையிரம் முறை இவர்களிடம் சொல்லிஇருப்பேன். என்மாமாவிடம் சொத்துச் சுக மில்லையாமே? அதற்காக என்னை நம்பிக்கொண்டிருக்கும் அழகிக்கு? நான் கொடுத்த வாக்குறுதி?– ஏழைகள் வாழ வழி? நான் நம் பிக்கைக்குத் துரோகமிழைப்

## ஊர் வம்பு

கணவனும் மனைவியும் யன் னலடியில் நின்று பக்கத்து வீட்டைப் பார்த்து பேசிக் கொள்கிறார்கள் :

'இவர்களுக்கு எப் போதுபார்த்தாலும் சண் டைதான். ஒற்றுமை யாக இருப்பதே கிடை யாது. எடுத்தற்கெல்லாம் சண்டை போடுகிறார்கள்!'

''ஓமோம்!''

வேடிக்கை பார்த்தபடி மனைவி கூறுகிறாள்

''புருஷன் சரியில்லை. சுத்த மோசம்! அவளின் ரை விருப்பப்படி எதை யும்செய்யவிடாராம்! எல் லாவற்றிலும் குறைதான் சொல்லுவாராம்!''

''அந்தாள் நல்ல மனு சன் அவள்தான் சரி யில்லை. ஒத்துப்போ[illegible] குணமில்லை''

புதா? தாய்தந்தையென்ன, ஆண்டவன்தான் வரட்டுமே? சுபைரியாவைக் கைவிடவே மாட்டேன்.

இந்தப்பசு ஆண்குட்டி ஈன்றால் எனக்கும் சுபைரியாவுக்கும் கல்யாணம் நடக்குமென்று ஒரு நாள் சாஸ்திரி சொன்னானே? பார்ப்பம்.

''ம்மா...'' பசு கத்தியதும் 'நர்க்' கென்று நெஞ்சத்தில் குத்திய பிரமையில், ''என்னருமைப் பசுவே, என் லட்சியம் நிறைவேறச் செய்!'' அவன் இதயம் இறைஞ்சும் பேரொலியைத் தரகரின் செவிகள் மடுக்க முடியாததுதான்.

'அவன் இஷ்டம் வந்து என்னென்டான்ன சொல்லட்டும்' என்ற ஆலாபனத்தில் மடியிலிருந்த வெற்றிலைக் கடதாசியை வெளி எடுத்துப் பாக்குப் போட்டுக் கொண்டிருந்தார் கல்யாணத் தரகர்.

காதர் சிந்தனை வேந்தனாக இலங்கினான்.

'என்னருமைத் தோழன் போடியாரின் மகளைக் காதலிப்பது, எனக்குமட்டுமா தெரிந்தது? மருதமுனை யெல்லாம் பிரஸ்தாபமே? கதிஜா பீவியும் ஜலாலுதீனும், 'மோதிரம் கைலேஞ்சி, ஆளுக்காள் மாற்றிய காதல்ப் படலம் எனக்கு மட்டுமா தெரிந்தது? ஒருவனின் மனம் விரும்பிய காதலியை, கண்மணியானவளை, இலட்சியச் சோடிகளை... சை?, கூடாது? ஏனிவர்கள் முட்டாள் கூட்டத்திற்கு தலைமை முட்டாள்களா? ஒருவனின் மனம் விரும்பியவளை என் தலையில் கட்டிவைத்திடத் துன்புறுத்துகின்றனர். நான் என்னருமைத்தோழனுக்குத் துரோகம் செய்யமாட்டேன்.

சசி

''உங்களுக்குத் தெரியுமாக்கும்! குடிச்சுப் போட்டு வந்து கூத்தடிக்கிறது எனக்கெல்லோ தெரியும். கத்த மோசம்''

'அவள்தான் கண்டபடி திரிகிறது, சுத்தமோசம்!'

''கண்டபடி கதையாதீங்க, உங்களுக்குக் கனக்கத்தெரியும்?''— அழுகிறாள்.

''ஏன் அழுகிறாய்?''

''உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு என்னத்தைக் கண்டன்''

சத்தம் போடாதை... அவர்கள் எங்களைப்பார்க்கிறார்கள்!''

இந்த விவகாரத்தை ஒத்திப் போட்டு எப்படியும் மழுப்ப வேண்டும். இதற்கு வழி?

'...நாளைக்கே எங்காவது மாற்றல் கேட்டு எழுதவேண்டும். மாற்றல் வருமட்டும், 'மெடிக்கலில்' எங்காவதுபோய்த் தொலைய வேண்டும் என்று யூகித்தவனாகத் தரகரை ஒரு முறை எரிக்கும் பார்வையோடு கல்யாணச் சந்தையில் பேரம் பேசிக்கொண்டிருக்கும் சபையை நோக்கி நடந்தான்.

'நல்ல புள்ளக்கி அடுக்கு இதான்' தன் மனதுள் அரட்டிக்கொண்டிருந்தார் கல்யாணத் தரகர்.

கல்யாண வரனை ஹஜ்ஜுப் பெருநாள்வரை ஒத்திப் போட்டாகிவிட்டது.

அதுல்காதரின் இதயத்தில் அமைதியே இல்லை. நெஞ்சு வலிப்பது போலிருந்தது. ஒரு கையினால் நெஞ்சைத்தடவியவாறுபஞ்சணையில் படுத்துப்புரண்டு கொண்டிருந்தான். பஞ்சணையில் நெருஞ்சி முள் குத்துவது போன்ற பிரமை. படுக்கையை விட்டெழுந்தான்.

சில அடிகள்நகர்ந்து,கிழக்கை நோக்கி ஜன்னலினூடாக முழுமதியைஇரசிக்க முயன்றான், முழுமதியும் நெருப்பாக அவன் விழிகளை எரித்துக்கொண்டிருக்கும் பிரமை. வானமெங்கும் பரந்து கிடந்து டாலடிக்கும் வெள்ளிகள் அவனைப் பார்த்துக் கிண்டல் செய்வதாகக் கண்களைக் குடைந்தன.

'எவ்வளவுதான் செல்வம் கொழித்தாலும் தான் நிம்மதியற்றநிலையில் வாழ்வதை எண்ணி மாதா பிதாக்களை வேம்பாகக் கருதியது அவனுள்ளம். பல முறை திட்டினான் மனதுள். மறுகணம் படைத்தவனிடம் மன்னிப்புக் கேட்டான். அழுதான் தொழுதான். வெந்த உள்ளத்தில் விடிவு கிடைக்காதா, நான் என்ன பாவம் செய்தேன்? சுபைரியாவை கல்யாணம் முடிக்க மாதா பிதா ஏன் என்னை அனுமதிக்கிறார்களில்லை?'

நினைந்து நினைந்து நெஞ்சம் உருகிக் கிறங்கியது. நின்று நின்று கால்களும் திமிர் பிடித்துச் 'சூ' வென மரத்தன.

மீண்டும் பஞ்சணையைநாடித் 'தொப்' பென விழுந்து கதறினான். ஒலி கிளம்பவில்லை. கண்ணீர் சிந்தவில்லை.

சாதாரண விவசாயியின் மகளை மணம் முடிப்பதே லட்சியமாகக் கொண்ட அப்துல்காதர் வாத்தியாரை, செல்வம் கொழிக்கும் போடியார் தம்பதிகள் அனுமதிக்கவில்லை என்றால் –

எந்த ஒரு பணக்காரத் தாய் தந்தையர்களும், தவத்திருமகன் பணக்காரப் பெண்ணை விவாகம் செய்தாலன்றி மகிழ்வில்லையோ? மாமாவின் மகள் சுபைரியா பூலோகரம்பையானாலும் பணக்காரர்களுக்கு மகனாகப் பிறந்தவன் கேடா?

நித்திராதேவி காதரின் கண்களைத் தாலாட்டிக் கொண்டிருந்தாள். மறுபுறம் சுபைரியா கனவாக வந்து கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மகிழ்வித்துக் கொண்டிருந்தாள்.

''...ம்மா... ம்மா... ம்மா...'' மாட்டுத் தொழுவத்திலிருந்து அப்துல்காதரின் வெள்ளைப் பசு பிரசவ வேதனையில் கதறிக் கொண்டிருந்தது. ''ம் ம ா......'' மீண்டும் மீண்டும் மரண ஓலத்துடன் கதறுவன காதரின் மரித்த நிமைகளுக்குக் கனவாகவும், செவிகளில் கொசு 'ஊ' வென்பது போலவும் கேட்டு விழிப்படைந்தான். ஆர்ப்பரிப்பாக எழுந்தான். ''ம்... மா...'' என்றுமில்லாத புதுக் குரலொன்று அவன் செவிகளில் நாராசம் பாய்ந்தது.

மாட்டுத் தொழுவத்தை நோக்கி ஓடினான்.

வானத்தில் மதிய நிலவு சிரித்துக் கொண்டிருந்த முத்தொளியில் அவன் பார்வை மாட்டுத் தொழுவத்தில் புத்துயிர் பூண்டது.

''சுபைரியா, நம் காதல் நிறைவேறும்? என் இலட்சியம் நிறைவேறும். சாஸ்திரி சொன்னதெல்லாம் உண்மைதான் சுபைரியா?'' அப்துல்காதரின் இதழ்கள் படபடத்தன.

இந்த நடு நிசியில் அங்கு மிங்கும்சுழன்று டோர்ச்லைட்டை மேயவிட்டுப் பார்க்கிறான்.

''நல்ல காலம் நான் வாய் விட்டுப் பேசியதை யாராவது இந் நேரத்தில்...'' என்று முணுமுணுக்கும் போது கிடுகுவேலித் துவாரத்தினூடாக ஒரு பச்சை நிறச் சீலை காற்றூடியது. டோர்ச் லைட்டைப் பிடித்தவாறு விசுக்கென நடந்தான் அந்த இடத்

—தெரியாதா?—

**தெரிந்துகொள்ளுங்கள்**

★ கார்களுக்கு 'ஸ்ரீ' வருமுன், இலங்கையில்எவ்வாறுஎழுதிட்டார்கள் தெரியுமா? CY, CN, CL, EY, EN, இவ்வாறுஇட்டார்கள், 'CEYLON' என்ற சொல்லினை எடுத்து, முதலில் C என்ற முதற் சொல்லை எடுத்து,பின்Nஎன்ற இறுதிச் சொல்லையும் எடுத்து CN என இலக்கமிட்டனர்; பிறகு CL; அதன் பின் CY; அதன்பிறகு EN; பின் EL; பின் EY.

★ பலர் கூடுமிடம் மன்றம்; கலைபயிலுமிடம் கழகம்.

★ இரண்டாம் உலகப் போரின் போது உலகம் முழுவதையும் நடுங்க வைத்துக்கொண்டிருந்த ஹிட்லர், முதலாம் உலகப் போரின் போது வெறும் சிப்பாயாக இ[illegible]தார்.

தொகுப்பு : ரவி

தில். "...யார்...... இந்நேரத்தில்...?"

"... நான்தான், குட்டி... ஆணு பெண்ணு?''

"...சு...சு...பை ..ரியாவா ?'' அவன் இதயத்தில் ஒருமுழுமதியே வந்து புகுந்த இன்பத்தில் அவளை இறுக அணைத்துக் கொண்டான். ''நம்மை இனி...'' என்று வார்த்தைகளை முடிப்பதுக்குள் மாடி வீட்டு மண்டபத்தில் 'லொக் லொக்' கென்ற இருமலின் பயங்கர ஒலியால் அவர்கள் இருவரையும்மயிர்க்கூச் செறியும் பயங்கரம் பற்றிக் கொண்டது.

அந்தப் பயங்கர இருமலின் குறிப்பறிந்து இருவரும் மெல்ல மெல்ல இருளை நாடி நகரலாயினர்.

''...சுபைரியா,நீசுணங்கினுல் ஆபத்து. இருமியவாறு வாப்பா வருகிறுர். அவர் நம்மைக் காண்பதற்குள் நீ 'விசுக்' கெனப் போய் விடு.''

அந்த இதயங்கள்பயத்தால் ஒழிப்பதாக இல்லை. மானம்வேறு வழியில் போகுமே, என்ற நிர்க்கதியேதான்.

''...ம்... ஆணு...?" இந்தப் பசுவின் சிசுவைப்பற்றித்தெரிந்து கொள்ளும் ஆர்வமாகக் கேட்டாள் சுபைரியா.

''வெற்றிதான். நான் நாளை யாழ்ப்பாணம் போக உத்தேசித்துள்ளேன். காலையில் ஐந்தரைக்குப் பயணம். நீ வந்ததும் நல்லது.சுணங்காதே. வாப்பா வரும் காலடி..."அவன் துரிதப்பட்டான்.

மறு பேச்சுக்கிடமின்றி சுபைரியா விசும்பியழுமூஞ்சாக மெல்ல நகர்ந்துகொண்டிருந்தாள்.

அப்துல் காதர் ஆசிரியர் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகிப் போய்விட்டான். தனது லட்சியக்காதலை நிறைவேற்றும் பொருட்டு, முஹம்மது காசின் போடியாரின் மகளை மணக்க விரும்பாத காரணத்தைச்சுபைரியாவின் தாய் தந்தையர்கள் நன்கறிவர்.

''அந்தப் பொடியன் நம்மட புள்ளக் குஞ்சியக் கலியாணம் முடிக்கத் துடிச்சாலும், அவியட உம்மாவாப்பா உட்டாத்தானே?''

''நீ என்னெத்தச் சொன்னுலும், அந்தப் பொடியன் என்ர தாத்தாட மகன். எம்புள்ளக் குஞ்சிய எழுதாம எம்பது நாளக்கி வெச்சிரிக்க முறகாரன். நம்மட புள்ளக்காகத்தான், தாய் தகப்பன்ட கரச்சலுக்காக ஊருட்டுப் போயிரிக்காம் பொடியன். ஒளுப்பம் பொறு, அச்சிப் பெருநாள் வரைபாப்பம்.''

''நீங்க, என்னப் பொறு பொறு எங்கத்துக்கு முன்னே, ஒங்கட தாத்தாவும் மச்சானும் கேட்டமாதிரி வெச்சிரிக் கயளா? காணி, பூமி, கல்லூடு வளவும் மூவாயிரம் ரூவாக் கையில குடுக்க வெச்சிக்கிட்டிரக்கயளா? சும்மா வளவளக்கத்தான் தெரியும்?" வெட்டிப் பேசினுள் மனைவி.

''அப்ப என்னடி செய்ய சொல்லுகாய்?''

''நம்மட காசிங்காக்கா, ஒரு பொடியனைப் பாத்திரிக்காராம். பொடியன், படிச்சிப் பாசி பண்ணிரிக்காளும். வாத்திவேல வருமட்டும் நெய் யிருளும்.''

''நெசவுக்காரனடி? ஆர்ரமகனும்?''

''நம்மட சூத்திரக்காரன்ர மகன், சமிசெலவ வாத்தியார்ர மகனும். நல்ல ஒழுக்கமான பெடியனும். ஆளு, உம்மாவாப்பா, ளுப்பம் இழுவளுப்படுகாங்களாம். செரிக்கட்டிப் போட்டிரல்லாமாம்; எண்டார் காசிங்காக்கா.

''...என்னடி! மெய்தானடி? அடியே, அந்த பொடியன், மம்முக்காசிம் போடியார்ர மகள் கதிஜாப் பொடிச்சியக் கலியாணம் முடிக்கப் போறனெண்டு தலகுத்திக் கரணம் போட்டுத் திரிஞ்சானே? அதென்னமாப் போச்சாம்?''

''மம்முக்காசிம் போடியாருக்குச் சம்மதமில்லயாம். பொறகு ஒங்க அக்கச்சியாட வாத்திப் பொடியனக் கேட்டுவந்தாங்க. நீங்க அன்நேரம் ஊரிலில்லயே? உம்மாரிக்கிப் பெய்தயள்''

''மெய்தானடி, சங்கதி?'' என்ற அங்கலாய்ப்பில் கனிவாலெவ்வை துள்ளாட்டம் போட்டிருந்தார்.

தாய் தந்தையர்கள் புதியபிரச்சினையில் அங்கலாய்த்துக்கொண்டிருப்பதைக் குசினியுள், பகலுணவுகள் சமைத்துக்கொண்டிருந்த சுபைரியா காதுகளில் தெறித்த வேதனையில் விசும்பிக் கொண்டிருக்கிறாள்.

''...ம்மா...'' சாலிகு லெப்பைப் போடியாரின் தவப் புதல்வன், அப்துல்காதர் வாத்தியாரின் பசுவின் சிசு தாயின் அமுத முலைகளைத்தேடும் கதறல். கனிவாலெவ்வைக்கும் முக்குலும்மாவுக்கும் செவிப்பறைகளைக் கதறலின் முரசொலி குத்திக் குடைந்தன. சுபைரியாவுக்கு அந்தப் பசுவின் சிசு கதறிய ஒலி இதயத்தில் அழுத்தமாகத் தாய்மையின் தவிப்பை உணர்த்தியது.

பங்குனிமாத வெயில் பாமர்களின் ஓலைக் ...லைகளை எாபொருளாக நினைவில் அரித்துக்

## பல்கலைக் கழகத்தில் கத்திக்குத்து!

சென்றமாதம் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த சம்பவம் நாட்டை கலங்கவைத்துள்ளது. எதிர்பாராத, பண்பற்ற, காட்டுமிராண்டித்தனமான நிகழ்ச்சி அது. மார்க்கஸ் பெர்னாண்டோ மண்டபத்தில் மண்டபத் தேர்தல் சம்பந்தமாக ஏற்பட்ட வாக்குவாதங்கள் இறுதியில் கத்திக்குத்தாக முடிந்துள்ளது.

முதலாண்டு மாணவன், மூன்றாமாண்டு மாணவனைக் கத்தியால் குத்தியதாகக் கூறப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றி வெளியுலகில் நல்லபிப்பிராயமில்லை; இந் நிகழ்ச்சி அந்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

—'தம்பி'

கொண்டிருக்கும் பிரயத்தனத்தில் மதிய வலம்வரும் சூரியன் தர கர்காசின் பாவாவை ஏன் சும்மாவிட்டு வைத்ததோ ?

''மச்சாம் புள்ளேய்... இரிக்கயளா... ?'' பத்திப் பதறியடித்துக் கொண்டு ஓடி வருகின்றார்.

''ஓ... ஆர்ரப்பாது......? ஓ! தரகுக் காசின் வாவாவா ?'' ஒரு உந்தலில் எழுந்து தெருப்படலையை நாடி ஓடிக் குதித்துப் படலையைத் திறக்கிறார், கனிவாலெவ்வை.

''ஓ ...... ஒங்களுக்கென்ன குசால் ? கெதியா கலியாணத்துக்கு ஒழுங்கு பண்ணுங்க,'' வெற்றியின் சிகரமாக குணுகுணுத்துக் கொண்டிருந்தார் தரகர்.

"போன காரியமெல்லாம் லேசா முடிஞ்சிபோச்செண்டு சொல்லுங்க. சாணிபூமி,கல்லூடு வளவு, கைக்கூலி, அதொண்டும் மில்லாம, ஏழைக்கேத்த இல்லிடம். என்டெல்லாம் கதைய முடிச்சிரிப்பயளோ... இல்லே''

''ஊடும் வேணும் வளவும் வேணும். பொதுவாக ஒண்டும் வேணும். பொண்ணமட்டும் குடுத்திருங்கென்டார் பெரிய வாத்தியார். என்ன கருணைமனசி. நீங்க குடுத்து வெச்சிரிக்கயள். இந்தத் தரகன் வாய் வெச்சா, நடக்காததென்ன!''

தரகரின் 'மோக்கை' ராகம், கல்யாண ராகமாக சுபைரியாவின் செவிகளில் விழாமலில்லே.

''மாங்கொட்டைதொத்திய, றைட்டா, கிட்டிப்புள் சடுகுடு முந்திரிக்காடெல்லாம் சக்கை கொட்டைகள் பொறுக்கிவிளையாடியதும்; மச்சான் காதருடன் துள்ளிக்குதித்து ஓடியாடிய, பழங்கால நினைவுகளெல்லாம் குசினியில் புகைமண்டலமாகிப் பறந்து கொண்டிருந்த; அருகதையற்ற சுபைரியா ஒரு கூண்டுக்கிளி.

'ஹஜ்ஜுப பெருநாளிர வைக்கி, வருவதாகத் தந்தி கொடுத்த வாத்தியார் இன்னும் வராத தவிப்பு.

சுபைரியாவுக்கு கல்யாணம் முடிந்த செய்தி அப்துல்காதருக்குத்தெரிந்திருந்தால் யாழ்தேவியில் தண்டவாளத்தில் உயிரை அர்ப்பணித்திருப்பான்.

காலை ஆறுமணிக்கோச்சியில வந்து மட்டுநகரை முத்தமிட்டுக் கொண்டிருந்தான் காதர்.

மகனின்முகத்தில் என்றுமில்லாத மலர்ச்சியைக் கண்டமாதா பிதாக்கள் ஆச்சரியப்பட்டனர்.

''...ம்மா...'' பசுவின்சிசு கதறிய சோகத்தை நினைவுறுத்தி ஓடினான் காதர் தொழுவத்துக்குள்.

''என் வெற்றிச் சின்னமே ஏன் இப்படிப் பயங்கரமாகக் கதறுகிறாய்?'' கன்றின் வெண் முகத்தைத் தடவி விட்டு, ''சுபைரி...யா...'' என்றவாறு தெருவை நோக்கி நடக்கின்றான், அப்துல் காதர்.

பழக்கப்பட்ட வழிகளை நொடிப்பொழுதில நட...

கொண்டிருக்கையில், பாதை யெல்லாம் பட்டாசுகளின் வெடி ஈசல்களைக்கண்ட ர மையில் தலையை நிமிர்ந்து நோக்குகின்றான்.

"நல்வரவாகுக!" என்ற தங்கமுலாம் பூசி மினுக்கப்பட்ட அந்த எழுத்துக்களைக் கண்டதும் "சுபைரி...யா...வுக்கு ..கல்......" அந்த வார்த்தைகளை உச்சாடனம் செய்வதற்குள் ஐம்பொறிகளும் 'நறநற' வென வெடித்துக் கொண்டிருப்பது போல்த் தோன்றியது, காதருக்கு.

பூமா தேவியின் குருமணல் விரித்த வெண்பட்டு மடியினிலே சுழன்ற தலையுடன் சோர்ந்து விழுந்தான், அப்துல்காதர்.

கல்யாண வீட்டை விட்டுத் தெருவை நோக்கி வந்து கொண்டிருந்த தரகர் காசிம்பாவா தெருவில்சொர்ப்பனம்கண்டார்


"என்ரல்லாவேய், ஓடியாங்கோ..." என்ற அபயக்குரலோடு தலையிலும் மடியிலும் தன்னையே பலியிட்டுக் கத்திக் குமைந்தார், தரகர் காசிம்பாவா.

"ம் ... மா ..." வெற்றியின் சின்னம்–

அப்துல்காதர், ஆசிரியர்; அன்புடன் வளர்த்த பசுவின் சிசு இன்னும் கதறிக்கொண்டுதான் இருக்கின்றது!



## தந்தையும் மகனும்



ஒரு முறை உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரரான ராக்பெல்லர் வெளியூருக்குச் சென்றிருந்தார். ஒரு ஹோட்டல் ஒன்றிற்குச் சென்று மிகவும் குறைந்த செலவுள்ள ஒரு அறை வேண்டுமெனக் கேட்டார் ஹோட்டல்க்காரர் கூறினார்

"மிஸ்டர் ராக்பெல்லர் நீங்கள் மிகவும் கருமியாக இருக்கிறீர்களே உங்கள் மகன் இந்த ஹோட்டலுக்கு வந்தால் மிகவும் ஆடம்பரமான உயர்ந்த அறையில் தான் தங்குவது வழக்கம் ஆனால் தாங்களோ வசதி குறைந்த மலிவான அறையில் தங்க விரும்புகிறீர்களே"

'அப்படியா .' - என்று கேட்ட ராக்பெல்லர் சற்று தாமதித்துக் கூறினார்.

"அதற்கென்ன செய்வது. அவன் தந்தை பெரிய கோடீஸ்வரன் ஆனால் என் தந்தையோ அப்படியில்லையே?"



'மகாகவி'யின்

# கலட்டி

### திட்டம்

செல்லையன் அப்போ தெழுந்தான் — ' அன்பு
சேர்ந்த எனதரும் தோழர்களே! நாம்
கல்லைக் கழனி செய்திட்டோம்! – இனிக்
காசில்லை என்று களைத்திருப்போமோ ?
நல்லலிங்கம் நல்ல லிங்கம் – அவர்
நம்பொரு ளாளர்; அவருக்கெப் போதும்
'இல்லை' என் கின்றது பாடம்! – எனில்
ஏற்ற வழிகள் பிறஉள; தேடும்!

"எண்ணம் எனக்குள தொன்றே–நீவிர்
ஏற்றுக் கொள் வீர்கள் எனில் மிக நன்றே!
உண்ணும் உணவினைப் போலே – நமக்கு
உற்ற தமிழ்! அதில் நாடகத்தாலே,
திண்ணம் நிதி வந்து சேரும் – ஒன்றைத்
திட்டமிட் டுச் செய்வம்! யாவரும் வாரும்!
'கண்ணியமும் கட்டுப் பாடும் – நல்ல
கடமையும் வெல்க!' என் ருவன நாடும்!

"ஓம்!" என் றுரைத்தனர் யாரும் – "ஓம்
ஓம்!" என்று கைதட்டினுர் முழுப் பேரும்,
"நாம் என்ன நாடகம் போட்டால் – மிக
நல்ல?" தென் றே சொர்ணலிங்கத்தான் கேட்டான்–
"தீமை ஒழிந்திடத் தக்க – புதுச்
செய்தி உடைய தொன்ரும் அஃ.திருக்க!"–
சாமம் வரைக்கும் இருந்தே – அதைச்
சர்ச்சை செய்தார்; பின்னர் சென்ருர் எழுந்தே

### நாடகம்

உயனைக் கலட்டிக் கழகத்தவர்கள்
ஒவ்வொன்ருகப் பல தேடினுர்.
மயனைப் பழிக்க ஒரு மண்டபத்தைக்

கட்ட மரம் தடிக் கோடினர்.
உயரக் கமுகு தறித்து வண்டியில்
ஏற்றி வந்தொவ்வொன்ருய் நாட்டினர்.
சயனித் தலையும் மறந்து பறந்து
சாதித்த கொட்டகை காட்டினர்.

''இளைஞர் கழக விழவு வருக!''
பறை அறைந்திது சாற்றினர்—
''நுழைவு மிகவும் மலிவு! விரைக!
விரை'' கென் றறிவை ஏற்றினர்.
அழகிய தொரு பெரிய எழுத்தில்
அறிவித்தல் களை ஒட்டினர்
கிழவர் ''மறந்து கிடந்த கூத்துக்
கிழம்பிற்று!'' எனக் கை கொட்டினர்.

''சோடித்த பந்தல்! சுடர் விளக்குகள்!
சொர்க்கம் இதற்கிணை ஆகுமோ!
வாடிக்கை யாய் இதை வைத்து நடத்திடில்
வாழும் அன்றிக் கலை சாகுமோ?''-
நாடகம் பார்த்து நடந்தவர் இப்படி
நாவினைச் சூள் கொட்டிக் கூறினர்
''கூடும் அச்சூத்திரம் கொள்ளல்!'' எனப்பொருள்
ஆளர் குதூ கலம் ஏறினர்!

## வேள்வி

நாடகத்தைப் பார்த்த சில நல்ல பெண்கள்
''நடத்துவதேன் வைரவர்க்காய் வேள்வி ?'' என்ருர்.
''மூடருக்கே ஏற்பாம் இம் முறைகேடு!'' என்று
முழுநீளத் தாடி, உடை காவி யான
வேடம் எடுத்தோர் சொன்ன துண்மை என்று
வெண்டிக்காய்க் கறிக் கறுத்துக் கதைக்கலானர்
''ஆடு வெட்டநீ போதல் கூடாது!'' என்றே
அப்பனிடம் கண்மணியாள் ஆணையிட்டாள்!

''அடுத்த சனிக்கிழமை வரும் வேள்வி நோக்கி
அன்ருே இப் பொடிர்கள் எங்களுக்கு
முடித்தெடுத்துக் கொடுத்தார் இந்நாடகத்தை!
முன்பிருந்து வருகின்ற வழக்கம் ஒன்றை
எடுத்தெறிதல் இயலுமா இலகுவாக ?

இது முழுதும் இந்நாளில் இங்கிலீசு
படித்ததனால் வந்த பிசகாகும்!" என்று
பலசொல்லி எண்பித்தார் பஞ்சலிங்கர்.

"வாடகைக்குச் சந்தியில் ஓர் கடை எடுத்து
வைத்திறைச் சிவிற்றிடுதல் ஆகுமேல், இக்
கேடகலும்!" என அங்கோர் கெட்டிக்காரி
கிளப்பி விட்டாள் ஒரு திட்டம் பொதுவாய் மாவை
ஆடவரே வேள்வியினை ஆதரித்தார்.
அரிவையரோ அதை முற்றாய் எதிர்த்ததாலே
சூடுகண்ட தருக்கங்கள் தணிந்து போய், ஓர்
சுமுகநிலை பிறந்தது. மங்கையரே வென்றார்!

குபுறல்

வேள்வியின் கீழ்மையை மிகவும் தெளிவாய்
நாடகம் போட்டவர் நாட்ட,
மாவை வேள்வி மறுத்துச் சிறந்ததே.

ஆண்டு தோறும் தலைமைக் கடாவை
அறுக்கும் சந்திக்கடை முதலாளி
தூண்டலுற்ற முளாசிக் கொதித்தார்;
துணைக்கு நின்றவர் பஞ்சலிங்கத்தார்.
"வேண்டும் ஏதும் புரிந்திடல்!" என்றனர்;
மேன்மை யானதோர் கோபம் அடைந்தார்!
ஆண்டவன் திருச் சன்னிதி முன்னிலே
அந்த வாரம் அரற்றி நின்றாரே!

மேளதாளங்கள் கூடி முழங்கிடும்;
வேறு நூறு வெடிகள் வெடிக்கும்;
சூழ ஊரவர் சென்று தொடருவர்;
"சொல்லப்பட்ட கடா இது!" என்பர்;
ஆளை ஆள்கண்ட வேளை, "குதிரைபோல்
அல்ல வா வளர்ந்துள்ளது!" என்பாரே-
மாலை சூட்டி நடத்தி, இவற்றிடை
மக்கள் முன்னர் அறுப்பதை அன்றே-

பட்டணத்துக் கசாப்புக் கடையினர்
பார்த்துக் கேட்ட விலை தந்து பெற்றார்!
கெட்ட காலம் புகுந்தது கண்டவர்

கெம்பினுர் அக் கடை முதலாளி,
''நட்ட மேற்பட்டு விட்டது'' என நிலை
நாட்டினுர் பஞ் சலிங்கர் என்ருலும்,
கொட்டி ஓர் மழை பெய்து குளிர்ந்தது,
கோடை யிற் சனி நாளன்று தானே!

## சூத்திரம்


சாத்திரம் புதியவை கண்டவர் எடுத்த
சூத்திரம் பொருத்தினர் கிணற்றில்,
பார்த்தவர் மகிழ்ந்து பல புகழ்ந்திடவே!
செல்லையனும் பொருளாளருமாம்,
செயலவை யார் வேறு இருவருமாம்–
எல்லாம் புரிவதற் காக அன்றே
ஏற்படுத் தப்பட்டது ஓர் குழுவாம்–
வில்லங்க மின்றி அலுவல் எல்லாம்
வெற்றி கரமாய் முடித்தது வாம்.
''நில்லுங்கள் பார்த்து வியந்து'' எனவே
மிசின் அக் கிணற்றில் அமைந்ததுவாம்.

''மாடி ரண்டே சுற்றிச் சுற்றி வர,
மக்களின் முன் அவர் கண்ணெதி ரே,
பாடு படாமல் இருக்கையிலே,
பாதாளம் சென்று நன்னீர் எடுத்தே,
ஓடிச் சுழன்று திரும்பினவே!
வாய்க்காலில் ஒவ்வொன்ருய் ஊற்றினவே!
வேடிக்கை தான் அந்த வாளி!'' என்றே
வியந்தனர் கண்டவர் யாவருமே.

வேட்டி களைந்திடைக் கோவணமாய்
மெல்ல நடந்தங்கு வாளியின் நீர்
ஊற்றப் படுகிற ஓடையிலே
ஊறிச் செல்லையன் உடல் குளிர்ந்தான்.
ஏட்டில் எழுத ஓர் ஓவியமே
என்ன இருக்கும் அக்கண்மணியாள்
மீட்டும் இருவிழி வண்டை அவன்
மேனியைச் சுற்றிப் பறக்க விட்டாள்.

– தொடரும்

## 'விவேகி' வாசகர் போட்டி—1



| இவர்தான் கந்தர் அம்மான் | இவர்தான் செல்லாச்சி |
|---|---|

- ★ இவர்கள் ஊர் வர்புகளைக் கேலி செய்வதில் வல்லவர்கள்; இவர்கள் இருவரும் சந்தித்தால் அங்கு நகைச்சுவையே ஆட்சி செலுத்தும்.
- ★ இவர்கள் உங்கள் ஊரிலும் இருக்கலாம்.
- ★ இவர்கள் இருவரும் கலந்து கொள்ளும் நகைச் சுவைகளைத் தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள்
- ★ பிரசுரமாகும் ஒவ்வொரு துணுக்குக்கும் ஒரு ரூபா சன்மானமுண்டு

*முகவரி*
**'விவேகி' கந்தர் அம்மான்**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்**

---

### *எழுத்தாளர் கவனத்திற்கு!*

கதை, கட்டுரை, கவிதை எழுதும் போது அழகாகவும், தெளிவாகவும், தாளின் ஒரு பக்கத்திற்கு மாத்திரம் எழுதுங்கள். தரமானவை விவேகியில் இடம் பெறும். தரமற்றவை திருப்பி யனுப்பப்பட மாட்டாது.

அனுப்ப வேண்டிய விலாசம் :
ஆசிரியர் விவேகி,
29, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# மூன்று முழு நிலவுகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**மாரன் :** (சித்தாத்தரை நெருங்கி) நிர்வாண ஒளி நெருங்குவதற்கு அரியது. அது வானத்தாமரை போன்று. வேண்டாம் விபரீத ஆசை! விட்டுவிடு!

**சித்தா :** [5] மாரனே! மனிதனை பாவத்தில் அமிழ்த்தும் பாவியே!...... வாழ்வைப்பற்றி தெளிந்த சிந்தையில்லாதவர்களின் நண்பனே! உன் வலைக்குள் அகப்பட மாட்டேன்...! என்னை விட்டுப் போய் விடு.

**மாரன் :** நான் போவதா?... என்னிடத்திலிருந்து கொண்டு என்னைப் போகச் சொல்கிறாயா?... நீ உடனே என் இடத்தைவிட்டு எழுந்து போய் விடு!

**சித்தா :** ஆற்றலிருக்குமானால் நீ முயன்று பார்!...

**மாரன் :** வேண்டாம், உன்னுடைய இந்தப் பேச்சை விட்டுவிடு!...... உனது உடலிலோ கொஞ்சமும் சக்தியில்லை. ஆற்றலுள்ள என்னுடனா மோத முனைகின்றாய்?... உன்னை இன்னமும் விரும்புகிறேன். எழுந்து வா!... எழ முடியவில்லையா! நான் நீ எழ உதவட்டுமா?... [சாகசத்துடன் நெருங்குகிறான்]

**சித்தா :** பாவி! உன் கைகளால் என் மேனியைத் தீண்டாதே!...... உன் சாகச நடிப்பு எனக்குப் புலனாகும். என் உடல் வாடி உதிரட்டும். எரிந்து சாம்பலாகட்டும். என் ஆத்மா தன் தியானத்தை விட்டு என்றும் விலகாது!

**மாரன் :** உனக்கு உன் தவத்தில் இவ்வளவு சிரத்தை இருக்கிறதா?

**சித்தா :** ஆம். எனக்கு சிரத்தை என்கின்ற வீரியம் இருக்கும் வரை உன்னால் எதுவுமே செய்யமுடியாது...

**மாரன் ;** உன்னால் பரிநிர்வாணம்அடையமுடியாது. அந்தஎண்ணத்தை விட்டுவிடு!

**சித்தா :** எனக்கு இலட்சியமே முக்கியம். பலன் முக்கியமல்ல. உன் முயற்சி என்மேல் செல்லாது. இந்த நைரஞ்சனை ஆற்று வெள்ளத்தை நீ வற்றச் செய்துவிடலாம்... ஆனால் என் உள்ளத்திலே பெருக்கெடுத்து ஓடும் லட்சிய வெள்ளத்தின்முன் நீ துரும்பு கூட இல்லை. போ!... பாவி!... போ!...

**மாரன் :** எத்தனையோ தபசிகள்... முனி புங்கவர்கள் எல்லாம் என் ஆற்றலின் முன் வலுவிழந்திருக்கிறார்கள். நீ எனக்கு எம் மாத்திரம்?

**சித்தா :** பாவம் வலியற்றவர்கள்!... உனது படை பலம் அவர்களது ஒன்பது வாசல் கோட்டைகளை தகர்த்தெறிந்திருக்கலாம்.

---

[5] மஜ்ஜிம நிகாயத்தில் மகாஸீக சூத்தம்

ஆனால் எனது கோட்டையின் வாசல்கள் அடைபட்டு விட்டன. அவற்றின் ஐம்பெரும் திறவுகோல்கள் என் மனச் சமாதியிலே கிடக்கின்றன. உனது முயற்சி என்னிடம் பலிக்காது!

மாரன் : அவ்வளவு நெஞ்சழுத்தமா உனக்கு... என் படைகளை உன்னால் வெற்றி காண முடியுமா?...

சித்தா : உன் படைகளை நான் முன்பே வெற்றி கண்டவன்...... உன் முதல் படை காம நுகர்ச்சி!... அதனைத் துறந்தே வந்தவன் நான். இரண்டாம் படை அரதி மனநிறைவின்மை நான் நிறைந்த மனத்துடனே துறவை ஏற்றவன்; மூன்றாவது பசி. அதனை வென்று வாழ்பவன் நான். நான்காவது வேட்கை அதிலிருந்து விடுபட விடை தேடி வந்தவன் நான்... ஐந்தாவது கோபம் அது என்னிடம் இல்லாதது. ஆறாவது அச்சம். என்னவென்றறியாதவன். ஏழாவது சந்தேகம். நான் வாழ்விலேயே காணாதது. எட்டாவது செருக்கு. என்னிடம் எப்போதுமே இருந்ததில்லை...... என்னை நீ வெற்றி கொள்ள கனவிலும் எண்ணாதே!......

மாரன் : அப்படியா?... இதைப் பார்த்து விடுவோம்.

[மாயா சக்தியால் நாற்புறமும் பயங்கரமான ஓசைகள் எழ, சித்தார்த்தர் சிரிக்கிறார்]

மாரன் : (தோற்ற ஆத்திரத்தில்) ஆ!... என்ன திமிர்!... உன் இறுமாப்பையும் பார்த்துவிடலாம்... யாரங்கே!... அடி [6] திருஷ்ணா!... அரதி... ரகா!...

[மூன்று மாயப் பெண்கள் சிருங்கார நடனம் புரிவதுடன், பாடல்களிலும் சிருங்கார இரசத்தையே பிணித்துப் பாடுகிறார்கள். அவர்கள் பாட்டுகள் என்புக் குழலினூடே குளிர் சரமாக ஊடுருவும் தன்மையன. சித்தார்த்தரின் சித்தம் மோனப் பரவெளியில் பரக்க. அவர்கள் களைத்து மயங்கிச் சாய்கின்றனர்.]

மாரன் : (கோபத்துடன்) ஒரு மானிடனை மயக்க ஆற்றலில்லா பேடிகளே ஓடிப்போங்கள். இனியும் என்முயற்சி செல்லாது...... சித்தார்த்தா! நான் தோற்றேன்... தோற்றேன்...

[ஓடிப்போகிறான்]

[பூரண சந்திரன். முழுநிலா வானிலே தகதகத்து மின்னுகின்றது... சித்தார்த்தர் நிஷ்டையிலிருக்கின்றார். ஜோதிப் பிளம்பு ஒன்று அந்தரத்தே கனன்றுவந்து அவர் சென்னியுள் நுழைகின்றது. பரிவட்டம் பிரகாசமாக, தலை மின்னுகின்றது]

[6] காமம், களிப்பு, வேட்கை ஆகியவரே அப்பெண்...

சித்தா : (மகிழ்வுடன் எழுந்து) விடையைக் கண்டு கொண்டேன். பல ஆண்டுமுயற்சிகள் வெற்றியளித்துவிட்டன. குடிலான உடலைக் கட்டிய கொற்றனே! உன்னைக்கண்டு கொண்டேன்.[7] நான் உன்னை அறிந்து கொண்டதால், நீ மறுபடியும் குடிலைக் கட்ட முடியாது. உன் குடிலின் உத்திரங்கள் உடைந்து தூள்தூளாகி விட்டன. அதன் முகமும் குலைந்துவிட்டது. என் சித்தம் நிர்வாணப் பேற்றிலே இலயித்துவிட்டது. உலக துன்பத்திற்கு-அநித்தியத்திற்கு காரணமான ஆசைகள் அவிந்து விட்டன. ஆமாம் உலக துன்பங்களுக்கு – பிணி, மூப்பு, இறப்பு என்பனவற்றிற்கு ஆசையே காரணம்... ஆம் ஆசையே காரணம்... இனி என் தொண்டை உலகறியச் செய்வேன்... இன்று நான் புத்தரானேன்... புத்தரானேன்...

[நடக்கிறார்]

—திரை




## காட்சி 3

[புத்தர் நாடுகள்தோறும் சென்று தனது தரும சக்கரப் பிரவர்த்தனத்தைச் செய்கின்றார். அவரது சிஷ்யர்களாக எண்ணிறந்தோர் கூடுகின்றனர். நாட்டு மக்களெல்லாம் அவர் வழி ஒழுகுகின்றனர். ஒரு நாள் மகதநாட்டின் கிருத்திரகூடம் என்னும் கழுகுமலையில் புத்தர் தனது போதனைகளை கூட்டத்திற்குப் போதித்துக் கொண்டிருக்கிறார்]

---

[7] தம்ம பதச் சூத்திரம் – 154–வது.

புத்தர் : அறவழி ஒழுகும் அருங் குடிமக்களே!... புனித யாத்திரை செய்யும் பிட்சுக்களே!... எனதருமைச் சீடர்களே!

சமய சிந்தனையுள்ளவன் இருவகை நிலைகளில் கவனம் செலுத்தக் கூடாது. ஒன்று காமபோகம். இது மிகவும் இழிவானது. உலக துன்பங்களுக்கு வித்தானது. அருவருப்பானது. சிறுமையானது. மற்றது உடலை வருத்துதல். இதனால் நீங்கள் ஒருபோதும் நிர்வாணத்தை அடைய முடியாது. ஆகவே நீங்கள் நிர்வாண நிலையை அடைய வேண்டுமாயின் நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் கடப்பாடு என்பனவற்றையே கைக்கொள்ள வேண்டும்.

பிட்சுக்களே உலக துன்பங்கட்கு காரணம் பிறவி, மூப்பு பிணி, இறப்பு, ஆசை ஆகிய ஐந்துமேயாகும். இவ்வைந்தும் தோன்றக் காரணம் ஆசை என்னும் பெருந்தீயாகும் ஆகவே ஆசையை அவியுங்கள். நீங்கள் நிர்வாண நிலை எய்தலாம்.

பிட்சு 1 : ததாகதரே!...... நீங்கள் அன்பை வற்புறுத்தும் காரணம் என்ன? அன்பு ஆசையை வளர்க்காதா?

புத்தர் : நல்ல கேள்வி. அன்பை வளர்த்து வந்தால் ஆசை அதில் அடங்கிவிடும். அதனால் கருணை மலரும். கருணை உள்ளத்தில் உலகின் அவா தோன்றாது. உலக நன்மையே தோற்றும். அப்போது உனது நிர்வாண நிலையைக் கூட பிற்போட்டு உலக சேவை செய்ய எண்ணும் உயர் நிலை கிட்டும். மேலும் அன்பு இல்லாவிட்டால் உலகில் உயிர்க்கொலை தோன்றும். அது மனதில் வெறியை மூட்டும். வரண்ட மூங்கிற் காட்டில் தீப் பற்றுவது போல் அவா என்கின்ற பேராசை மனிதனைப் பற்றிவிடும்...

பிட்சு 2 : நீங்கள் சாதிவேற்றுமையை எதற்காக மறுக்கிறீர்கள் ததாகதரே!......

புத்தர் : பிறப்பினால் ஒருவன் உயர் நிலை அடைவதில்லை. அவன் செயல்களினாலேயே உயர் நிலை அடைகிறான். நீங்கள் புலையர் குலத்தில் பிறந்த மாதங்கன் கதையைக் கேட்டதில்லையா? அவன் உயர்நிலைக்குக் காரணம் அவன் செயல்களல்லவா?... அதிலும் முனிகளிடம் சாதி வேற்றுமை கிடையாது.

[பிட்சுக்கள் அனைவரும் ஆஹாரம் செய்கின்றனர்]

புத்தர் : ஆகவே நீங்கள் உயிர்களை நேசியுங்கள். ஆனால் ஆசை கொள்ளாதீர்கள்....!

[புத்தரின் ஓசை குறைந்து வருகிறது. அதே இடத்தில் இன்னொரு மூலையில் மகத நாட்டு மன்னன் அஜாதசத்ருவும்,

தேவதத்தனும் மாறுவேடத்தில் உரையாடுகின்றனர். அவர்கள் பேச்சே அரங்கில் இப்போது கேட்கிறது]

தேவதத்தன் ; பார்த்தீர்களா மன்னு! நாட்டு மக்களனைவரும் இந்தத் துறவியின் பின்னுல் போவதை... மன்னனுன உங்களுக்கே இவ்வளவு மதிப்புத் தரமாட்டார்கள் போலிருக்கிறதே!...

அஜாதசத்ரு : ஆமாம். தேவதத்தா!... நிலைமை மோசமாகிக் கொண்டல்லவா இருக்கிறது. நாட்டு மக்கள் அனைவரும் துறவியாகி விடுவார்கள் போலல்லவா இருக்கின்றது.

தேவன் : ஆமாம் அரசே! நாடு நாடு போலவா இருக்கிறது ?...... ஒரு மங்கல நிகழ்ச்சி... மகிழ்ச்சிச் சம்பவம் ஏதாவது நிகழ்ந்ததாகவோ நிகழ்வதாகவோ தெரியவில்லையே!...

அஜாத : வந்தாலும் வந்தான் நாட்டின் மகிழ்ச்சியையேயல்லவா கொன்றுவிட்டான்.

தேவன் : ஆமாம் அரசே!... 'பெண்' என்முல் மோகம் என்கிருன். 'பொருள்' என்ருல் ஆசை என்கின்ருன். மண் என்ருல் ஆறடியே சொந்தம் என்கின்ருன்.

அஜாத : அதைவிட உணவு உண்பதே கூடாது என்கிருனே?... வாய்க்குச் சுவையாக உண்டு எவ்வளவு நாட்களாகிவிட்டன? ம்... (பெருமூச்சுவிடுகிருன்)

தேவன் : உயிர்க் கொலையே வேண்டாம் என்று கூற, தங்கள் தந்தை பிம்பிசாரரும் அவன் வார்த்தைக்கு மயங்கி உயிர்க்கொலையையே தடுத்துவிட்டார். மக்களும் உயிர்க்கொலை என்ருல் இப்போது பாவம் என்று எண்ணுகின்ருர்கள்... இவனுல் நமது மதக் கொள்கைகள் போயின. அரசநட்புகள்போயின. எல்லாமே போயின.

அஜாத : அதுதான் பிம்பிசாரரை உன் விருப்பப்படி சிறையிலடைத்துவிட்டு அரசைக் கைப்பற்றியுள்ளேனே! (அவன் குரல் தடைப்படுகின்றது)

தேவன் : அதற்காக தாங்கள் கவலைப்படுகிறீர்களா மன்னு?...

அஜாத : கவலையில்லாமலிருக்குமா?... என்ன இருந்தாலும் என்னைப் பெற்று வளர்த்து, ஆளாக்கி விட்ட தந்தையல்லவா?...

தேவன் : ஆனுல், அவர் ஒரு துறவியின் பின்சென்று நாட்டையே புறக்கணித்துவிட்ட மூட அரசர். நாட்டு மக்களிடையே உலக வாழ்வை மாயை எனப் பிரச்சாரம் செய்த ராஜ துறவி. அவரை அப்படியே விட்டுவைத்திருந்தால் நாட்டில் உற்சாகம் குன்றும். சோம்பல் வளரும், நாட்டை அன்னியர் கைப்பற்

றுவர். அடிமை வாழ்வு தொடரும். இதனையா தாங்கள் விரும்புகிறீர்கள்.

அஜாத : நான் எப்படி விரும்ப முடியும்?... ஆனால் என்ன இருந்தாலும் பிம்பிசாரர் என் தந்தை. அவரின் இரத்தத்திலே மலர்ந்தவன் நான். வாழ்ந்த தடாகத்தை நான் எப்படி வெறுக்க முடியும். என் உயிரின் ஒரு பகுதியையே நான் சிறைவைத்து விட்டு...

தேவன் : நீங்கள் சிறைதானே வைத்துள்ளீர்கள். கொலை செய்யவில்லையே!

அஜாத : (காதுகளைப் பொத்தி) போதும் தேவதத்தா. அந்தக் கொடுமையை என் காது படச் சொல்லாதே. இப்போதே என் மனம் பெரும் வேதனையில் ஆழ்ந்துள்ளது. பஞ்சணையிலும், பட்டு மஞ்சத்திலும் தவழ்ந்த என் தந்தையை கழுகுமலையின் இருண்ட காராக் கிருகத்திலே அடைத்து வைத்திருக்கும் வேதனையையே என்னால் தாங்க முடியாதவாறு இருக்கிறதே!

தேவன் : இதுவெல்லாம் இராஜ்ய வாழ்வில் சாதாரண நிகழ்ச்சி... தந்தையை தனயன் சிறையிலடைப்பதும், நாட்டைக் கைப்பற்றுவதும் மிகவும் சாதாரண நிகழ்ச்சி மன்னா!...

அஜாத : (சற்று மனம் தேறி) ஆனால், நாளை வரலாறு தூற்றுமே...

தேவன் : ஏன் தூற்றும். நாட்டைக் காப்பாற்றிய நல்லவர் என்றே கூறும் இதற்கெல்லாம் கலங்கினால் நாட்டை ஆள முடியாது மன்னா!...

அஜாத : என் சொல்கிறாய் நீ!

தேவன் : பின் என் அரசே! யாக... வேள்விகள் தடைப்பட்டுவிட்டன. பிறநாட்டைக் கைப்பற்றும் சாம்ராஜய முயற்சிகள் போயின. மன்னனுக்குரிய செயல்கள் எதுவுமே நடக்கவில்லையே!...

அஜாத : [சிந்தனையுடன்] ஆமாம்!... ஆமாம்!... நான் ஆட்சியேற்ற பின்பு இந்தத் துறவியால் என்னாற்கூட ஒன்றுமே செய்ய முடியாமற் போய்விட்டது.

தேவன் : நாட்டில் நாசகாரியங்களே நடக்கின்றன. மிருகங்களைத் தொட்டாலே முழுக்காடவேண்டிய குலத்தில் பிறந்தவனை புத்தனே அன்பு என்று கூறி ஆட்டுக்குட்டியை அணைக்கின்றான். சண்டாளர்களுடன் சரிநிகராகப்பழகுகின்றான்... அவர்களுடன் சமபந்திப் போசனமும் புரிகின்றான். நாட்டுமக்கள் வேறு அவனைப்பின்பற்றுகிறார்கள்...

**அஜாத :** இந்த நிலையில் போனால் நமக்கு வேலையில்லாமலே போய் விடும்போலிருக்கிறதே!.

**தேவன் :** இதுவும் போதாது என்று நமது பழம் பெரும் பண்பாட்டினையுமல்லவா கேலி செய்கிறான்!.

**அஜாத .** (ஆத்திரத்துடன்) ஆ!... அப்படியா ?... என்ன சொல்கிறான் அவன் ... !

**தேவன் .** 'வேள்வி ஒரு மோசடிச் செயல்... பழங்கால [1] ரிஷிகள் புலனடக்கம் வாய்ந்தவர்கள். கேளிக்கைகளை வெறுத்து ஆன்மீக சிந்தனை செய்தவர்கள். அவர்களிடம் அவர்களுக்கென பசு மாடுகள், தன தானியங்கள் இருந்ததில்லை. பிற்கால நாத்திகர்களே வேள்வி யென்றும், யாகமென்றும் உலக காம போக இன்பங்களை அனுபவிக்க இவற்றை ஏற்படுத்தி விட்டனர்' எனக் கூறுகிறான் அரசே!

**அஜாத :** அவனால் நம் புகழ் அல்லவா நாசமாகப் போகின்றது.

**தேவன் :** இப்போதே ஊர் உலகம் எல்லாம் அவன் புகழ்தானே பாடுகின்றன. நம்மைக் கவனிப்பார் எவருமில்லையே.

**அஜாத :** இவனை இனியும் விட்டு வைக்கக்கூடாது. அவனைக் கொன்று விட்டால்...

**தேவன் .** உலகம் நம்மை விட்டு வைக்காது.

**அஜாத :** அப்படியானால்.........

**தேவன் :** சூழ்ச்சியால் தான் அவன் புகழையோ உயிரையோ பறிக்க வேண்டும்...

**அஜாத :** எப்படி... ?

**தேவன் :** அதற்கும் வழி உண்டு...

**அஜாத :** இப்படித்தான்... நாம் ஒவ்வொருமுறையும் எடுக்கும் முயற்சியிலிருந்து தப்பிவிடுகிறான்... அவன் தனது தரும சக்கரப் பிரவர்த்தனத்தை நடத்திக்கொண்டிருக்கும் பொழுது நமது பட்டத்து யானைக்கு மதுவூட்டி அனுப்பி வைத்தோம். அதுவோ அவன் கருணையை வியந்து அவன் முன் மண்டியிட்டு வணங்கி நம்மைத் தலை குனிய வைத்துவிட்டது. விரல் நகங்களில் நஞ்சூட்டப்பட்ட கொலையாளிஒருவனை புத்தனைக் கொலை செய்யுமாறு அனுப்பினோம். கொலைசெய்யச் சென்றவன் அவன் கருணை விழிகளைக் கண்டு தன்செயலை மறந்து நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டான்... இப்படி, மக்கள் ஆத்திரம் நம் மேல் திரும்பியிருக்கும்பொழுது அவனை எங்ஙனம் கொல்ல முடியும்... முடியக் கூடிய செயலா இது ?...

**தேவன் :** மன்னரா இப்படிக் கூறுவது... ?

---

[1] பிராஹ்மண தாம்மிக சூத்தம்

அஜாத : மன்னனு... நான்... முறைப்படி நான் அரசுகட்டிலேறி யிருந்தால் என் ஆட்சி மக்களைக் கவர்ந்திருக்கும். ஆனுல்... என் தந்தை புத்தனின் போதனையில் மயங்கி ஆட்சியையே மறந்து நின்றதைக்கண்டு, அவரைக் கொடுஞ் சிறையிலல்லவா அடைத்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளேன். இதனுலும் மக்கள் என் மேல் அதிக சீற்றமல்லவா கொண்டிருக்கிறுர்கள்.

தேவன் : இதில் சீற்றம் கொள்ள என்ன இருக்கிறது. புத்தனுடன் சேர்ந்து நாட்டையே துறவிகள் மடமாக்க விட்டுவிடுவதா. மாற்றுன் கைப்பற்றிவிடமாட்டானு? அதன்பின் நாடேது...? மன்னனேது? உத்தமமான உயிர்வாழ்வுதான் ஏது...வாழ்வைத் துறப்பதற்காகவா உலகில் மக்கள் பிறக்கிறுர்கள்...?

அஜாத : அதுசரி... எவ்வளவு காலம் தான் மன்னர் பிம்பிசாரருக்கு சித்த சுவாதீனம் என்று சொல்லி மக்கள் முன்காட்டாமல் வைத்திருக்கிறது?... ஒரு நாள் உண்மை வெளியாகியே தீருமே... அப்போது ஊர் உலகம் என்னைத் தூற்றுமே...

தேவன் : (சிரித்து) உண்மை வெளியாகினுல்தானே?

அஜாத : (திடுக்கிட்டு) தேவதத்தா!...நீ என்ன சொல்கிறுய்?

தேவன் : ஒன்றுமில்லை... அதற்கு முன்னரே பிம்பிசாரரைத் தொலைத்து விட்டால்.

அஜாத: என்ன உளறுகிறுய்?...

தேவன்: (கையைச் சொடுக்கி) ஒரே கல்லில் இரு மாங்காய்கள்...?

அஜாத : விளக்கமாகச் சொல் தேவதத்தா!

தேவன் : உங்கள் தந்தை பிம்பிசாரரையும் இதே கழுகுமலைக் குன்றில்தானே அடைத்து வைத்திருக்கிறீர்கள். அவரின் சிறைச் சாளரத்தின் வழியாக அவர் புத்தரின் பிரவர்த்தனத்தையும், அவரையும் காணலாமல்லவா?...

அஜாத : ஆமாம். அவரின் கடைசிவிருப்பம். அதை நிறைவேற்றித் தான் வைத்திருக்கின்றேன்.

தேவன்: இப்போது நாம் இம்மலையின் உச்சிக்குச் சென்று பெரிய பாறுங்கற்களை உருட்டிவிட்டால்... புத்தன் இறப்பான்... அதனைப் பார்த்து உங்கள் தந்தையும் இறப்பார்... மக்களும் இது இயற்கையாக நடந்த நிகழ்ச்சி என எண்ணுவர். நம்மைச் சந்தேகிக்கமாட்டார்கள் பிறகு நம்மாட்சி ..நல்வாழ்வு...எப்படி என் யுக்தி?

அஜாத : ஆகா! மிகநல்ல யுக்தி... வா மலைஉச்சிக்கு யாருக்கும் தெரியாமல் போவோம்.

[மறு விநாடி 'டபார்!...படார்!' என்று பாரிய கற்கள் உருளும் சப்தமும், 'ஆ! ஐயோ...' என்ற சப்தமும் நிறைய, அரங்கினை இருள் சூழுகின்றது.]

திரை

(தொடரும்)

# பூவிற் பூத்த பூ

முள்

வீதியெலாம் பனித்தூறல்; நடுக்குங் கூதல்;
வீடுகளுங் கூடுகளாய் மூடுஞ் சாமம்;
நீதியிலா ஏரோதன் நெஞ்சின் நஞ்சு
நிறைந்தது போற் கோரவிருள்; மயங்கும் பாதை
சோதிநிலா வீசுமெழிற் கன்னித்தாயின்
சுடர்வதனத் தொளியினிலே துலங்கித் தோன்றும்;
மாதிருப்பேர் வளன்தேடிப் பெத்லகேமில்
மனைகிடையா தொருகுகையின் முனையைச் சார்ந்தார்

மலர்

நவமணிகள் குயிற்றியவோர் மணிப்பூந் தொட்டில்,
நடுவனொரு பொன்னமளி; தங்கத் தீபம்
தவமிருந்து பெற்றெடுத்த செல்வன் தன்னைத்
தாலாட்டும் இன்னிசைகள் திருப்பும் மாடம்
கவினொழுகு கவிதைமழை வாழ்த்து; மேலும்
கற்பனைக்கண் காட்சிகளில் வளனர் தோயப்
புவிமகிழப் புண்ணியத்தாய் ஈன்ற தேவன்
புல்லணையிற் கண்விழித்துப் பூத்திருந்தார்

மணம்

அன்னைமரி கண்ணயரா திருந்தாள்; இன்பம்
அத்தனையுங்; கண்ணீராய்ச் சொரிந்தாள்; அன்புப்
புன்னகையில் ஒளிவெள்ளம் பொழிந்தாள்; ஆங்குப்
பொன்னடியி லாயர்களும் பணிந்தார்; விண்ணில்
மின்னொளியின் தாரகையிப் புதுமைதன்னை
மேதினியி னெத்திசையும் பரப்ப மண்ணுள்
மன்னர்களும் மூவர்மணி முடிகள் தாழ்த்தி
மரிசுதனைக் களிபெருக வாழ்த்தி நின்றார்;

தேன்

நள்ளிருளில் ஒளிகான்ற வான்விளக்கே!
நல்வாக்கு மனச்சாந்தி வகுத்த தேவே!
கள்ளவிழுங் காந்தள்மலர்க் கரத்திலேந்திக்
காசினியைக் காத்தருள வந்த செல்வா!
தெள்ளமுதே! திரவியமே! தமிழைப் போலுந்
தெவிட்டாத செந்தேனே! அன்பேயென்றெம்
உள்ளமெலா மினித்திடவே யுவந்து போற்ற
ஓடிடுவோம் புல்லணையைத் தேடிவாரீர்!

யாழ்—ஜெயம்

சிறுகதை

# மனமாற்றம்

இரவு மணி பத்தாகிவிட்டது. அந்தக் கடை வீதியிலுள்ள சிறு கடைகள் எல்லாமே மூடியாயிற்று. ஆனால் 'பத்மா ஸ்டோரின்' முன் பக்கப் பலகைகள் எல்லாம் மூடப்பட்டு ஒரு பலகை மட்டும் மூடப்படாமல் இருந்தது. உள்ளே 'பெற்றோமாக்ஸ்' விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தெரு வீதியில் சன சந்தடியும் குறைந்து கொண்டே வந்தது. பத்மா ஸ்டோர் முதலாளி கனகசபை அப்பொழுதுதான் தமது அன்றைய விற்பனவு கொள்வனவுக் கணக்குகளைப் பார்த்துவிட்டுக்

'கச்சாயில் இரத்தினம்'

காசை எண்ணி அதை ஒரு கடுதாசியிலே குறித்துக் கொண்டார். கடைச் சிப்பந்திகளான நடேசனும் சுப்பையாவும் ஒருவரோடு ஒருவர் பேசாது ஆளுக்கு ஒரு மூலையில் நின்று கொண்டு "அடப்பாவி! இரவு மணி பத்தாகியுங்கூட இன்னும் ஆளுக்குப் பட்டடையை விட்டு எழுந்து போக மனம் இல்லையாக்கும்" என்று தமக்குள்ளே மனசுக்குள் எண்ணி நொந்து கொண்டார்கள்.

கனகசபை அன்றைய விற்பனவுக் காசை மொத்தங்கூட்டிப் பார்த்தார். மனசு குழைந்தது. அன்று மட்டும் அவருக்குச் சில்லறை வியாபாரமாக அரிசி, மா, பருப்பு, கிழங்கு, மிளகாய், மல்லி என்பனவற்றையும் கண்ணோட்டமாய்க் கணக்குப் போட்டுப் பார்த்தார். அடேயப்பா! என்ன ஆச்சரியம்! அன்று ஒரு நாளைய விற்பனையில் ரூபாய் எழுநூறுக்கு மேலான ஆதாயம் அவருக்குக் கிடைத்து இருக்கிறதே! அதனைச் சிந்தித்ததும் அவருடைய உள்ளம் தீவிரமான எண்ணத்திலீடுபட்டுவிட்டது.

ஊரிலே அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டு ஆளுக்கு ஒரு கொத்து அரிசி இலவசமாகக் கொடுக்கத் தலைப்பட்ட நாளிலிருந்து அவருக்குக் கடை வியாபாரத்திலிருந்து சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்கு ஆதாயம் கிடைத்து விட்டது. அது மட்டுமா? ஊரிலே பெரிய பெரிய பிரமுகர்கள் என்று இருந்தவர்களை முன்னனில் ஒரு தேவைக்குக் காண வேண்டி நேரிட்டால் பல நாட்கள் தமது சொந்த அலுவலையும் இழந்து கால் கடுக்க நிற்க வேணும். அதுவும் முதலில் அந்தப் பிரமுகரோடு நல்ல பழக்கமான இன்னொரு பேர் வழியைக் கண்டு கொள்ள வேண்டும். அவர்கள் இருவருக்கும் கடையிலே விற்பனைக்கு என்று கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கும் பிஸ்கோத்து டின்களில் முதல் தரமான பிஸ்கோத்து டின்கள் இரண்டு, மைலோ டின், அல்லது நெக்ஸ்பிறே டின்களில் இரண்டு, இரண்டு பைக்கற் சிகறெற் என்று இத்தியாதி பொருட்களுடன் தான் பேட்டி காணப் போக

வேண்டும். அவ்வளவுககும்செலவு ரூபாய் இருபத்தைந்து தம் கணக்கில் பற்று எழுதியாக வேண்டும். ஆனால் அந்தவிதமான கஷ்ட நஷ்டங்கள் இப்பொழுது கனக சபை முதலாளிக்குக் கிடையாது. அவர் தான் இப்பொழுதுபிரமுகர்களையும் ஊரவர்களையும் அறிந்த பெரும் பிரமுகராகி விட்டாரே!

பொழுது விடிந்தாற் போதும். ஊரிலுள்ள பிரமுகர்கள் எல்லாரையுமே கனகசபை முதலாளி காணுவார். அவர்களை வரவேற்பார். கனகசபை முதலாளியை இருந்த இடத்துக்கே தேடி வரும் பிரமுகர்கள் சும்மா வரமாட்டார்கள். முதலாளி, சரக்குத் தண்ணி வைக்கக்கூட வீட்டிலே மல்லி இல்லை. தயவு செய்து எனக்கு ஒரு இருத்தல் மல்லி தாருங்கள்" என்பார் ஒருவர். இன்னொருவர் வந்து ''முதலாளி எனக்கு நீங்கள் இல்லை எண்டு சொல்லாமல் எப்படியாவது இரண்டு இருத்தல் செத்தல் மிளகாய் தரவேணும். உறைப்புத் தின்னமல் நாக்குக் கூட விழுவிழுத்துப் போய்விட்டது'' என்பார்.

கனகசபைக்குஅவர்கள் கெஞ்சுவதைக் காணும்போது உள்ளம் பூரிக்கும். இருந்தாலும் அவர் அதை வெளிக்காட்டாது ''என்ன செய்யுறது பாருங்கோ! மார்க்கட்டிலே மிளகாய் மல்லிக்குப் பெரிய கிராக்கியாய்ப் போச்சு. இருத்தல் மூண்டு ரூபாய்க்குக் கூட வாங்கக் கிடைக்கிறது பெருத்தஅபூர்வம்.அதினலேநான் அந்த இரண்டையும் வாங்கிவரவில்லை.வாங்கிவைந்து உங்களிட்டை மூண்டுரூபாய் எண்டு மனங்கூசாமல் எப்பிடிச் சொல்லி விக்கிறது'' என்று கூறிவிடுவார்.

''எத்தனை ரூபாய் வித்தாலும் காரியமில்லை. நீங்கள்எனக்கு இரண்டு இருத்தல் செத்தல் மிளகாயும் ஒரு இருத்தல் மல்லியும் தரத்தான்'' வேணும் என்பார் வந்த பிரமுகர்.

கனகசபை முதலாளி கொஞ்சநேரம் யோசித்துவிட்டு சரி, உப்பிடி உந்தக் கதிரையிலே இருங்கோ. என்று சொல்லி ஒரு கதிரையைச்சுட்டிக்காட்டி விட்டு கடையிலுள்ள பையன்களில்நடேசன் தான் விவேகி. முதலாளியின் குறிப்பறிந்து நடப்பவன். அவனைக் கூப்பிட்டு ''நடேசு, நீ ஒருக்கால் சி. க. கடைக்குப் போய் நான்சொன்னேன் எண்டுசொல்லி இரண்டுறுத்தல் மிளகாயும், ஒரு இருத்தல் மல்லியும் வாங்கிக் கொண்டுசுறுக்குவா! போ என்று சொல்லி ஏவிவிடுவார்.

நடேசன் முன்பக்கமாகப்போய் பின் பக்கக் கதவாலே உள்ளே வந்து இரண்டு இருத்தல் மிளகாயும் ஒரு இருத்தல் மல்லியும் எடுத்துப் பக்குவமாக இருசரைகளிற் கட்டிக்கொண்டு பதினைந்து நிமிஷங்கள் கழித்து அங்கு வருவான். அவனைக் கண்டதும் கனகசபை ''சி. க. என்ன சொன்னர். விலை என்ன எண்டார்'' என்று விபரம் கேட்டு நடிப்பார்.

''அவர் உங்களுக்கு எண்டபடியாலே இப்போ மார்கட்டில விக்

இற விலையிலும் பார்க்க இருபத்தைஞ்சு சதம் கழிச்சுக்கொண்டு தரட்டுமாம் "என்று வெகு ச்சிதமாய் நடேசன் கூறுவான.

"பாத்தியளே! எனக்கு எண்டபடியாலே அவை இருபத்தைஞ்சு சதம் குறைச்சினம. நீங்கள் போய்க் கேட்டால் சாமானே இல்லை எண்டு விடுவினம். இதுவும் ஒருவியாபாரத்தந்திரங் கண்டியளோ?" என்று கூறிக் கனகசபை மிக நாணயமும நறுக்குமான பேர்வழியாக நடந்து கொள்வார்.

கனகசபை முதலாளிக்குகால நிலையையும் அதனாலே தமக்கு ஏற்பட்டுள்ள ஒரு மதிப்பையும் எண்ண எண்ண! மனசு இறும்பூதெய்தியது. ஒருகாலத்துல்அவர் அந்தக் கடைப்பக்கமாகப் போகிற வருகிறவர்களைக் கைதட்டிக் கூப்பிட்டு, அங்கே போடப்பட்டிருக்கும்வாங்கிலே உட்காரவைத்து அவர்களுககு வெற்றிலைத்தட்டத்தையோ! சுருட்டுக்கட்டையோ! சிகறெற்பைக்கற்றையோ எடுத்து நீட்டி உபசரித்துக் குசலம் விசாரித்து அவர்களிடம் நாலுபணத்துக் வியாபாரம் செய்த அவருக்கு இப்போதைய நிலை எம்மட்டுச் சாதகமாகிவிட்டது. இருந்த இருக்கையிலே இருக்க எல்லோரும் அவரைத் தேடி வருகிறார்கள். எல்லாம் இந்தக் கால வித்தியாசந்தான் காரணம் என எண்ணிக் கொண்ட அவர் எடே! நடேசு, சுப்பையா. என்னடா பாத்துக்கொண்டு நிக்கிறியள். நேரம்போனது உங்களுக்குத் தெரியவில்லையே? இரண்டு பேரும் கெதியாய்ப் போய் வீட்டிலே சாப்பிட்டுவிட்டு வாருங்கோ! நான் வீட்டுக்குப் போகிறதுக்கு" என்று கூறி அந்தப் பையன்களை அதட்டினார்.

பையர் இருவரும் எப்போ முதலாளி தங்களுக்கு வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு வர விடை கொடுப்பார் என்று ஆவலோடு எதிர்பாத்தவர்களல்லவா? முதலாளி விடை கொடுத்ததும். மெதுவாய் பீடிக்கட்டில் ஒன்றை எடுத்து சட்டைச்சேப்பில் திணித்துக் கொண்டு, வில்லிலிருந்து விடப்பட்ட கணையாகக் கனகசபை முதலாளி வீட்டை நோக்கி ஓடினார்கள்.

பையன்கள் போன பிறகு கனகசபை முதலாளி எழுந்து

> தண்ணீர்க்குழாய்களில், நீர்பிடிக்கக் குடத்தை வைத்தால் காற்றுத்தான வருகிறதாம் எங்கே தெரியுமா?
>
> யாழ்ப்பாண மாநகரசபை நீர் விநியோகத்திலுள்ள தண்ணீர்க்குழாய்களில்
>
> தகவல்: 'ஊர்சுற்றி'

போய்க் கடையின் முற்புறப் பல கைகள் சரியாக மூடப்பட்டிருக்கின்றனவா? என்று பார்த்து விட்டு வந்து உள்ளே இருப்பில் எத்தனை மிளகாய், மல்லி, அரிசி மூடைகள் இருக்கின்றன என்று கணக்கிட்டுக் கொண்ட அவருக்கு நினைவு உதித்தது. இந்தப் பஞ்ச காலத்தில் மிளகாய், மல்லி, அரிசிக்கு இன்னும் ஒரு பத்துச் சதம் கூட்டி விற்றாலும் ஆட்கள் பறந்தடித்து வாங்குவார்கள். அதனால் ஆதாயமும் ஒரு நாளைக்கு நூறு இருநூறு என்று கூடும். ஆகவே நாளைக்குச் சில்லறை வியாபாரிகளுக்கு அரிசி மூடை ஒன்றுக்கு எட்டு ரூபாயும், மிளகாய், மல்லி அந்தர் ஒன்றுக்குப் பத்து ரூபாயும் கூட்டி விற்க வேணும் எனத் துட்டமிட்டார். அப்பொழுது அவர் வீட்டுக்குச் சாப்பிடப் போன பையன் இருவரும் வந்துவிட்டார்கள். பையன்கள் வந்ததும் அவர்களை உள்ளே பக்குவமாய்க் கடைப் பூட்டைப் பூட்டிக்கொண்டுபடுக்கச்சொல்லி விட்டு வீட்டை நோக்கி வந்தார்.

வீட்டுக்கு வந்த கனகசபையை, அது நேரம் வரைக்கும் ஆவலோடு எதிர்நோக்கி இருந்த அவர் மனைவி அன்னபூரணம் அன்போடு வரவேற்று அவருக்கு ஆகவேண்டிய அனுசரணைகளை எல்லாம் கடமை தவறாது செய்தாள்.

மணிக்கூண்டில் மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது. ஊர் அடங்கி எங்கும் ஒரே அமைதி நிறைந்த நடுஇரவு. எங்கேயாவது

**புத்திசாலி ?**



“நீ ஏனம்மா அப்பாவைக் கலியாணம் பண்ணிக்கொண்டாய்?”

“என்ர குஞ்சு, உனக்கு இருக்கிற புத்தி முந்தி எனக்கு இல்லாமற் போச்சு!”

நடேசு வ.

---

சன சத்தம் கேக்கின்றதா என்று உன்னிப்பாய்க் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த கனகசபைக்கு அப்பொழுதுதான் தான் செய்த தவறு புரிந்தது. அவருக்கு அன்னபூரணத்திடம் பரிவு பிறந்தது. ‘ஆகா, எனக்காக அல்லவா? அன்னபூரணம் இவ்வளவு நேரமும் கண்ணுறங்காது காத்துக் கொண்டிருந்தாள். இதைப் போன்றே அவள் அவரை மணம் முடித்த அந்த இருபத்திநான்கு வருஷங்களும் நடந்து வந்து இருக்கிறாள். ஏன் நான் அவளுக்கு இப்படி ஒரு இம்சையை உண்டு பண்ண வேண்டும். இது அவளுக்கு நியதியா!” என எண்ணிக்கொண்ட அவர் பரிவோடு அன்னபூரணத்தை ஏறிட்டுப் பார்த்தார். என்ன வியப்பு. அன்னபூரணத்தின் அன்று அலர்ந்த ரோசா மலரை ஒத்த

முகம் வாடி வதங்கிக் காணப் பட்டது. அதைக் கண்டதும் அவர் ஏக்கத்துடன் ''அன்னபூர ணம் ஏது இண்டைக்கு உன்ரை முகம் ஒரு மாதிரியாய்க் கிடக்கு. ஏதும் சுகம் இல்லையோ'' என்று பரிவோடு கேட்டார்.

''எனக்கு இண்டைக்கு ஒரு மாதிரியாய்க் கிடக்கு. கை கால் எல்லாம் உழைகிறது. தலையை யும் வலிக்கிறது'' என்ருள் அன்ன பூரணம்.

''அது உனக்கு நித்திரை விழித்த கிறக்கம். சரிகெதியாய்ப் போய்ச் சாப்பிட்டுவிட்டு படுத்து உறங்கு'' என்று கரிசனையோடு கூறிவிட்டுக் கனகசபை போய்ப் படுத்துக் கொண்டார். மெத் தைக்கட்டிலில்படுத்துக்கொண்ட அவருக்கு மனசில் பல பல எண் ணங்கள் உதயமாகிக் கொண்டே இருந்தன.

கனகசபை அன்னபூரணத் தை மணம் முடித்த நாளில் அவர் ஒரு சாதாரண கடைக்கா ரர். அப்பொழுது அவரிடம் தேட் டம் எதுவும் இருக்கவில்லை. தாலி கூறைக்குக் கூடப் பெருங் கஷ் டப் பட்டுத்தான் பாதி கடன் பட்டும் காரியத்தை நிறைவேற் றினவர். ஆனல் என்று அன்ன பூரணம் அவர் வீட்டுப் படலை திறந்து உள்ளே புகுந்தாளோ! அன்றையிலிருந்து அவருக்கு அதிர்ஷ்டம் பிறக்கஆரம்பித்தது. அவர் தொட்டது எல்லாமே பலிதமாயிற்று. சின்னஞ்சிறு பல சரக்குக் கடை பெரிய பண்டக சாலையாயிற்று. அந்தப் பகுதிகளி லுள்ள சில்லறைக் கடைக்காரர் களுக்கு எல்லாம் அவர் தானே ஏக விநியோகஸ்தர்.

இரண்டாவது உலக யுத்த காலத்தில் அரிசிக்குக கட்டுப் பாடு ஏற்படுத்தி அரசாங்கம் எல்லாருக்கும் கூப்பன புத்தகம் வழங்கிற்று. அந்த ஊரிலுள்ள இரண்டாயிரத்துககதிகமான பேர்களுக்கும் அரிசி வழங்கும் பொறுப்புக் கனகசபை கடைக்கே கிடைத்தது. அரிசி ஈங்க வரும் அத்தனை பேருக்கும் பலசரக்குச் செலவு பொருட்களையும் அவரே விநியோகித்து வந்தார். அதனல் அவருக்கு நாளாநத வருவாய் உயர்ந்து கொண்டே வந்தது.

பணவருவாய் அதிகரித்து, ஊரில் அவருக்கு நல்ல நடப் பும் ஏற்பட்டு விட்டது. ஆனல் அவர் இறந்த பின்பு அவர் பெயரைச் சொல்லவும், அவருக்குக் கொள்ளிவைக்கவும் ஒரு குழந்தை பிறககாது போய் விட்டது. அவரும் இன்றைக்கு இல்லாது போனல் நாளைக்காவது அன்னபூரணம் கர்ப்பவதியாகா மலாபோய்விடப்போகிருள். எப் படியும ஒரு குழந்தையையேனும் பெறுவாள் என்ற நம்பிக்கையை இழககாது இருபததிரண்டு வரு ஷங்களை ஓட்டியே விட்டார். தற் போது அன்னபூரணத்துக்கு வயசு நாற்பத்தைந்து ஆகிவிட்டது. இனிமேல் அது நடக்கப் போகிற காரியம் இல்லை. அவர் தேடி வைத்து இருக்கும் பல இலட்சம் ரூபாய்களும் அவரும் அன்னபூர ணமும் இறந்தபிறகு, அன்னபூர

ணத்தினுடைய தம்பி துரையப் பாவுக்குத்தானே அத்தனை சொத்துகளும் சுவறப் போகிறது. அவனென்றால் ஒரு சதத்துக்கு உதவாத காவாலி. ஊதாரி. நட்டாமுட்டி. கூத்தாடி. அப்படியான ஒரு கெட்டவன் அனுபவிக்கவா? அவர் அப்படி இரவு பகலாய் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். ஆகா அந்தப்பாவி அனுபவிக்கிறதிலும் பார்க்க அந்தப் பணத்தில் அவரும், அவர் மனைவி அன்னபூரணமுமாகச் சேர்ந்து காசி, கதிர்காமம், சேது சிதம்பரம், இராமேஸ்வரம் முதலான தலங்களைப் போய்த் தரிசித்தாலும், அதில் ஏதும் பலன் உண்டு அல்லவா? பாவபுண்ணியம் பாராது கருவாலைக்கு விற்பதில் ஏற்பட்டபாவமும் நீங்கும் என எண்ணிக் கொண்ட அவரை நித்திராதேவி அரவணைத்துக்கொண்டாள்;

கனகசபை முதலாளி மாட்டேன், மாட்டேன், என்று கூறி எவ்வளவோ பிடிவாதத்துடன் அடம் பிடித்துங் கூட, அவரை அங்கு வந்த அந்த கரிய உருவங்கள் விடாது கைப்பிடியாப் பிடித்து இழுத்துக்கொண்டு எங்கோ ஒரு பயங்கர உலகிற்குக் கொண்டு சென்றார்கள். அங்கு அவர் வழி நெடுகக்கண்ட காட்சிகளோ என்றால் அவரை மயிர் சிலிர்க்க வைத்தன. வழி நெடுகக் கல்லும்முள்ளும் அவர் காலை உறுத்த உறுத்த உடம்பு எல்லாம் ஒருவித வாள்போன்ற செடியின் இலைகள் கீறி உதிரம் பெருக அவர் அப்படியே ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டார். அவரை அந்த இரு பயங்கர மனிதர்களும் விட்டார்களில்லை. குண்டுக் கட்டாய்க் கட்டித் தூக்கிக் கொண்டுபோய் ஒரு பிரமாண்டமான மண்டபத்தில் ஒய்யாரமாக வீற்று இருக்கும் ஒரு பயங்கரமான மனிதனின் முன்னே விட்டார்கள்.

கனகசபை அந்தப் பயங்கர மனிதரின் பருமனையும் கோர உருவத்தையும் அவர் கீழே அக்கினி ஆறு ஓட, அதன்மேலே அழகான சிம்மாசனம் ஒன்று போட்டு வீற்று இருப்பதையும் பார்த்ததும், விஷயத்தைப் புரிந்து கொண்டார். அந்தக் கொடிய உருவம் வேறுயாரும் அல்ல பூவுலகில் மக்கள் தங்கள் இறுதிக் கட்டத்தை அடைந்ததும் யமன் என்று ஒருவன் வந்து அவர்கள் உயிரைக் கவர்ந்து செல்வான் என்று பேசிக் கொள்வார்களே! அந்த மனிதன்தான் இவன் என எண்ணிக்கொண்ட அவர் கண்விழிகள் பிதுங்க உடல் பேயாட்டம் போட்டது.

இரும்பினாலே செய்யப்பட்ட ஆசனத்தில் இரத்தினக் கற்கள் பதிக்கப் பெற்ற கிரீடத்தைத் தலையில் அணிந்து கையில் பெரிய சூலாயுதத்துடன் வீற்றிருந்த அந்த மனிதரின் கண்களில் கோபக் கனல் தெறிக்க கடைக் கண் வீச் செறிந்து, ஏளனமாகப் பார்த்து "நீ ஒரு மனிதன். நீ பூவுலகத்தில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் பொருட்களைப் பதுக்

இக் கொள்ளை விலைக்கு அப்பாவி மனிதர்களுக்கு விற்றது ஞாபகம் இருக்கிறதா ?'' என்று கேட்டு ஒரு அதட்டுப் போட்டான்.

இடு நடுக்கத்துடன் கனக சபை முதலாளி அப்படியே அதிர்ச்சியுற்றுக் கட்டிலில் இருந்து 'தொப்!' என்று கீழே விழுந்தார்.

கீழே விழுந்த கனகசபை எழுந்து மேலில் படிந்து இருந்த மண்ணைத் துடைத்து விட்டு மெல்லச் சாளரத்தைத் திறந்து பார்த்தார்.

அதுவரை பூமகள் போர்த்து இருந்த இருட் போர்வை குலைந்து அவள் முகத்தில் புன் முறுவல் மீண்டும் பூத்துக் குலுங்க ஆரம்ப மாயிற்று.

வீட்டுக்கூரை மீது காக்கை வந்து உட்கார்ந்து கொண்டு கா! கா! என்று கரையப் பட்சிகள் கீச்சுக் கீச்சு! என்று கீதம் இசைத் தன.

ஆகா விடிந்துவிட்டதுஎன்று தமக்குள்ளே கூறிக் கொண்ட கனகசபை வெளியே வந்தார். அவர் எதிரெ கோப்பையில் ஆவி எழும்ப முட்டைக்கோப்பியுடன் அங்கு வந்தாள் அன்னபூரணி.

முட்டைக் கோப்பியுடன் அன்னபூரணத்தை அங்கு கண்ட கனகசபை ''உதை ஏன் இப்ப நீ கொண்டுவந்தனீ, உதிலே என்ன சுகத்தைக் கண்டது'' என்று கூறி விட்டுக் கடையைநோக்கி விரைந்து வந்தார்.

கனகசபை அங்கே வேகமாய் நடந்து வருவதைக் கண்ட கடைக் காரப்பையன்கள் பரக்கப் பரக்க அவரைப் பார்த்து விழித்துக் கொண்டே நின்றனர்.

கனகசபை வரும்போதே பையன்களைப் பார்த்து ''எட நடேசு, சுப்பையா, இனிமேற் பட்டு நீங்கள் இந்தக் கடையிலே விற்பனை செய்கிற எல்லாச் சாமான்களுக்கும் இரண்டுசதம் இலாபம்வைத்துவிற்றால்போதும். எங்களுக்குக் கொள்ளை இலாபம் தேவையில்லை'' என்றார்.

நடேசன்வியப்போடு''அரிசி, மல்லி, மிளகாயையுமோ!'' என்று கேட்டான்.

''ஓ! எல்லாந்தான்'' என்றார் கனகசபை.

---


# "விவேகி"

திங்கள் இதழ்

| | |
|---|---|
| வருட சந்தா | 4-00 |
| தனி இதழ் | -40 |

நிர்வாகி,

29, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்

தொலைபேசி ; 274

# ஒலிவர் ருவிஸ்ட்

ஏ. ரி. பொன்னுத்துரை. B.A.



அடுத்த நாட்காலே, சற்றுத்தாமதமாகவே ஒலிவர் நித்திரை விட்டு எழுந்தான். அந்த முதிர்ந்த யூதனைத் தவிர, வேறு எவருமே அந்த அறையில் இல்லை. குறைந்த ஓசையில் விசில் அடித்த வண்ணம் அந்தக் கிழவன் காலைச் சாப்பாட்டிற்காகக் கோப்பி தயாரிக்கிறுன். ஒலிவரைப் பார்த்தபடி அவனைக் கூப்பிடுகிறுன். பதிலில்லை. நித்திரை செய்வதுபோல் பாவனை செய்யும் ஒலிவரிடம் எப்படிப் பதிலை எதிர்பார்க்க முடியும். மெல்லென, எவ்வித சத்தமுமின்றி கதவண்டை சென்று, அதனை அடைக்கிறுன். அறைத் தளத்திலே உள்ள ஓர் இரகசிய துவாரத்திலிருந்தும், ஒரு சிறிய பெட்டியை எடுத்து மேசைமீது மெல்லென வைக்கிறுன். பெட்டியின் மூடியைத் திறக்கும்போது அவனது கண்கள் பரந்து விரிந்து பிரகாசிக்கின்றன. பவுணுல் செய்யப்பட்ட அழகான கடிகாரத்தை பெட்டியில் இருந்தும் எடுத்தபடி பூரிப்புடன் நோக்குகிறுன்.

"ஆகா! எனது பையன்கள் எவ்வளவு நன்றியுடன் நம்பிக்கையுடன் நடக்கிறுர்கள். நல்ல பிள்ளைகள்! நல்ல பிள்ளைகள்!!"

அருவருப்பான முறையில், சிரித்து சிரித்து தனக்குத்தானே பேசிக்கொள்கிறுன். இதைத் தொடர்ந்து, இன்னும் பல கடிகாரங்களையும் நகைகளையும் விலையுயர்ந்த பொருட்களையும் அவன் அந்தப் பெட்டியில் இருந்தும் எடுக்கிறுன். தனக்குள் ஏதோ முணுமுணுத்தபடி தனது, கரிய விழிகளை ஒலிவரின் முகத்தில் பாய்ச்சுகிறுன். ஒலிவர் விழிப்பாக இருப்ப

தையும் தான் செய்வதை ஆவலாக அவதானிப்பதையும் உணர்ந்த கிழவன், மூடியை பெரிய பெட்டியின் சத்தம் உண்டாகும்படி மூடுகிறான். மேசையில் இருந்த பாண் வெட்டும் கத்தியை ஒரு கை நாட, அடக்க முடியாத ஆத்திரத்துடன் சீறுகிறான்.

''என்ன அது? என்னை எதற்காக ஆவலுடன் பார்க்கிறாய்? ஏன் நித்திரைவிட்டு எழுந்தாய்? என்னத்தை இதுவரை பார்த்தாய்? பேசு. கெதியாக பதில் சொல்ல உன் உயிர்மேல் ஆசை இருந்தால் பதில் சொல்''

''ஐயா என்னால் தொடர்ந்து நித்திரை செய்ய முடியவில்லை. உங்களுக்கு இடைஞ்சல் செய்திருந்தால் அதற்காக வருந்துகிறேன் ஐயா'' பணிவுடன் பதிலுறுத்தான் ஒலிவர்.

''அப்படியானால், ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரேயே நீ நித்திரைவிட்டு எழவில்லையா?'' பயங்கரப் பார்வையுடன் அவனை அதட்டுகிறான் அந்த யூதன்.

''இல்லை. இல்லை. உண்மையாகவே கூறுகிறேன் நான் எழுந்திருக்கவே இல்லை ஐயா''

''உண்மையாகவே கூறுகிறாயா?'' முன்னிலும் பார்க்க கூட அதட்டியபடி, பயமுறுத்தும் விதத்தில் வினவுகிறான்.

''சத்தியமாகக் கூறுகிறேன். நான் ஒரு மணித்தியாலத்துக்கு முன் எழுந்ததேயில்லை.''

''அப்படியானால் சரி.'' யூதனின் குரலில் ஒரு மாற்றம். ''எனக்குத் தெரியும் நீ நல்லவன் என்று. உன்னைப் பயப்படுத்திப் பார்த்தேன். நீ ஒரு துணிவுள்ளவன் என்பதைக் காட்டி விட்டாய். ஆகா! நீ ஒரு துணிவுள்ள பேர்வளி. பலே! ஒலிவர்!!.''

சிறிது நேரம் தனது பெட்டியை நோக்குகிறான் கிழவன்.

''இந்த அழகான பொருட்களில் எதையாவது நீ அவதானித்தாயா தம்பி'' கைகளைப் பெட்டியின்மேல் வைத்தபடி ஒலிவரை வினவுகிறான்.

''ஆம் ஐயா''

''ஒலிவர்! இவைகள் எல்லாம் எனக்குச் சொந்தமான அற்பப் பொருட்கள். மக்கள் என்னை ஒரு லோபி என்கின்றனர். நான் ஒரு லோபி அவ்வளவு தான்''

அந்த யூதக் கிழவன் அருவருப்பான பிராந்தியத்தில் குடியிருப்பதால், ஒரு லோபியாகத்தான் இருக்கவேண்டும் என்று சிந்தித்தபடி அவனால் எழுந்திருக்க முடியுமா என்று ஒலிவர் வினவினான். ஆமாம் என்று பதில் கூறியயூதன், ஒருமூலையைச் சுட்டிக்காட்டி அதில் இருக்கும் குவளை தண்ணீரை எடுத்துவரும்படி ஏவுகிறான். ஒலிவர் எழுந்து, அறையின் நடுவாகச் சென்று, குனிந்து அந்தக் குவளையை எடுப்பதற்கிடையில் அந்த பெட்டி மறைக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் யாக் டொக்கின்ஸ் என்ற விசித்திரப் பேர்வளியும், சாளி பேர்ஸ் (Charlie Batos) என்பவனும் வருகின்றனர். எல்லோரும் காலைப்போசனமும் அருந்துகின்றனர். பின்னர் பிற்பொக்கற் அடிக்கும் கலைபற்

றிய பாடத்தை விளையாட்டாக ஆரம்பிக்கிறான் அந்த பூதக் கிழவன்.

ஒரு மூக்குப் பொடி டப்பியை காற்சட்டையின் ஒரு பொக்கற்றுக்குள்ளும், ஒரு சிறு புத்தகத்தை மற்றப் பொக்கற்றுக்குள்ளும், ஒரு கடிகாரத்தை கோற் பொக்கற்றிலும், வைக்கிறான். தனது சேட்டில் ஒரு போலி வைரம் பதித்த ஊசியைக் குத்துகிறான். தனது கோற்றை இறுக்கமாக பூட்டிய பின்னர், ஒரு கைத் தடியுடன் அங்கும் இங்குமாக அறையிலே நடமாடுகிறான். வயது வந்தவர்கள் நடப்பதுபோன்ற பாவனையில் நடக்கும் அவன், இடைக்கிடை நின்று, ஏதோ கடையன்னல்களை ஆழ்ந்து அவதானிப்பதுபோன்று காட்சியளிக்கிறான். அப்படி நிற்கும்போதெல்லாம் தன்னைச் சுற்றி திருடர்கள் வரக்கூடும் என்ற பய உணர்வை வெளிக்காட்டியும், தனது பொருட்கள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றனவோ என்று பார்த்துக் கொள்வது போல எல்லா பொக்கற்றுக்களையும் கைகளால் மெல்லெனத் தட்டிப் பார்த்துக் கொள்ளுகிறான். இதனைப் பார்க்க ஒலிவருக்குச் சிரிப்பு சிரிப்பாக வருகிறது. அவனைப் பின்தொடர்ந்து நெருங்கிச் செல்கிறார்கள் பையன்கள். யாக் டொக்கின்ஸ் தனது கால் பெருவிரல் நுனியில் நிற்கிறான். சாளி பேர்ஸ் அவனுக்குப் பின்னால் நின்று அவன் மேல் விழுகிறான். கண் மூடி முழிக்க முன், மூக்கு பொடி டப்பி, புத்தகம், கைக்குட்டை, வைர ஊசி, மூக்குகண்ணாடிப் பெட்டி எல்லாவற்றையும் திடீரென எடுத்து விடுகிறார்கள். தனது பொக்கற்றுக்குள் கையை விட்டு பொருட்களை எடுக்கும்போது யாருடைய கையாவது அவன் உணரக்கூடிய அளவுக்கு முட்டி விடுமானால் அந்தக் கிழவன் உரக்கச் சத்தமிடுவான். அதனைத் தொடர்ந்து திரும்பவும் இந்த விளையாட்டு ஆரம்பமாகும். பிற் பொக்கற் கலையில் கைதேர்ந்தவர்கள் ஆகும்வரை, இந்த விளையாட்டு திரும்பத் திரும்ப நடைபெறுவது வழக்கம். இளைஞனாய் இருந்தமையால் இந்தப் பயிற்சியில் அந்தக் கிழவன் மெச்சுமளவுக்கு ஒலிவர் வெற்றியீட்டி விட்டான்.

## 6

ஒரு வயது முதிர்ந்த கண்ணியவான் ஒரு புத்தக கடையின் முன்னால் நிற்கிறான். ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்தபடி நிற்கிறான். கடையையோ அன்றி தெருவையோ அன்றி அதில் நடமாடுவோரையோ அவதானியாது வாசிப்பில் ஆழ்ந்து அமுங்கி விட்டான். அப்போ, யாக்டொக்கின் தனது கையை அந்த முதியவன் பொக்கற்றுக்குள் புகுத்தி கைக்குட்டையை எடுத்து விட்டான். இதை ஒலிவர் கண்டான். அப்போதுதான் யூதக் கிழவனின் அறையில் உள்ள கைக்குட்டைகள், கடிகாரங்கள், நகைகள் பற்றிய விபரங்களை மெல்லென அவனால் ஊகிக்க முடிந்தது. ஒலிவரின் உள்ளத்தில் பீதி தலை விரித்தாடியது. யாக்டொக்கின்சும் சாளி பேர்ஸ்சும் மிக வேகமாக தெருவிலே ஓடுவதைக் கண்ட ஒலிவரும் செய்வதறியாது தானும் வேகமாக ஓடுகிறான். வாசிப்பில் ஆழ்ந்திருந்த முதியவன் திடீரென தான் கைக்குட்டை இழந்துவிட்டதாக உணர்ந்ததும், ஓடிக்கொண்டிருந்த ஒலிவர்

தான் திருடன் எனக்கணித்து. திருடன் திருடன் என்று கூக்குரலிடுகிறன். ஒலிவரைத் தொடர்ந்து பலர் ஓடுகிறர்கள். இறுதியில் ஒலிவர் பிடிக்கப்பட்டான் ஒரு பொலிஸ்காரன் அவனை திரு பான்ங் (mr. fang) என்ற பெயருடைய நீதிபதி முன் நிறுத்தினன். மூன்று மாதச் சிறைத் தண்டனை விதித்தார் நீதிபதி. ஆனல் புத்தகசாலை உரிமையாளர் அங்கே வந்தார். இன்னொரு பையன் இந்த முதியவரது கைக்குட்டையை எடுத்ததை தான் கண்டதாக சாட்சியமளித்தார் ஒலிவருக்கு மூன்றுமாத சிறைத்தண்டனை விதித்த நீதிபதி திடீரென தனது தீர்ப்பை மாற்றி ஒலிவரை விடுதலை செய்தார். கைக்குட்டையை பறிகொடுத்த முதிர்ந்த கண்ணியவானின் பெயர் பிறவுண்லோ (mr Brownlow) வாகும். இவரது இல்லத்தை நோக்கி ஒரு வண்டி விரைகிறது. இதனுள் ஒலிவரும் திரு பிறவுண்லோவும் இருக்கிறர்கள்.

திரு. பிறவுண்லோவின் வீட்டில் ஒலிவருக்காக ஒரு படுக்கை அவசரம் அவசரமாகப் போடப்பட்டது. கவனமாக அவனைப் படுக்கச் செய்கிறர்கள். அணைபோட முடியாத அன்பைக் கொட்டி ஆதரிக்கின்றனர். ஆனல் பல நாட்களாக ஒலிவர் உணர்வு சிறிதுமின்றி சுரத்தின் கொடுமையில் வாடி வதங்கி மெலிந்து வெளிறி தஞ்சம் அற்றவன் ஆகிறன். படுக்கையில் மெல்லென எழுந்து நடுங்கும் கரங்களில் தலையை வைத்தபடி சுற்று முற்றும் ஆவலோடு பார்க்கிறன்.

"இது எந்த அறை? நான் எங்கு கொண்டுவரப்பட்டேன். இந்த இடத்திலா நான் முன்னர் நித்திரை செய்தேன்?"

வியப்புடன் தன்னைத்தானே கேட்டுக் கொண்ட வினுக்கள் இவை.

இந்த வார்த்தைகளை கேட்டதுதான் தாமதம், அந்த படுக்கைக்கு அருகே இருந்த தாய்மைத்தன்மை நிரம்பிய பெண் ஒலிவரைப் பார்த்து "தம்பி! நீர் அமைதியாய் இருக்க வேண்டும் இல்லையெனில் திரும்பவும் நோய் ஏற்படலாம். படுத்தபடி படு" என்று பரிவுடன் பேசினுள் ஒலிவர் அவள் ட்டளைக்குப் பணிந்தான்; நித்திரையில் ஆழ்ந்தான் திரும்ப எழும்பும்போது ஒரு டாக்டர் நாடி பார்ப்பதை அவதானித்தான். நிலைமை சற்று திருப்தியாய் இருப்பதாகக் கூறிய டாக்டர் தேநீரும் வறுத்த உணவும் கொடுக்குடபடி கூறிவிட்டுச் சென்றர். மூன்று நாட்களின் பின் ஒலிவர் இந்த உலகத்துக்குரியவன் ஆகிவிட்டான். ஆமாம். அவனுல் இப்போது ஒரு கதிரையில் உட்கார முடிந்தது. திரு. பிறவுண்லோ அவனைப் பார்க்க வருகிறர்.

"இப்போது எப்படி ஒலிவர்?"

"நல்ல சந்தோஷமாய் இருக்கிறேன் சேர். உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் பெரிதும் கடமைப்பட்டவன் சேர்."

"நல்ல பிள்ளை. பெட்வின்! இருவருக்கு சாப்பாடு கொடுக்கப்பட்டதா?"

"ஆமாம். இப்போதுதான் நல்ல சூப் கொடுத்தேன் சேர்" திருமதி பெட்வின் என்ற பெண் பதில் இறுத்தாள்

சிறிது நேர உரையாடலின் பின் திரு. பிறவுண்லோ சென்றுவிட்டார்.

பூரண சுகமடைந்ததும் ஒலிவருக்கு புதிய உடைகளை கொடுத்தார் திரு பிறவுண்லோ.

ஒருநாள் மாலை திரு பிறவுண்லோ தனது படிக்கும் அறைக்கு ஒலிவரை அழைத்தார். புத்தகங்கள் நிரம்பிய அறையில் திரு பிறவுண்லோ ஒரு மேசை அருகே அமர்ந்து வாசித்துக்கொண்டிருந்தார். ஒலிவர் வந்ததைக் கண்டதும், புத்தகத்தை மூடிவிட்டு அவனை அமரச் செய்தார். ஆவல் ரேகை முகத்தில் நெளியப் புத்தகங்களை பார்க்கிறான் ஒலிவர்.

"நியாயமான அளவு புத்தகங்கள் இங்கே உண்டல்லவா?"

"நியாயமான அளவு இருக்கிறது சேர். இவ்வளவு தொகையாகப் புத்தகங்களை நான் பார்த்ததும் இல்லை சேர்"

"முறையாக நடந்தால் இவைகளை நீ வாசிக்கலாம். விவேகியாகவும் எழுத்தாளனாகவும் நீ வர விரும்புகிறாயா?"

"சேர் நான் இவைகளை வாசித்தால் போதும்" ஒலிவர் அடக்கமாக கூறினான்.

"ஒலிவர்! நான் கூறப்போகும் விஷயத்தில் நீ கூடிய கவனம் செலுத்தவேண்டும்"

"சேர்! தயவு செய்து என்னை வெளியே போகும்படி கூறிவிடாதீர்கள் சேர்"

உரத்து கெஞ்சினான் ஒலிவர்.

"தம்பி! நீ காரணமில்லாமல், நானாக, உன்னை இவ்விடத்தில் இருந்தும் அகற்றி விடுவேன் என்று பயப்படாதே"

"கடைசிவரை, நான் காரணமாக மாட்டேன் சேர்"

"எனக்கு உன்னிடம் நல்ல நம்பிக்கை இருக்கிறது. இந்த உலகத்தில் ஒரு நண்பனே இல்லாத அநாதை தான் நீ என்று எனக்கு கூறினாய். நீ உன் விபரத்தை இன்றும் கூறு. நீ எங்கிருந்து வந்தாய்? உன்னை யார் வளர்த்தார்கள்? நீ எவ்விதம் அந்த கெட்ட கூட்டத்திடம் சிக்கினாய்? உண்மையை ஒழிக்காமல் கூறு. நான் உயிரோடு இருக்கும் வரை உனக்கு உதவியாய் இருப்பேன்"

ஒலிவர் தனது சோக வரலாற்றைக் கூறுகிறான்.

(தொடரும்)

சாய்ந்த கோபுரம் ஒன்று இத்தாலியில் உள்ளது; அக் கோபுரத்தைக்காண ஓர் அமெரிக்கன் சென்றான். வழிகாட்டி அக்கோபுரத்தின்பெருமையைப்பலவாறு எடுத்துரைத்தான். பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த அமெரிக்கன் இறுதியாகக் கூறினான்:

இச்சாய்ந்த கோபுரத்தைப்பார்க்கும் போது எனக்கு ஓர் உண்மை புலனாகின்றது எனது மாளிகையைக் கட்டியவன் தான்இதனையும் கட்டியிருக்கவேண்டும்!

-வாசுதேவன்

★

"உலகில் எத்தனை அறிவாளிகள் உளர்?" என ஒரு கேள்வியை அறிஞர் ஒருவரிடம் கேட்டனர். அவர் கூறிய பதில்:

"மூன்றே மூன்று பேர்... ஒருவர் இறந்துவிட்டார். மற்றவர் இன்னும்பிறக்கவில்லை மூன்றாமவரை யாரெனக் கூறில் தற்பெருமை என்பீர்கள்?"

ராஜாராம்

★ சென்ற இதழ் தொடர்ச்சி

# தேய்பிறை

வ. அ. இராசரெத்தினம்

இப்போதெல்லாம் கலியாண வைபவங்கட்குச் செல்வதில் வாத்தியாருக்கு விருப்பமேஇல்லை எந்தச திருமண வீட்டிற்குச் சென்றாலும். கல்யாணவீட்டிற்கு வந்திருப்பவன் யாராவது "உங்கடவீட்டில எப்பவாத்தியார் கல்யாணச் சாப்பாடு?" என்று கேட்டுவிடுவான். என்ன பதில் சொல்கிறது அவனுக்கு?

ஆனல் மணியத்தின் கல்யாண வீட்டிற்குப் போகாமல் இருக்கமுடியுமா? தன்னோடு ஒன்ருகப் படித்தவன். உறவினன் இல்லாவிட்டாலும், எப்போது எங்கே கண்டாலும் "என்ன மச்சான்?" என்று முறை சொல்லித்தான் விசாரிப்பான். அவனுக்கும் போகத்தான் வேண்டும், என்று தீர்மானித்துக் கொண்டே வீட்டுப் படி ஏறி, "இந்தா" என்று மனைவியிடம் காசை நீட்டினர்-

"எங்கால இது?"

"கடன் வாங்கினன்"

"நானும் இங்கே புரட்டி வைச்சிருக்கிறன். அதுக்க நீங்களும் என்னட்ட ஒரு சொல்லுச் சொல்லாம...

"காசு என்ன நாறியா போகும்? சோத்தப்போடு.சாப்பிட்டுவிட்டுப் போவம்"

ஞானம்மா அடுக்களைக்குட் சென்று சோற்றை எடுத்துக் கொண்டு பின் விருந்தைக்கு வந்து சேர்ந்தாள். குருஸ் வாத்தியார், கோழி கிளறுவதைப் போலச் சோற்றுப் பீங்கானைக் கிளறத்தொடங்கினர்.

'மீன்விலைப் பரதவர்' என்று சங்க நூல்கள் குறிப்பிடும் குலத்தைச் சேர்ந்தவரான குருஸ் வாத்தியார், மீன் சாப்பிடுவதில் எண்ணைக்குமே மோகங்கொண்டவர். அவரைப் பொறுத்தவரையிற் கறி என்ற சொல். கறியாகச் சமைக்கப்படும் மீனுக்கு குபெயராகிவிட்டது. மீனைத் தவிர வேறு எதையும் கறியாகச் சமைக்கலாம் என்று நம்பாத அளவுக்கு அவர் ஒரு மீன் பைத்தியமாகவே இருந்தார் அவருக்குக் கோப்பைக்குள் இருந்த ஒரே ஒரு மீன் துண்டு எரிச்சலைத்தான் கொடுத்தது.

அந்தக்காலத்தில் அவர் இப்படியா சாப்பிட்டார்?

'இளக்கந்தை கடற்கரையோரத்தில் ஒரு கிராமம். பத்தோ இருபது குடிகள். அத்தனை பேருக்கும் மீன்பிடிதான் தொழில். கார்த்திகை மார்கழி மாதங்களில் வீச்சு வலையை ஒரு சுழற்றுச் சுழற்றி வீசினல் ஒரு கூடைச் சூடை மீன் அகப்படும். அதிகாலையிற் பாடசாலைக்குவாத்தியாருக்கென்று மீன்வந்துவிடும். பிள்ளைகளே வெட்டிக் கழுவித் தருவார்கள். அதை விதம்விதமாகச் சமைக்க நானே அடுப்படிக்குப் போய் விடுவேன். தேங்காய்ப் பாலைச் சொட்டாகப்

பிழிந்து, ஊசித்திப்பிலியையும் போட்டு வெள்ளைக் கறி சமைத்தால் எவ்வளவு ருசியாக இருக்கும் ?

அந்தக் காலம் இனி வரப் போகிறதா ?

இப்போ பிடிக்கிற மீனை எல்லாம் திரிகோணமலைக்கும் கொழும்புக்கும் அனுப்பி விடுகிறார்கள். ஊரிலே இருத்தற் கணக்கில் மீன் வாங்கி அவுண்ஸ் கணக்கிற் சாப்பிட வேண்டும்.

முப்பத்தைந்தாண்டுப் பழக்கம். அவர் மன ஓட்டங்களைப் படித்துக் கொண்டாள் ஞானம்மா. அவள் சொன்னாள் ''இருக்க மட்டும் இருந்து சாப்பிடுகிற நேரம் பார்த்துத்தான் எங்கயாவது போயிடுவீங்க. ஒண்ணே முக்கால் ரூபாவுக்கு வாங்கின பாரை. பத்துத்துண்டு வெட்டஇல்ல. பிள்ளை குட்டி இருக்கிற இடத்தில் சட்டிக்கை வைச்சிற்று இருக்க ஏலுமா ?''

குரூஸ் வாத்தியாருக்குச் சிரிப்புவந்தது. மீனுக்காக ஏங்கிய தன் குழந்தைத் தனத்தை நினைத்து நாணிக் கொண்டே விரைவிற் சாப்பாட்டை முடித்துக் கைகழுவிக் கொண்டார்.

வீட்டினுள்ளே பிள்ளைகள் படுத்துக் கொண்டு விட்டார்கள். தெரேசா மட்டும் மங்கிய குப்பி விளக்கினடியிலே கதைப்புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

'பத்துமணி செண்டும் என்ன படிக்கிறு. போய்ப்படு' என்று பலனை எதிர்பாராது கட்டளையிட்ட வாத்தியார் டிரங்குக்கு மேலே அவர் மனைவி தயாராக எடுத்து மேலே வைத்திருந்த பெத்தாபுரம் பட்டு வேஷ்டியை எடுத்து, நைந்து போன இடத்தை லாவகமாக மறைத்து உடுத்திக் கொண்டார். சட்டையும் தரித்துச் சால்வையையும் விரித்துப் போட்டுக் கொண்டு ''என்வலப் இருக்கா ?'' என்று குரல் கொடுத்தார்.

''காசும் அதுக்குள்ளதான் வைச்சிருக்கன். பேரை எழுதிக் கொள்ளுங்க'' என்று என்வலப்பையும் பேனையையும் நீட்டினுள் ஞானம்மா. அவற்றை வாங்கிப் பெயர் எழுதிக் கொண்ட வாத்தியார் அவள் உடுத்து முடிப்பதற்குள் வெற்றிலை போட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணத்திற் தட்டைத் தேடி அலைந்தார்.

கலியாண வீட்டிலிருந்து இருவரும் திரும்பி வருகையில் இரவின் செம்பாதி கழிந்திருந்தது. அடி வானத்தில் அல்லாடிக் கொண்டிருந்த தேய்பிறை, மழைமூட்டத்தின் கரும் போர்வைக்குட் சுருண்டு கிடந்த உலகை ஒளிசெய்யும்முயற்சியிற் தோல்வியடைந்து முகிற்சுற்றைக்குட் தன்னை மறைத்துக் கொண்டது. குரூஸ் வாத்தியார் இருளிலே தன் மனைவியின்கையைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்தார்.

எதிரே இரண்டாங் காட்சி பார்த்துவிட்டு மூன்று பெண்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களை முட்டியும் முட்டாமலும் மூன்று நான்கு இளைஞர்கள் சிரிப்

பும் கேலியுமாக வந்து கொண் டிருந்தனர்.

அக்கூட்டம் தங்களைத் தாண் டிச் சென்ற பின் ஞானம்மா சொன்னாள். ''என்ன நாட்டியத் தோடும் நளினத்தோடும் போகு துகள். குமரிகளா இதுகள் ?

குரூஸ் வாத்தியாருக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. பின்னால் வந்தவர்கள் எந்த ஊரோ ? எவர் எவரோ ? இங்கு உத்தியோகத்திற்கு வந்தவர்கள். ஆனால் அந்தப் பெண்கள்

மூவருமே நம்மவர் தான்!

ஜஸ்ரின் ஊரவர் எல்லாரை யுமே திட்டுவதில் உண்மை இருக் கத்தான் செய்கிறது. அவன் ஒரு நாள் சொன்னான். ''நமது பெண்கள் எல்லாருடனும் தாரா ளமாகப் பழகுவதை நாம் அனு மதிக்கிறோம். நமது கோயிலில் நடக்கும் கூட்டங்களும், அன்னிய நாட்டாரிடமிருந்து மதத்தின் அடிப்படையில் நாம் கற்றுக் கொண்ட சில பழக்கவழக்கங்க ளும், இதற்கு வழி செய்து கொடுக்கின்றன. நமது பெண் கள் கட்டுப் பெட்டிகளாக வாழா மல் எல்லாருடனும் தாராளமா கப் பழகுவது நல்லது என்று நாம் நினைக்கிறோம். ஏன். அதற் காகப் பெருமைப்படவும் செய் கிறோம். இந்த மேல் நாட்டு நாகரீகத்தை ஏற்றுக் கொண்ட நாம்ஒருபெண் தற்செயலாகவோ அல்லது பிரக்ஞைபூர்வமாகவோ' தவறிவிட்டால், ஏன் உலகமே அஸ்தமித்து விட்டது என்று எண்ணிக் கொண்டு கூச்சலிட வேண்டும் ?

நம் பெண்கள் தாராளமாக எல்லாருடனும் பழகுவதைக் கண்ட வேற்றூர் இளைஞர்கள்– குறிப்பாக இங்கு உத்தியோகத் திற்காக வந்திருப்பவர்கள்–நம் பெண்களை ஒரு பொழுது போக் குச் சாதனமாகத்தான் மதிக்கி றார்கள். நம்பெண்களோடு பேசிச் சிரிப்பது அவர்கட்கு ஒரு 'சும்மா முஸ்பாத்தி'. ஒழுக்கத்திலும் கட் டுப்பாட்டிலும் வளர்ந்த ஒருசிலர் நம் பெண்களை மோஹினி அவ தாரங்கள் என்று கணக்கெடுத்து, நம் சமுதாயத்தையே தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கிவைத்து வாழ்கிறார்கள்.''

''என்ன ஒன்றும் பேசாமல் வாறீங்க? ஞானம்மா அவர் இரை மீட்பதை இடை மறித்துக் கேட்டாள்.

''என்னத்தைப் பேசிறது? இதுகளால் எல்லாருக்குமே அவ மானம்'' என்றுசொல்லிப் பெரு மூச்செறிந்தார் குரூஸ் வாத்தி யார்.

வீடு வந்து விட்டது.

வேத நாயகவாத்தியார் தன் உடைகளைக் கழைந்து முன் விறாந்தையிற் கிடந்த கதிரையிற் போட்டு விட்டுச் சாரத்தை மாற்றிக் கொண்டு, தயாராக இருந்த பாய்ச் சுருளை விரித்துப் படுக்கையில் இருந்தபடியே இராச்செபம்சொல்லத் தொடங் கினார்.

செபம் முடிந்ததும், புழுக்க மாக இருக்கிறது என்ற எண்ணம்

மேலிடவே, விருந்தையின் ஜன்னல்களைத் திறந்து விட்டு, 'யேசு மரிசூசை' என்று உரத்த குரலிற் தன் செபங்கட்கு முத்தாய்ப்பு வைத்து விட்டுப் படுக்கையிற் சாய்ந்தார்.

கடந்த சில ஆண்டுகளாக எப்போதுமே அவருக்குக்கோழித் தூக்கந்தான். எத்தனையோ இரவுகளைத் தனிமையின் ஏக்கத்திலும், சிந்தனை உறுத்தல்களின் கோரத்திலும், நித்திரையின்றியே கழித்திருக்கிறார். இராக்கதர்கட்கு இரவிலே பலம் வருவது போல அவரின் ஈனக் கவலைகட்கும், சிந்தனைகட்கும் எங்கிருந்தோ அசுர பலம் வந்து அவரை அலக்கழிக்கும். அப்போதெல்லாம் தேவமாதாவின் பிரார்த்தனையைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே கொட்டு கொட்டென்று ஆந்தை போல விழித்துக் கொண்டிருப்பார். இன்று சிந்தனை உறுத்தல்களின் கோரம் மட்டுமல்ல; உடலின் உபாதை கூட அவரை வதைத்தது.

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்று கோஷமெழுப்பிக் கொண்டே, அந்த இறைவனை மற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் எல்லாரையும் விடத் தாழ்ந்த ஒரு நிலையில் அநாதையாக்கவேவிட்டிருந்த அந்தக் காலத்தை அந்த உடல், மன வேதனைகளினூடே எண்ணிக் கொண்டார்.

அவர் 'இறைவன்' தொழில் புரிந்த குக் கிராமங்கள் அவர் நினைவிலே வந்து போகின்றன.

'மாடுகள் கலக்கிய குட்டைத் தண்ணீரைச் சுட வைத்துக் குடித்துக் கொண்டே மூன்று ஆண்டுகள் வாழ்ந்துவிட்ட இலங்கைத்துறை, வைத்தியனையோ, வைத்திய சாலையையோ காண்பதற்குப் பத்துப் பன்னிரண்டு மைல் தூரம் நடந்தே வரவேண்டியிருந்ததினால் கொத்தமல்லித் தண்ணீரைக் குடித்துக் கொண்டே மலேரியாவுடன் வீரப் போர் புரிந்த இளக்கந்தை, பாம்புக்கும் பூச்சிக்கும் பயந்து கொண்டே விடிவிளக்கை வைத்துக்கொண்டு இரா முழுவதையும் அறிதுயிலிற் கடத்தி விட்ட மேன்காமம்...... இப்படி எத்தனையோ இடங்கள்..

எல்லாமாகச் சேர்ந்து அறுபது வயதிற்குள்ளாகவே பற்கள் விழுந்து நரைதிரை மூப்புத் தட்டி.......

குரூஸ் வாத்தியாருக்குப் பயமாக இருந்தது.

தனக்கு ஏதாவது ஏற்பட்டுப் பட்டால் குடும்பத்தின் நிலை...?

''கடைசியாய்த் தேடிக் கொண்ட வியாதி இது ஒன்றுதான். இந்தத் தொழிலின் அந்திம காலத்திற் கூட நிம்மதி கிடைத்ததா? கடைசி ஐந்து ஆண்டுகளிலும், பஸ் போக்குவரத்தே இல்லாத ஊருக்கு மாற்றி விட்டார்கள். இதனால் ஒவ்வொரு நாளும் வெய்யிலோ மழையோ பத்துப்பன்னிரண்டு மைல் தூரம் சைக்கிள் ஓடவேண்டியிருந்தது. அதன் பலன்......?

ஐயோ!

குரூஸ் வாத்தியார் வாய் விட்டரற்றினார். ஒரு வருடமாக

இந்த வியாதியை எவருக்குந் தெரியாமல் மிகக் கவனமாக மறைத்து வைத்திருந்தார். கொழும்பிலிருந்து அடிக்கடி வி. பி. பி. யில் வரவழைத்துச் சாப்பிட்ட கருணைக்கிழங்கு லேகியம் எந்தப் பயனையுங் கொடுக்கவில்லை.

அறுவைச் சிகிச்சைதான் செய்ய வேண்டுமாம்!

ஆஸ்பத்திரி!

இந்த வயதில் ஆஸ்பத்திரிக் கட்டிலிற் போய்ப் படுப்பதா?

அவருக்குப் பயமாகவே இருந்தது. படுக்கையே பிடிக்க வில்லை. 'வெளியில் எழுந்து உலவினாற் சற்று இதமாக இருக்கும்' என்ற எண்ணம் அவருள் வலுக்கிறது.

கதவைத் திறக்கிறார்.

நாதாங்கி விழும் சப்தத்தில் மேரி விழித்துக் கொள்கிறாள்.

''அப்பா''

அவள் அழைப்பு ஆசிரியரின் காதுகளில் விழவில்லை. வலியின் உபத்திரவத்தில் ''மாதாவே'' என்று அரற்றுகிறார்.

''அப்பா''

மேரி கதவைத்திறந்து கொண்டு வெளியே வருகிறாள். தொடர்ந்து அவள் பின்னால் அவர் மனைவியும் வருகிறாள்.

கதவு நிலையிலே தலையைக் குத்திக் கொண்டு வலியின் உபத்திரவத்தைப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருந்தவர், அறைக்கதவு திறக்கப்பட்டதும், தீவிரமாக வெளியே செல்கிறார்.

''நீங்களா அப்பா முனகினீங்க?'' மேரி அனுதாபத்தோடு கேட்கிறாள்.

'இல்லியே அம்மா, நாய் குலைச்சுது. என்ன என்று பார்ப்பம் என்றுதான் வெளியிலேவந்தனான்,' என்று கொண்டே நடந்தவர் திரும்பி, ''நித்திரை வருகுதில்லையம்மா. கொஞ்சம் கோப்பிவைச்சித்தாறியா?'' என்று மேரியை வினவுகிறார். மேரி குப்பி விளக்கை எடுத்துக் கொண்டு அடுக்களைக்குட் சேல்கையில், ஞானம் ''ஏன் எனக்குக் கூடப் பொய்சொல்றீங்க. உங்கவியாதி எனக்குத் தெரியாதா? சின்ன ஒப்பிறேசன் என்று தானே ஐஸ் ரின் கூடச் சொன்னான், நீங்க ஆஸ்பத்திரிக்குப் போறபயத்தில் எல்லாவற்றையும் மூடிமறைக்கிறீங்க. நீங்க பாயில படுத்திற்றீங்க எண்டா எங்கட கதி?''

ஞானத்தின் கண்கள் கலங்கிக் கண்ணீர் வடிக்கின்றன.

''பைத்தியம், எனக்கு இப்ப என்ன வந்திற்று? என்று அவளுக்குத் தைரியமூட்டியவர், ''அது சரி; அந்தப் பயலிட்டையுஞ் சொல்லிற்றியா? அவன் இதுக்கு ஆயிரம் வைத்தியம் சொல்லியிருப்பானே'' என்று சொல்லிச் சிரிக்க முயன்றார்.

''அவன் சொல்றதில என்ன தான் பிழையிருக்கு? என்று கேட்டபடியே ஞானம் அவரைக் கைத் தாங்கலாக வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு வந்தாள்.

வானத்துத் தேய்பிறை, மழை மூட்டங்கள் அகன்றதினாற் சிறிது பிரபையாய்த் தோன்றிற்று. ஆனால் இன்னுஞ் சில நாட்களில் அமாவாசை கூட வரலாம். அதனால் என்ன? அத் தம்பதிகளின் மனதிலே ஐஸ்ரின் வளர்பிறையாக நெளிந்து கொண்டிருந்தான்.

முற்றும்.

பகலின் முடிவும், இரவின் ஆரம்பமும் சந்திக்கும் சூழல்
பாவம், கணபதி ஐயர்

# படிக்கல்

புரட்சிபாலன்

"மாஸ்ரர்! என்ர மேள் சற்குணத்தின்ர நடத்தையில எனக்கு நிறைய நம்பிக்கையிருக்கு. என்ர மேள் நீங்க சொல்றமாதிரி ஒரு நாளும் நடந்திருக்கமாட்டா. நீங்க ஏதோ என்ர குடும்பத்தில வஞ்சம் வச்சிப் பழிபேசிறியள். என்ர மேள் சற்குணத்தை நான் ஒரு குழந்தையாகத்தான் மதிக்கிறன். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று பெரியவா சொல்லுவா. என்ரமேளையும் அந்த தெய்வத்துக்குச் சமமாகத்தான் நான் நினைக்கிறன். நீங்க பேசிற பேச்சுதெய்வத்திற்கே அடுக்காது. ஒரு குமர் காரியத்தை வீணாகச் சந்திக்கு இழுக்காதீங்க மாஸ்ரர். நாங்க போட்டுவாறம்..."



மணிக் கதை

கணபதிஐயர் அதற்குமேலும் அங்கே அமர்ந்திருக்கப் பிடிக்காதவரைப்போல் துண்டை உதறி மீண்டும் தோளில் போட்டுக் கொண்டு விரைந்து கூடத்தை விட்டு வெளியே நடக்கிறார். அவர் எழுந்து விரைந்து நடந்த வேகத்தில் அவருடைய உச்சிக் குடுமி ஒருமுறை ஆடி அதிர்கிறது. அவரைத் தொடர்ந்து அவருடைய நிழல்களாக மனைவி செல்லமும், மகள் சற்குணமும் வெளியே நடக்கின்றனர். சற்று நேரத்திற்கெல்லாம் முற்றத்து மல்லிகைப்பந்தலுக்கு அப்பாலிருக்கும் தெருப்படலை "கிரீச்" சென்ற ஒலியெழுப்பியவாறு மூடிக்கொள்கிறது. நான்...? நான் மூடிக்கொண்ட கதவையும் அங்கே சூழ்ந்திருந்த சூனியத்தையுமே வெறித்துப் பார்த்தபடியே நிற்கிறேன்.

"பார்த்தீங்களா? உங்களுடைய நல்ல மனசு யாராலுமே புரிஞ்சுகொள்ள முடியல்ல. நாம கண்ணால கண்டதச் சொன்னாலும் யாராவது தன்ர பிள்ள குற்றம் செய்ததாகச்சொல்லுவாங்களா? பிறத்தியார் விஷயத்தில நாம உரிமையோட தலையிடுறது எவ்வளவு பெரிய அவமானம் பார்த்தீங்களா?", நான் அமைதியாகத் திரும்பி நோக்குகிறேன். என் மனைவி யோகம் அவமானம் தாளாது அழுதுவிடுபவளைப் போல் என்னருகேவந்துநிற்கிறாள்.

"யோகா! கணபதி ஐயர் ரொம்ப நல்ல மனிதர். ஆனா அவர் தன்ர மகளில் வச்சிருக்கிற அளவுக்கு மீறிய அன்பினால இப்

படிப் பேசிட்டுப் போருர். இதையெல்லாம் உணர்றதிற்கு அவருக்கு ஒரு காலம் வரும். அப்ப அவர் உணரட்டும்........" நான் நிதானமாக மண்டபத்தினுள் தொங்கவிடப்பட்டிருந்தமுருகன் படத்திலே என் பார்வையைப் பதிக்கிறேன். யோகம் சிந்திய நெடுமூச்சுக் காற்றுடன் கலந்து என்னுடலைத் தீய்க்கிறது. அவளுடைய ஏக்கத்தின் காரணம் எனக்குப் புரிகிறது. கணபதிஐயர் கோபித்துக்கொண்டு போட்டார். இனி அவளுடைய பேச்சுத் துணைக்கு ஐயர் குடும்பம் சரிப்பட்டு வருமா ?

''ம்...மா...ம்...மா'' அறைக்குள்ளிருந்து குழந்தை ரதியின் அழுகுரல் கேட்கிறது. யோகம் விரைந்து அறைக்குள் மறைகிருள். மண்டபத்தினுள் ஒரு மூலையில் யன்னலோரமாகப் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் மெதுவாகச் சாய்கிறேன். என் உள்ளம் அழுது வடிகிறது.

"நீங்க ஏதோ வஞ்சம் வச்சப் பழி பேசிறியள்........." கணபதிஜயர் கூறிவிட்டுப் போன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் என் நெஞ்சினுள் பயங்கரமாக எழுந்து ஓலமிடுகின்றன. இரண்டு வருஷங்களாக என்னுடன் பழகியும் கணபதிஜயர் என்னைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா ? அல்லது மகள் மீது வைத்திருக்கிற பாசத்தினுல உண்மையைப் பொய்யாக்க முயலுகிருரா ? இதயம் இரும்பாகிக் கனக்க சாய்வு நாற்காலியை விட்டெழுந்து யன்னலோரம் வருகிறேன். வெளியே மங்கலான இருள் கப்பிக் கிடக்கிறது. வீட்டிலிருந்து பத்துப் பதினைந்து யார் தூரத்தில் சத்திரக் கட்டிடத்திற்கு இப்பால் அக் கட்டிடத்தை அண்டினுற் போலவே நன்கு கிளை பரப்பி நின்ற ஆலமரத்தில் என் பார்வை பதிகிறது. ஆலமரத்தை அடுத்திருந்த நீண்ட குடாவில் அலைகள் எழும்பவில்லை. குடாவில் உள்ள நீர் அமைதியாகக் கிடந்தது. ஆனுல் என் உள்ளக் குடாவில் பயங்கர அலைகள் எழுந்து ஆர்த்தன.

★

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் எனக்குக் கிண்ணியா கிராமத்திற்கு உத்தியோக மாற்றக் கட்டளை கிடைத்த போது, என்ன செய்வது? என்று புரியாத நிலையில் நான் திகைத்துச் செயலிழந்து போனேன். சில ஆண்டுகளாக நான் சொந்த ஊரிலேயே இருந்து உத்தியோகம் செய்து பழக்கப்பட்டு விட்டதன் காரணமாக இந்தத் திடீர் மாற்றம் உண்மையிலேயே எனக்கு அதிர்ச்சிதரக் கூடியதாகவேயிருந்தது. அது மட்டுமல்ல நான் திருமணஞ் செய்து இரண்டாண்டுகள் பூர்த்தியாகியிருந்தன. என்குழந்தை ரதிக்கு அப்பொழுது ஒரு வயது பூர்த்தியாகியிருந்தது. இந்த நிலையில் எப்படி என் குடும்பத்தைக் கூட்டிச் சென்று அறிமுகமில்லாத அந்தக் கிராமத்தில் வாழப் போகிறேன் என்ற எண்ணம்தான் என்

னுள்ளத்தில் மேலோங்கி நின்றது வேலைபாரமெடுப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னமே புறப்பட்டுக் கிண்ணியாவுக்குச் சென்றேன்.

நான் "பாதை" என வழங்கப்படும் இயந்திரப் படகின் மூலம் கிண்ணியாக் கரையில் சென்று இறங்கியதும், இறங்குதுறையையடுத்து விரிந்து பரந்து நின்ற அந்த ஆலமரம் தான் என்னை வரவேற்றது. நீண்டு விரிந்து பள்ளமும் மேடாய்க் கிடந்த அந்தத் தெருவில் எனது நடையை விரித்தேன். திரும்பித் திரும்பிப் பார்த்தேன். எங்கும் புதிய மூகங்கள். எனக்கு அறிமுகமில்லாத இடம். எப்படிச் செல்ல வேண்டும் என்பதையுணர்ந்து கொண்டு செல்வது நல்லது என்பதையுணர்ந்து இறங்குதுறைக்குச் சற்று தூரத்தில் அமைந்திருந்த ஒரு தேநீர்க் கடைக்குள் நுழைந்தேன். தேநீர்க் கடைக்குள் கூட்டம் அதிகம் இல்லையென்றாலும் இரண்டொருவர் உள்ளே போடப்பட்டிருந்த வாங்குகளில் குந்தியிருந்தனர்.

'டீ ஒண்டு போடு' என்றேன் மிக அமைதியாக. பட்டறையில் அமர்ந்திருந்தவர் "அய்யாவுக்கு ஒரு டீ போடடா" என்றார் உரத்த குரலில்.

"பெரியகிண்ணியாப்பள்ளிக் கூடத்திற்கு இன்னும் கன தூரம் போக வேணுமா ?......" நான் பட்டறைக்காரரிடம் மெதுவான குரலில் வினவினேன். அவர் டக்கென்று பதில் சொன்னார்.

"ஓம்... ஒரு கட்டைக்கு மேலே உள்ள போக வேணும்... பள்ளியில ஆரப் பார்க்கப் போறீங்க......"

"ஒருவரையுமில்ல... நான் ஒரு வாத்தியார். அந்தப் பள்ளிக்குத்தான் என்ன மாத்தியிருக்குறுங்க... அதுதான் பள்ளியையும் பாத்துக்கொண்டு வீடும் ஒண்டு பார்த்துக்கொண்டு போவமெண்டு வந்தனன்..."

"வீடு ஒங்களுக்கு வேணுமெண்டா பக்கத்தில இருக்கிற பிள்ளயார் கோவிலுக்குப் பக்கத்தில ஒரு வீடு சும்மாதான் கெடக்கு. போய் கேட்டுப் பாருங்க. ஊருக்க வூடு எடுத்துக் கொள்ள மாட்டீங்க. இதப்போல பெரிய வூடு கெடைக்கா. இது ஒரு தமிழ் ஆள்ர வூடு..."

எனக்கேற்பட்ட சந்தோஷத்திற்கு அளவேயில்லை. இவ்வளவு சீக்கிரம் வீடு கிடைக்குமென்று நான் எண்ணவேயில்லை. தேநீரை வாங்கிக் குடித்துவிட்டுப் பிள்ளையார் கோவிலடிப் பக்கமாக நடையைக் கட்டினேன். நான் பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் இருந்த அந்தப் பெரிய கல் வீட்டையடைந்தபோது மணம் மிகுந்த மல்லிகை மலர்கள் பூத்துக் கிடந்த மல்லிகைப் பந்தல் என்னை வரவேற்றது. அந்த வீடு பழையகாலத்து நாகரீக பாணியில் சமைந்திருந்தது. அந்த வீட்டின் சொந்தக்காரர் "கோழியப்பா" என்னும் கிழவர். அரைக் கோழியப்பா என்றுதான் எல்லோரும் அழைப்பது வழக்கமாம்.

அந்தக் கிழவரின் உதவியுடன் வீட்டைச் சுற்றிப் பார்த்தேன் வீடும் வீடு அமைந்திருந்த சூழலும் என்மனதிற்குப் பிடித்திருந்தது. வீட்டுக்குரிய அட்வான்ஸை எண்ணிக் கொடுத்துவிட்டுக் கிழவரைப் பார்த்துக் கேட்டேன்.

"இந்த அயலுக்க வேற ஏதாவது தமிழ் குடிகளிருக்கா?"

"இல்லாம என்ன தம்பி! புள்ளயார் கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிற வூடு கணபதி ஐயர் வூடு... அதுக்குப்பின்னால் மாமரங்கள் இருக்கிற வளவுக்க உடையார் சிற்றம்பலத்தர்ர வூடு..அதுக்கங்கால பால்காரசின்னத்துரையின்ர வூடு... இப்படிக் கொஞ்சம் கிடக்கு......" நான் கோழியப்பாக் கிழவரிடம் விடைபெற்றுக் கொண்டு மனத்திருப்தியோடு நடந்தேன்.

★

நான் கோழியப்பாக் கிழவருடைய வீட்டுக்கு அடுத்தடுத்த சில தினங்களிலேயே குடிபுகுந்தேன். நான் என்னை ஒரு சைவப் பழம் என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும் கிண்ணியாவிலுள்ள அந்தத் துறையடி வீட்டுக்குச் சென்ற பின்னர் அருகிலுள்ள பிள்ளையார் கோவிலுக்குச் செல்லுவதை வழக்கமாகக் கொள்ள வாரம்பித்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் கணபதிஐயருடன் பழகும் வாய்ப்பும் பரிச்சயமும் ஏற்பட்டது. முதலில் அவராகவே என்னையணுகி விசாரித்துத் தெரிந்து கொண்டரர். கணபதி ஐயர் பார்ப்பதற்குச் சற்று குள்ளமாக இருப்பார். அவருடைய உருவம் குள்ளமாக இருந்ததே தவிர அவருடைய இதயத்தில் அன்பு அதிக ஆழமாக இருந்தது. மேனியெங்கும் பட்டை பட்டையாகத் திருநீறு பூசியிருப்பார். அதிலே தான் அவருக்கு உண்மையான திருப்தி ஏற்படுவதாக அடிக்கடி என்னிடம் சொல்வார், மார்பில் பூணூல் துலங்க, உச்சிக் குடுமியுடன் அவர் பூசை செய்யும் அழகே ஒரு தனியழகுதான். எப்பொழுதும் ஏதாவது ஒரு தேவார திருவாசகத்தையோ, மந்திரத்தையோ உருப்போட்டுக் கொண்டேயிருப்பார்.

கணபதி ஐயரிடம் யான் யாரிடமும் காணுததொரு தெய்வத்தன்மையைக் கண்டேன். அவரிடம் மதிப்பு வளர்ந்தது. அவருடைய மூத்தமகன் ஒரு அப்பாவி. எந்த நேரமும் கம்பராமாயணத்திலோ, சிலப்பதிகாரத்திலோ தன்னை மறந்து மூழ்கியிருப்பார். அந்த அப்பாவி மகனுக்கு ஒரு கலியாணம் செய்து வைத்துப் பார்த்தாராம் ஐயர். ஆனுல் கலியாணம் முடிந்த மறுமாதமே கணவனுடன் வாழப் பிடிக்காத அந்தப் பெண் தகப்பனர் வீடு சென்றுவிட்டாளாம். கணபதி ஐயர் துடித்துப் போனுராம். ஆனுல் மகன் சர்மா எப்போதும் போல் ஏகாந்தத்தில் மூழ்கிவிட்டாராம். அவருடைய மகள் சற்குணம் மட்டும், திருமணமாகாமலிருந்தாள். சற்குணமும், கணபதிஐயரின் மனைவியும்எனது வீட்டுக்குவந்து என மனைவியுட

னும்மகள்ரதியுடனும் பரிச்சயம் வைத்துக்கொண்டனர். இரண்டு குடும்பமுமஒரே குடும்பம்போலப் பழகிவந்தன. நானும் கணபதி ஐயரும் மாலை வேலைகளில் பிள்ளை யார்கோயிலின் எதிரேயிருக்கும் வில்வமரத்தின் நிழலில் அமர்ந்து பேசாத நாட்களே கிடையாது. ரதியும் கணபதிஐயரின் குடும்பத்துடன் நன்கு ஒன்றிப் பழகிவிட்டாள். காலையில் சற்குணம் வீட்டுக்கு வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனுள் என்றுல் இருட்டியபின்தான் என் மனைவி சென்று அவளை வீட்டுக்குக் கூட்டி வருவாள். பருப்புக்கறியும் சோறும் பிசைந்து கணபதி ஐயரின் மனைவி ஊட்டாவிட்டால் அன்று முழுவதும் அவளுக்கு உணவு உள்ளே செல்லாது. இப்படி வெகு ஐக்கியமாகப் பழகிவிட்ட இந்த இரு குடும்பங்களும் இன்று இவ்விதம் பிரியவேண்டி ஏற்பட்டமைக்கு நேற்று நடைபெற்ற சம்பவம்தான் காரணம்.

அந்தச் சம்பவம்......!

நான் நேற்றுச் சாயங்காலம் கணபதி ஐயரின் வீட்டுக்குப் பின்னுலிருக்கும் உடையார் வீட்டுக்கு ஒரு அலுவலாகப்போயிருந்தேன். அலுவலை முடித்துக்கொண்டு வீடு திரும்பும் பொழுது இருள் சூழத் தொடங்கிவிட்டது. பகலின் முடிவும் இரவின் ஆரம்பமும் சந்திக்கும் அருமையான சூழல். நான் அமைதியாக நடந்தேன். கணபதி ஐயரின் வளவின் பின்வேலியையடுத்தாற்போல் செல்லும் ஒழுங்கையைத் தாண்டித்தான் நான் செல்லவேண்டும். யாராவது எதிரே நடந்துவந்தால் அடையாளம் கண்டுபிடிக்கக் கூடிய அளவுக்கு ஒழுங்கைக்குள் இருள் மண்டிக்கிடந்தது.

நான் ஒழுங்கை முனையில் காலடி எடுத்து வைத்தவுடனேயே ஒழுங்கையின் நடுவில் கணபதி ஐயரின் பின் வேலியை ஒட்டினுற்போல் யாரோ ஒரு வெள்ளையுடையணிந்த உருவம் நின்று கொண்டிருப்பது என் கண்களுக்குத் தெரிந்தது யாரது? இந்த நேரத்தில் என்ன செய்கிறுன்?

சற்று விரைந்து நெருங்கிய பொழுது கணபதி ஐயரின் வேலிக்கு அப்பால் ஒழுங்கைக்குள் நின்ற ஆள் நின்ற இடத்திற்கு எதிரே ஒரு தலை தெரிந்தது- நான் அமைதியாக விரைந்து நடந்தேன். என் விழிகளிரண்டும் ஒழுங்கைக்குள் நின்ற ஆள்மீதே பதிந்தது. அடுத்த கணம் நான் திடுக்கிட்டு அதிர்ந்து போனேன். அங்கே நான் கண்ட காட்சி...? காட்சியா அது? வேலிக்கு மேலால் ஒருவர் முகத்தின் மேல் ஒருவர் முகத்தை வைத்து முத்தம்...... சீச்சி...... ''யாரது...?'' என்னை அறியாமலேயே நான் அதட்டினேன். மறுகணம்...! கணபதி ஐயரின் வளவுக்குள் நின்ற அந்த உருவம் என்னை உற்றுப் பார்த்துவிட்டுச் ''சரேலென'' உள்ளே ஓடி மறைந்தது. என் தலையில் யாரோ ஆயிரம் சம்மட்டிகளால் ஒரே வேளையில் அடித்தது

போன்ற வலி. காரணம் கண பதி ஐயரின் வளவுக்குள் நின்று இப்படிக் கேவலமான செயலைச் செய்தது .. கணபதி ஐயரின் ஒரே மகள் சற்குணம். அவள் பெய ரளவில் மட்டும்தான் சற்குண மாக இருந்தாள். ஆனால் நடத் தையில்...?

என் திகைப்பும், பிரமிப்பும் நீங்கும் முன்னே என்னையிடித் துத் தள்ளிக் கொண்டே ஓடி மறைந்தான், ஒழுங்கைக்குள் நின்ற வாலிபன். அவன் பாதை யோட்டும் அப்துல் சலீம். நான் திகைத்துப்போய் அடிபெயர முடியாமல் நின்றேன்.

★

வானத்தில் பூரணைச் சந் திரன் அமைதியாகப் பவனி வந்து கொண்டிருக்கிறான். நான் உணர்வு பெற்று வானத்து முகட் டிலேயே என் பார்வையைப் பதிக்கிறேன். கரு முகில்கள் திரண்டு மூலைக்கு மூலை சிதறி யோடிக் கொண்டிருக்கின்றன. எங்கோ சற்று தூரத்தில் தெரு நாயொன்று ஊளையிட்டலறும் ஒலி கேட்கிறது. நான்? தெளிந் தும் தெளியாத நிலையில்... ஸ்தர மற்ற மன நிலையிலிருக்கிறேன்.

''நான் கண்களால் கண்ட உண்மையை மறைக்காமல் கண பதிஐயரிடம் கூறியது சரியா? தவறு? அதனால் இனி இரு குடும் பங்களும் இணைந்து வாழுமா?'' நான் எதையும் தீர்மானிக்க முடியாமல் குழம்புகிறேன்.

''மணி எட்டாச்சி... பேசாம சாப்பிட வாங்க......'' அடுக்களை அறையிலிருந்து என் மனைவியின் குரல் கேட்கிறது. நான் நடைப் பிணமாக குரல் வந்த திக்கை நோக்கி நடக்கிறேன்.

★

ஒரு மாதம் ஓடி மறைகி றது. கணபதிஐயரின் குடும்பத்தா ருடன் நாங்கள் கொண்டிருந்த இரண்டு வருட உறவு முறிந்து விட்டது. எங்களுடைய வீட்டுப் பக்கமே அவர் அவ்வளவாகத் தலை நீட்டுவதில்லை. கண்டாலும் காணாதவர் மாதிரி நடந்து விடு வார். இந்தப் பகையால் அதிக மாகப் பாதிக்கப்பட்டவள் குழந் தை ரதிதான். ஐயரம்மாவிடம் பருப்புக் கறியும் சோறும் தின் னப் போக வேண்டுமென்று அடிக்கடி அடம் பிடிப்பாள். அந் தச்சமயங்களில் எனக்கு ஆத்திரம் மிகுந்து விட்டால் அவளை அடிப் பதும் உண்டு.

''மெய்யே! கேட்டீங்களே, கணபதி ஐயர்ர மேள் சற்குண மல்லே அந்த பாதை ஓட்டிற ஹைவரோட ஓடிப் பொயிட்டா ளாம்...'' என் மனைவியின் பேச் சைக் கேட்டு அன்று நான் அதிர்ச்சியடையவில்லை. அமைதி யாக இருந்தேன். ஆனால் என் உள்ளம் மட்டும் கணபதிஐயரின் குழந்தைப் பாசத்தை நினைத்து அழுதது.

''கணபதிஐயர் இன்றைக் கென்டாலும் உண்மையை உணர்ந்திருப்பார்...'' நான் மண் டபத்துச் சுவரில் மாட்டப்பட் டிருந்த முருகன் படத்தையே இமைகொட்டாது பார்க்கிறேன்.

★

கடந்த இரண்டு மூன்று நாட்களாக வானம் இருண்டு மப்பும், மந்தாரமாக ஒரே அடை மழை. ஒரே விடாப்பிடியாகக் கொட்டோ கொட்டொன்று கொட்டிக் கொண்டிருக்கிறது. நான் அன்று பாடசாலை விடு முறையாதலால் முன் கூடத்தி னுள் அமர்ந்து அன்றைய தின சரியைப் புரட்டிக் கொண் டிருக்கிறேன். முற்றத்து மல்லிகைப் பந்தலுக்கு அப்பா லிருக்கும் தெருப்படலை "கிரீச்" சென்ற சப்தத்துடன் திறந்து மூடிக்கொள்ளும் ஒலி கேட்கிறது. நான் நிமிர்ந்து கூடத்து வாசலை நோக்குகிறேன். எதிரே...! மழை நீர்த்துளிகள் உடலிலிருந்து நிலத் தில் சொட்டச் சொட்ட, எவ்வித உணர்ச்சியுமின்றி நின்று கொண்டிருக்கிறார் கணபதி ஐயர்.

"என்ன இது உங்களுக்குப் பைத்தியமா என்ன? இப்படியா மழையில் நனைந்து கொண்டு வருவது...?" நான் அதிர்ந்து போய் நிற்கிறேன்.

"எனக்குப்பைத்தியம் பிடிக்க வேணுமென்றுதான் ஆண்டவ னைப் பிரார்த்திக்கிறேன் மாஸ் ரர். பைத்தியம் பிடிச்சா என்ர மனசுக்கு நிம்மதி..."

கணபதி ஐயரின் முகத்தில், பேச்சில் வேதனை களைகட்டியிருக் கிறது.

"கதிரையில இருங்க..." நான் கதிரையொன்றை அவர் அருகில் எடுத்துப் போடுகிறேன்.



"வேணும் மாஸ்ரர். என்ர மேள நான் கோயில்ல இருக்கிற சிலை எண்டுதான் நினைச்சன். ஆனால் தான் கோயில்ல இருக்கிற சிலை இல்ல... அங்க வாசல்ல போட்டிருக்கிற படிக்கல் என்று நிருபிச்சிட்டுப் போட்டா மாஸ் டர். அவள் என்ர மேள் இல்ல மாஸ்ரர். என்ர மானத்தை அறுத்தவள்..." கணபதி ஐயர் சின்னப்பிள்ளைமாதிரி குலுங்கிக் குலுங்கி அழுகிறார். நான் அவரை எப்படித் தேற்றுவது எனத்தெரி யாமல் திகைத்துப்போய் நிற்கி றேன்.

"என்ன மன்னிச்சுப்போடுங்க மாஸ்ரர்..." அதற்கு மேலும் கணபதி ஐயர் அங்கே நிற்க வில்லை. தெருப்படலை மூடிக் கொள்ளும் ஒலி கேட்கிறது.

★

பொழுது புலர்கிறது.

"எல்லாரும் ஐயர் வீட்டதான் ஓடிப்போறுங்க... உங்களுக்கு விஷயம் தெரியுமா...? என்னை வந்து உசுப்புகிறாள். "ஐயர் வீட்டில என்ன?"... நான் திடுக் கிட்டு எழும்புகிறேன். "ராத்திரி கோயிலுக்க படுத்துக்கிடந்த ஐயர் செத்துப்போய்க் கிடக்கி றாராம்..." நான் அதிர்ந்துபோய் என்மனைவியின் முகத்தையே ஏறிட்டு நோக்குகிறேன். அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் தேங்கிச் சிரிக்கின்றன. முன் கூடத்துச் சுவரில் மாட்டப்பட் டிருந்த முருகன் படமும் சேர்ந்து சிரிப்பது போன்றதொரு பிரமை என்னுள்.

# நோக்கு


திருக்கோணமலைக் கவிராயர்

தாக்குதலே நோக்கு—பெருந்
தாக்குதலே போக்கு
குற்றமுற்ற மற்றவர்முன்

கற்றவித்தை கட்டவிழ்ந்து
உற்றவர் மதித்து வெற்றி
இத்தரை முழங்குமட்டும்
தாக்குதலே நோக்கு – பெருந்
தாக்குதலே போக்கு

சாதி பேசும்பேய்கள் தம்மின்
சந்ததி எரித்து, ஔவை
ஓதி நின்றநீதி கூறி
ஒருமை காணப் பொருதுமட்டும்

தாக்குதலே நோக்கு—பெருந்
தாக்குதலே போக்கு.




(முன்கதைச் சுருக்கம் :

ஒரு நாள் இரவு யாழ்ப்பாண மன்னர் பரராசசேகரரின் இளைய மைந்தன் சங்கிலிகுமாரனும், அவனது நண்பன் கனகராயனும் பெண்ணைக் கடற்கரையில் வெகு நேரம் அளவளாவிவிட்டு நல்லூர் அரண்மனைக்கு வருகின்றனர். வழியில் சேனாதிபதி சம்பகமாதக்கர் மூலம் வீர பண்டாரம் எனும் பட்டத்திளவரசன் கொலையுண்ட செய்தி தெரிய வருகிறது. மகன் இறந்த துயரால் பட்டத்தரசியும் இறக்கிறார். அப்பாமுதலி ஒரு மந்திரி; உதயவல்லி அவரின் மகள்; சங்கிலியின் காதலி. உதயவல்லியும் சங்கிலியும் சந்தித்து மகிழும்போது கனகராயன் வந்து, கண்டி சென்ற சங்கிலியின் தமையனார் பரநிருபசிங்கர் திரும்பிவிட்ட செய்தியைக் கூறுகிறான். பின் —)

பரநிருபசிங்கருக்கு ஏழூரதிபன் எனவும், ஏழூராசன் எனவும் ஒரு பட்டப் பெயர் இருந்தது. பரராசசேகரர் சிங்கபாகு நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்ட பின், வீரபண்டாரத்திற்குப் பட்டத்திளவரசர் பட்டம் வழங்கியபோது, பரநிருபசிங்கனுக்கு மருத்துபாமலை வனம் இருந்த கள்ளியங்காடு, சண்டிருப்பாய், அராலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய், மல்லாகம் எனும் ஏழு ஊர்களையும் தாமிரசாசனஞ் செய்து கொடுத்ததோடு, அவ்வேழூரதிபனுகப் பரநிருபசிங்கரை நியமித்தார். அன்றிலிருந்து பரநிருபசிங்கர் 'ஏழூரதிபன்' எனக் கௌரவிக்கப்பட்டு வருவதைச் சங்கிலிகுமாரன் அறிவாஞதலால், 'ஏழூரதிபர் பரநிருப சிங்கர்' எனக் கனகராயன் கூறியிருந்தால் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டான். ஆனுல், 'ஏழூரதிபர் பரநிருபசிங்க வைத்திய ராசேந்திரர்' எனக் கூறியது அவனுக்கு ஆச்சரியத்தை அளித்ததால், "யார் அந்த வைத்திய ராசேந்திரர்?" எனக் கேட்டான்.

கனகராயன் நகைத்தது, சங்கிலிக்குக் கேட்கவில்லை.

"யாராலும் தீர்க்க முடியாதிருந்த கண்டி ராணியின் நோயைத் தீர்த்துக் குணப்படுத்தியமைக்காகக் கண்டி மன்னர் விக்கிரமபாகு, யானைகளையும், இரத்தினச் சிவிகைகளையும், பொன்னையும் கொடுத்ததோடு, அரசசபையிலே வைத்து, 'வைத்திய ராசேந்திரர்' எனவும் பட்டமளித்துக் கௌரவித்தாராம்..."

"இராசேந்திரர் என்பது...... ?"

"ஆமாம், நீங்கள் நினைப்பது போலவேதான்! சோழ மன்னர்களிலே கீர்த்தியும் வலியும் படைத்தவன் இராஜராஜ சோழனின் மைந்தன் இராஜேந்திர சோழனுவான்... அவன் சாம்ராச்சியம் கடல் கடந்து விரிந்தது! மன்னர்களையெல்லாம் வென்று – பொரு விறலோகை இருந்தவன் இராசேந்திரன்! அது போல வைத்தியர்களை எல்லாம் வென்று பெரு வைத்தியராக இருப்பவர் பரநிருபசிங்கர்..."

"அதனுல், வைத்தியராசேந்திரர் எனக் கௌரவிக்கப்பட்டாரோ?"

குதிரைகள் இரண்டும் அரண்மனை வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தன.

"கனகராயா!" என மெல்ல அழைத்த சங்கிலிகுமாரன், "நீ ஒரு தவறு செய்து விட்டாய்?" என்றுன்.

"என்ன, கூறுகிறீர்கள் ?" என்று பதறிப்போன கனகராயன் கலக்கத்தோடு கேட்டான்.

"ஏழூரதிபர் என்று சொன்னுயல்லவா ?"

"ஆமாம், அதிலென்ன தவறு"

"தவறுதான்! யாழ்ப்பாண அரசின் அடுத்த மன்னரை – பட்டத்திளவரசரை-நீ ஏழூரதிபர் எனக் கூறலாமா? 'பட்டத்திளவரசர் பரநிருபசிங்க வைத்திய ராசேந்திரர்' என்று கூறியிருக்க வேண்டும்..."

பரநிருபசிங்கருக்குக் கண்டி மன்னனுல் அளிக்கப்புட்ட பட்டத்தைச் சங்கிலிகுமாரன் விரும்பவில்லை என்பதை அவன் பேச்சில் கலந்துற வாடிய கேலியிலிருந்து புரிந்து கொண்ட கனகராயன், பேசாது மௌனமானுன்.

அரண்மனைக்குள் குதிரைகள் நுழைந்த போது, தற்செயலாக வானத்தை நிமிர்ந்து பார்த்தான், சங்கிலி.

தூமகேதுவின் வால் சற்று நீண்டிருநதது.



## 6

## காக்கை வன்னியன்

மன்னரின் மாளிகை அமைதியாக விளங்கியது. புகாரில் தோய்ந்து அமைதியின் ஆழ் மடியில் அரண்மனை உறங்கிக் கிடந்தது. கடந்த திங்களில் நிகழ்ந்து போன சம்பவங்களை எல்லாம் அறவே மறந்து போனதுபோல அரண்மனை பழைய கோலம் களையாது நின்றது.

சங்கிலிகுமாரன் மன்னரின் மாளிகை வாசலில் நின்றபடி வடக்கே கண்களை மேயவிட்டான். தூரத்தில் நிர்ச்சலனமான நீர்ப்பளிங்காக பரிவட்ட நிலவைப் பிரதிபலித்தபடி யமுனை ஏரி தெரிந்தது.

அரசமாளிகை வாசலில் அவன் ஏறியபோது, வாயிற் காவலர் வணங்கி வழிவிட்டனர். மாளிகையின் உள்ளே அவன் கால்கள் விரைந்தபோது, மனதில் ஒரேயொரு வினு எழுந்து நின்றது:

'இப்போது சற்று முன்னர்தான் அண்ணர் வந்தார். வந்தவுடன் அப்படி அவசரமாகப் பேசும்படியான விடயமென்ன ? தந்தையேன் உடனடியாக அவரை அழைப்பித்தார்?'

மன்னரின் படுக்கை அறையை நோக்கிச் சென்ற சங்கிலி திடுக்கிட்டு நின்முன்.

பரராசசேகரரின் படுக்கை மண்டபத்தில் இருந்து வள்ளியம்மை தேவியாரின் குரலில் சிறிது கலக்கத்தோடும், பதற்றத்தோடும் அவனது காதுகளில் 'கணீர்' என விழுந்தது.

''சங்கிலியா...? என்னுல் நம்ப முடியவில்லையே...? இது என்ன வீண்பழி?''

சங்கிலிகுமாரனின் தலைமீது இவ்வார்த்தைகள் பாரிய மலைக் குன்றுகளாக இறங்கின. வார்த்தைகளின் தாக்கத்தால் திக்பிரமை அடைந்துபோன அவன், சிறிது தெளிந்து, மண்டபத் தூணென்றின் பின்னுல் மறைந்து நின்று கொண்டான்.

அவர்கள் முன் தான் வெளிப்படுவது நன்றன்று என்பதை அவன் உணர்ந்து கொண்டான். அவர்களது பேச்சின் போக்கே தன்னைப் பற்றியதாக இருக்கும்போது, அவனது வருகை அவர்களுக்கு இடைஞ்சலாக அமையலாம்.

அரசர் பரராசசேகரர் மலர் மஞ்சத்தில் சாய்ந்திருந்தார்; வள்ளியம்மை தேவியார் மன்னரது காலடியில் அமர்ந்திருந்தார்; அரசரின் மஞ்சத்தை அடுத்துக் காணப்பட்ட ஆசனமொன்றில் பரநிருப சிங்கர் இருந்தார்.

ஏழூரதிபனின் முதுகுப்புறத்தை மட்டுமே சங்கிலிகுமாரனால் கவனிக்க முடிந்தது; அவன் மனதில் காரணமில்லாத, சஞ்சலங்கள் எழுந்து கொண்டிருந்தன.

''அம்மா! வீண் பழிகளைச் சங்கிலிமேல் ஏன் சுமத்த வேண்டும். தம்பிமேல் சுமத்தப்பட்டுள்ள இத்தப்பான கருத்துக்கள் பொய்யானவையாக இருக்கவேண்டும் என்பதே என் விருப்பம்...''

'பழி, பழி... என்மேல் என்ன பழிகளைக் கண்டீர்கள்' எனக் கேட்கத்துடித்த சங்கிலி குமாரனை, பரராசசேகரர் பேசியவை அமைதி கொள்ளச் செய்தன.

''பரநிருபா, இரு மைந்தர்களையும் உன் பெரிய தாயாரையும் இழந்துவிட்டதனால் கண்களை இழந்தவளைப் போலப் பரதவிக்கின்றேன் அமைதியாக இராச்சியத்தைப் பரிபாலிக்க வேண்டுமென்ற ஆசை சதி, கொலை, சூழ்ச்சி என்பனவற்றினால் மண்ணோடு மண்ணாகி விட்டன...'' அரசரின் குரல் கம்மியதையும், கண்களில் இருந்து விழிநீர் சுரந்ததையும், சங்கிலி கனிவத்தான். அவன் கண்களும் கலங்கின.

மன்னர் தொடர்வார்: ''பரநிருபா, நடந்தவற்றை விபரமாகக் கூறு!''

சங்கிலிகுமாரன் காதுகளைத் தீட்டிக்கொண்டான். பரநிருபசிங்கர் எதுவும் பேசாது மௌனம் சாதிப்பதைக் கண்ட பரராச சேகரர் திரும்பவும் பேசுவார்:

''பரநிருபா, கண்டியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த உன்னை முல்லைத்தீவில் அரசமரியாதைகளோடு வன்னியர்கள்வரவேற்றார்கள்...''

''வன்னியர்களின் தலைவனான காக்கை வன்னியனும் அவன் சுற்றமும் என்னையும் என்பரிவாரத்தினரையும் வரவேற்றனர். அவர்களோடு முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு வன்னியர்களும் காணப்பட்டனர்... அவர்களுடைய வரவேற்பை ஏற்க நான் முதலில் பிரியப்படவில்லை. எனினும் விருந்தினனாக வரவேற்கும்போது மறுப்பது அழகல்ல என்று வரவேற்பை ஏற்று காக்கை வன்னியனின் மாளிகைக்குச் சென்றேன்...''

மாலைப் பொழுது பரநிருபசிங்கருக்கு மிகுந்த கசப்பையே தந்தது. காக்கை வன்னியனின் எழிலார்ந்த மாளிகையின் நிலா முற்றத்தில் நின்று கொண்டு, கிழக்கே அமைதியாக முடங்கிக்கிடந்த குடாக் கடலை நோக்கும்போது அவருக்கு ஏனோ வெறுப்பே மேலோங்கியது. சற்று விலகி நின்றிருந்த திடகாத்திரமான ஒரு புருஷன், தொண்டையை மெதுவாகக்கனைத்தான். முறுக்கேறிய தசைநார்கள் அவனுடலின் வலிமையைப் பறைசாற்றின; கருமையான அவனுடலில் மதயானையொன்றின் மிடுக்கு இருந்தது.

''இளவரசே...'' என அவன் அழைத்தான்.

பரநிருபசிங்கர் அவனை நோக்கித்திரும்பினார்.

''இந்த புல்லைத்தீவுக் குடாக்கடலைப் பார்த்தீர்களா?''

பரநிருப சிங்கருக்கு எரிச்சலே மூண்டது.

''அதற்கு என்ன, காக்கைவன்னியரே?''

இளவரசரின் குரலில் இழையோடிய பாவத்தைக் காக்கை வன்னியன் உணர்ந்து கொண்டபோதிலும், முகத்திலோ குரலிலோ மாறுதல் தோன்றாது பேசுவான்:

''இக் கடலுக்கு நந்திக்கடல் என்று பெயர்! நந்தி போன்று மிகவும் அமைதியான கடல்... குமுறலற்ற கடல்... ஆனால், சில காலங்களில் வெறி கொண்டது போல குமுறத் தொடங்கும்... அக் காலங்களில் இம் மாளிகையின் அடித்தளம் வரை கடலலைகள் தவழ்வதுண்டு...''

நந்திக்கடலைப் பரநிருபசிங்கர் வெறித்துப் பார்த்தார். காக்கை வன்னியன் இதனை எதற்காகக் கூறுகின்றான்?

பரநிருபசிங்கர் மௌனமாக இருப்பதைக் கண்ட காக்கை வன்னியன் தொடர்வான்:

''எங்களது வரவேற்புத் தங்களுக்குப் பிடிக்கவில்லையா, இளவரசே? சிங்கபாகுவின் மரணத்திற்குப் பிறகு யாழ்ப்பாணவரசு ஏனோ வன்னியர்கள் மீது துவேஷம் பாராட்டுகிறது......''

''வேறு எப்படி இருக்க முடியும்...? எனது தமையனாரின் மரணத்திற்குக் காரணமானவர்கள் வன்னியர்களாக இருக்கும்போது? காக்கை வன்னியரே, பக்கத்து அரசினை நேசிக்கத் தெரியாத, உங்களது வரவேற்பு எனக்குத் திருப்தியைத் தரும் என எதிர்பார்க்கிறீர்களா?...''

காக்கை வன்னியனின் கண்கள் வேதனையைக் கொட்டுவன போல மாறியதை பரநிருபர் கவனித்தார்.

''இளவரசே, உங்கள் தமையனார் இருவரும் வன்னியர்களின் சதிக்கே பலியானார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி... ?''

''நீங்கள் எங்களுக்கு உரிமையான நெடுந்தீவு போன்ற தீவுகளிலுள்ள மாடுகளை இரகசியமாகக் கொள்ளையிட்டீர்கள்! எங்களைப் பகைத்துக் கொண்டீர்கள்!.........'

''அது உண்மைதான்! அதற்காக மன்னிப்புக் கேட்கவும் தயாராக இருக்கின்றேன்! அந்த ஒரு அற்பக் காரணத்தைக் கொண்டு எங்களைக் குற்றவாளிகளாக்க முடியுமா ?......''

பரநிருபசிங்கர், காக்கை வன்னியனைப் பார்த்து இகழ்ச்சியாக நகைத்தார்.

''எனது தமையனுர் சிங்கபாகு உணவிலே விஷம் கலக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். உணவிலே விஷம் கலந்ததாகத் தண்டிக்கப்பட்டவன், சமையல் ஆளாக இருந்த ஒரு வன்னியன்! அவன் உங்களின் தூண்டுதலினுல் அதைச்செய்ததாக ஒப்புக் கொண்டிருக்கின்ருன் இதை விடவா அத்தாட்சி வேண்டும்...?''

''இரண்டாவது இளவரசரின் மரணத்திற்கும் நாங்கள் காரணமா?...''

''முதல்வரைக் கொல்வித்த நீங்கள் அதற்கும் ஏன் காரணமாக இருக்கக் கூடாது?''

வன்னியர் தலைவன் மௌனமாஞன்; அவன் கண்கள் நந்திக்கடலை வெறிக்கப் பார்த்தன. மீனவர்கள் கடலிற்குச் செல்லப் படகுகளை ஆயத்தப்படுத்துவது நிழலாகத் தெரிந்தது. திரும்பி, ஒரு கணம் பரநிருபசிங்கரை ஏறிட்டுப் பார்த்தான்:

''உங்கள் சகோதரர்களின் மரணத்தினுல் எங்களுக்கு என்ன பயன், இளவரசே?''

பரராசசேகரன் மைந்தன் பதில் எதுவும் கூருது வன்னியர் கோனை நிமிர்ந்து பார்த்தான். காக்கை வன்னியன் தனது விழிகளைத் திருப்பி, நிலாமுற்றத்தில் சிறு நடை பயின்றபடி கூறுவான்:

''உங்கள் சகோதரர்களின் மரணத்தினுல் பயனடைந்திருப்பவர்கள் நீங்கள்! அப்பயனை அடைய நீங்களேன் இக்காரியங்களைச் செய்திருக்கக் கூடாது?''

வெறியோடு வீறிட்டார் பரநிருபசிங்கர்:

காக்கைவன்னியரே, என்ன கூறுகிறீர்? மன்னஞவதற்காகநான்என் கூடப்பிறந்த சகோதரர்களைக் கொன்றேஞ?'' இளவரசனின் உடல் மெதுவாக நடுங்கியது. காக்கை வன்னியன் விரைந்து வந்து பரநிருபரின் கரங்களைப்பற்றி ஆறுதல் கூறினுன்.

''நோய்களைத் தீர்க்கின்ற கை இது. நிச்சயமாக இது கொலை வாள் ஏந்தாது! உங்களை ஒரு போதும் நான் குற்றவாளியாகக் கருத மாட்டேன் .. அவ்வாருயினும் நீதி வழங்குவதற்கு நான் யார்? இளவரசே, இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காகத் தந்தையைக் கொன்று தமையனையும் கொல்ல முயன்ற காசியப்பன் இங்கேதான் வாழ்ந்திருக்கின்ருன்! நான் கூறப்போவதை நீங்கள் நம்புவீர்களோ, நம்ப மாட்டீர்களோ... எனக்குத் தெரியாது! அரசுக்குரியவர்களைக் கொன்று

விட்டு இராச்சியத்தைக் கைப்பற்ற உங்கள் அரசில் சிலர் முயல்வதை நானறிவேன்...''

பரநிருபசிங்கர் குறுக்கிட்டார்.

''உங்கள் மீதுள்ள பழியை மறைக்க வேறு சிலர் மீது பழி சுமத்துகிறீரா?''

''இல்லை, இளவரசே! உண்மைக் குற்றவாளி யாரோ இருக்க எம் மீது பழி சுமத்துவது நீங்கள்தான்!...''

''உண்மைக் குற்றவாளி யார்?...''

''உங்கள் தம்பி...'' என்றான், வன்னியர் தலைவன் அமைதியாக.

தூண் மறைவிலிருந்து இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த சங்கிலிகுமாரன் பேய் அறைந்தவன் போலானான். அவன் உடல் ஆவேசத்தால் நடுங்கியது.

''பரநிருபா, நீ அதை நம்புகிறாயா?'' என மன்னர் பரராசசேகரர் வேதனையோடு கேட்டார்.

''இல்லை ஐயா, என் தம்பியை அவ்வாறெல்லாம் தவறாக எண்ண என்னால் முடியாது! ஏதேதோ நடக்கக் கூடாததெல்லாம் நடக்கின்றன.''

''உண்மைதான், பரநிருபா! இராச்சியத்தைக் கவரும் நோக்கோடு யாழ்ப்பாணவரசிலேயே யாரோ சதி செய்கின்றார்கள்... பரநிருபா, என் சொல்லைக் கேட்பாயல்லவா?''

''தந்தையே, இது என்ன பேச்சு! கட்டளையிடுங்கள்...... நிறைவேற்றுகின்றேன்.........''

''பரநிருபா, எனது ஈமக்கடன்களைச் செய்ய நீயாவது உயிருடன் இருக்கவேண்டும் என விரும்புகின்றேன்... ஆதலால்...''

காதுகளைப் பொத்திக்கொண்ட வள்ளியம்மை தேவியார், ''இது என்ன பேச்சு?'' என்று பதற, பரநிருபசிங்கர், ''ஏன் இவ்வாறெல்லாம் பேசுகிறீர்கள்?'' எனத் தந்தையின் கரங்களைப் பற்றிக்கொண்டார்.

மன்னர் நிமிர்ந்தமர்ந்து கொண்டார்; பரநிருபரை அவரது விழிகள் வெகு நேரம் ஏறிட்டு நோக்கின.

'பரநிருபா...'

''ஐயா, நீங்கள் எதை விரும்பினாலும் தயங்காது கேளுங்கள்...... நான் நிச்சயமாகச் செய்வேன்!''

சங்கிலிகுமாரனது இதயத்திலே பெருங் கடல்கள் ஒருங்கு சேர்ந்து பிரளய காலக் குமுறலாகக் குமுறின; தூணை இறுகப் பற்றியபடி அவன் நின்றான். அவற்றின் இடையே பரராசசேகரர், பரநிருபசிங்கரிடம் யாசிப்பது போலக் கேட்டுக் கொண்டது, அவன் மூளையில் பலமாகச் சென்று உதைத்ததால், ஒரு கணம் கற்சிலை போலுமானான்.

(தொடரும்)

*Registered at the G. P. O. as a Newspaper in Ceylon*


இதோ

அட்சர
கேத்திர } **கணிதம்**

கற்பதற்கு

**படிமுறை** { அட்சர கணிதம்
கேத்திர கணிதம்

வெளிவந்துள்ளன

6, 7, 8 ஆம் வகுப்புகளுக்கு

**தனித்தனி நூல்கள்**

விபரங்களுக்கு :

ஆசீர்வாதம் அச்சகம் சக புத்தகசாலை

**32, கண்டி வீதி,**

**யாழ்ப்பாணம்.**

(தொலை பேசி : 274)


இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம் 32, கண்டிவீதியிலுள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் 20-4-67 இல் பதிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.